பக்கங்கள்: பதின்நான்கு

NOT FOR SALE

Registered as a Newspaper

PERSONAL CLASSES
B.M.C. FRONT LANE
JAFFNA

A/L 89, 90 & 91
வகுப்புகள்
நடைபெறுகின்றன.

P... சத்தியசீலன்
C... மதுரமணி
... சர்வானந்தா
... ஈஸ்வரதாசன்
PURE. APP. } விஜயகுமார்

6

# உதயன்

விலை ரூ2/50

A/L 91
பிரிவு II
ஆரம்பமாகவுள்ளது

A/L 89

மாணவர்களுக்கு வகுப்புகள் ஆரம்பமானதும் பயிற்சிப் பரீட்சைகள் நடைபெறும்.

PERSONAL CLASSES
B. M. C FRONT LANE.
JAFFNA.

சுடர்: 4 சுக்கில வருடம் ஆடி மீ 17 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1409 துல்ஹஜ் பிறை 28 (01 - 08 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:- 204

# இலங்கை இந்திய பேசசுகளில் முட்டுக்கட்டை நிலை!

# படைவிலகல் குறித்து இணக்கமில்லை!!

## இறுதி நேரத்தில் திருப்பம் ஏற்படுமா?

புதுடில்லி ஆகஸ்ட் 1

புதுடில்லியில் நடைபெறும் இலங்கை இந்திய பிரதிநிதிகள் குழுக்களிடையேயான பேச்சுக்களில் முட்டுக்கட்டை நிலை ஏற்பட்டிருப்பதாக நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.

இதுவரை நடந்த பேச்சுக்கள் இந்திய அமைதிப்படை விலகல் பற்றிய கால அட்டவணை ஒன்றைத் தயாரிக்கும் நிலைக்கு முன்னேற்றம் அடையவில்லை என்று புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கைப் பிரதிநிதிகள் குழு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை நேற்றுமாலை சந்தித்துப் பேசியது. இந்த சந்திப்பை அடுத்தே புதுடில்லிப் பேச்சுக்களில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நீங்குமா? தொடர்ந்து பேச்சுக்கள் நடைபெறுமா? என்பது தெரியவரும் என்று கூறப்பட்டது.

இதேவேளை புதுடில்லியில் இருந்து நேற்றுப் பிற்பகல் கொழும்பு திரும்பவிருந்த இலங்கை அரசுத் தூதுக்குழு தனது பயணத்தைத் தாமதப்படுத்தியிருப்பதாக பி.பி.சி. நேற்று இரவு அறிவித்தது.

பிரதமர் ராஜீவ் காந்தியுடனான பேச்சுக்களைப் பொறுத்தே இலங்கைக் குழு தாயகம் திரும்புவது குறித்துஇறுதி முடிவு எடுக்கும் எனத் தெரிய வந்தது.

பிரதமர் ராஜீவ் காந்தியுடனான சந்திப்பு இறுதி நேரத் திருப்பம் எதனையும் ஏற்படுத்தலாம் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

### நேற்றைய பேச்சுக்கள்

★ வடக்கு-கிழக்கு மாகாணத் தமிழரின் பாதுகாப்பு, பந்தோபஸ்து ஆகியவற்றை உறுதிப்படுத்த தமிழர் பொலிஸ்படை அமைக்கப்படுதல்.

★ அதிகாரப்பரவலாக்கலை முழுமையாக அமுல் நடத்துதல் ஆகியவை முடியும்வரை அமைதிப்படையை வாபஸ் பெற முடியாது ஆகிய இரண்டு விடயங்களையும் இந்தியக்குழு நேற்றைய பேச்சுக்களின்போது வலியுறுத்தியது.

★ அமைதிப்படை முழுவதையும் விலக்கும் கால அட்டவணையை உடனே தயாரிக்க வேண்டும்.

★ அமைதிப்படை விலகலுக்கு இறுதித் திகதி ஒன்றை நிர்ணயிக்க வேண்டும். -இந்த இரண்டு அம்சங்களையும் இலங்கைக் குழு நேற்றைய பேச்சுக்களின்போது முன் வைத்தது. என்றும் அதை இந்தியா ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜே

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அடம்பன் முகாம் தாக்குதல்; ஷெல்லடியில் சிலர் காயம்

மன்னார், ஆக. 1

மன்னார், அடம்பன் படை முகாம் ஒன்றின் மீது நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தாக்குதல் நடத்தப்பட்டது.

இதை அடுத்து பலத்த ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் இப்பகுதியைச் சூழவுள்ள ஐநூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

திருக்கேதீஸ்வரத்தில் 300 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் ஆயிரத்து 500பேர் மடங்களில் தங்கியுள்ளனர்.

ஷெல் தாக்குதலுக்கு இலக்கான காயாம்பு என்பவர் திருக்கேதீஸ்வரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஷெல் தாக்குதலுக்கு இலக்கான தமதுமகள் அந்த இடத்திலேயே மரணமானதாக திரு. காயாம்பு தெரிவித்தார்.

தாமரைக் குளத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை (வயது 60) என்பவரும் பலியானதாகக் கூறப்பட்டது. மேலும் உயிரிழப்புக்கள் இருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த மூவர் யாழ்,

(6-ஆம் பக்கம் பார்க்க)

## புத்தூர் மோதலையடுத்து மூன்று பேர் சூட்டுக்குப்பலி!

அச்சுவேலி, ஆக 1

புத்தூரில் நேற்றுமுன்தினம் மாலை மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. இதனையடுத்து அப்பகுதியில் மூன்று பொதுமக்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தனர்.

புத்தூர் மேற்கு வேம்பிராய் கிராமத்தைச் சேர்ந்த மூவர் அவர்களின் வீடுகளுக்கு அருகில் வைத்து துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகினர். அவர்களில் இருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். ஒருவர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான பொன்னன் தருமன் (காசிப்பிள்ளை)— (வயது

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நவிண்டிலில் தாக்குதல்; பரவலாக ஷெல்லடி!

நவிண்டில் முகாம் மீது நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இப்பகுதியில் இருந்து ஏவப்பட்டதாகக் கூறப்படும் ஷெல்களில் ஒன்று வல்வெட்டித்துறையில் விழ்ந்து வெடித்தது.


இதில் ஏ. அருணாசலம் (வயது 69) என்ற வயோதிபர் காயமடைந்தார்.

ஷெல் தாக்குதல் காரணமாக நவிண்டிலில் உள்ள கந்தையா தர்மலிங்கம், தம்பு அரசலிங்கம் ஆகியோரது வீடுகள் சேதமடைந்தன.

ஷெல்கள் வலவையில் குடியேற்றம், நெடியகாடு, ஊறணி போன்ற இடங்களிலும் வீழ்ந்து வெடித்தன.

இதேதினம் இரவு 8-00 மணியளவில் பருத்தித்துறை, யாக்கரை மண்டான், நவிண்டில், நெலலியடி போன்ற முகாம்களும் தாக்குதலுக்குள்ளானதாகவும், அதை அடுத்து முகாம்களிலிருந்து ஷெல் ஏவப்பட்டதாகவும் கூறப்பட்டது. (ஓ-160)

## இலங்கை வங்கியின் பொன்விழா



இலங்கை வங்கி இன்று பொன்விழாக் காணுகிறது. அது தனது ஐம்பது ஆண்டு முதிர்ச்சியில் மக்கள் நலன் நாடிப் பல நன்மைகளைச் செய்தது அவற்றை நினைத்து தனக்கும் என்னென்ன உதவிகளைச் செய்யுமோ என மனதில் கனவு காண்கிறாள் இந்த ஐந்து வயதுச் சிறுமி; மலரும் இளம் மொட்டு.

தனது கனவுகளை நனவாக்க இலங்கை வங்கி உழைத்திடும் என்ற நம்பிக்கை தளிர்க்க நிற்கிறாள் இந்தச் சிறுமி.

இலங்கை வங்கியின் ஐம்பதாண்டு நிறைவை முன்னிட்டு எட்டுப் பக்கச் சிறப்பிதழ், இன்றைய உதயனின் அனுபந்தமாக இணைக்கப்பட்டுள்ளது.

(படம்:- ஜெயம்)

## இளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற அசம்பாவிதம்

### 4 இளைஞர்கள் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஆக. 1

கிளிநொச்சி, கரடிப்போக்குச் சந்தியில் நேற்றுக்காலை 6-30 மணியளவில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது

இரு இளைஞர் குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற இம் மோதலின்போது ஒரு தரப்பைச் சேர்ந்த நான்கு இளைஞர்கள் மரணமானதாகக் கூறப்பட்டது.

இச்சம்பவத்தை அடுத்து கண்டி வீதிப் போக்குவரத்து தடைப்பட்டது. நண்பகல் 11 மணியளவில் நிலைமை வழமைக்குத் திரும்பியது

இதேவேளை கிளிநொச்சி நகரில் சில கடைகள் தீக்கிரையாகின. (ஓ-9-10)

## முச்சந்தி முரளி



எலக்ஷன் நடக்கப போகுது எண்டவுடனே ராஜினாமாவும் தொடங்கிட்டுது கண்டியளே......!

## கொக்குவில் இளைஞர் சூட்டுக்குப் பலியானார்

கொக்குவில், கேணியடிப் பகுதியில் நேற்று முன்தினம் இளைஞர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

உயிரிழந்தவர் கொக்குவிலைச் சேர்ந்த சுப்பிரமணியம் நாகேஸ்வரன் (வயது 18) என்பவராவார். இவர் தச்சுவேலை செய்பவர் எனச் சொல்லப்பட்டது.

படையினரைக் கண்டு ஓடிய போதே இவர் சுடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவரது சடலம் நேற்று படையினரால் யாழ் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. (ஓ-10)

## செய்திச் சாரம்

### சாவகச்சேரி விபத்தில் இருவர் மரணம்

யாழ்ப்பாணம், ஆக 1

சாவகச்சேரி நகரில் கண்டி வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பஸ் - சைக்கிள் விபத்து ஒன்றில் சைக்கிளில் சென்ற இருவர் பலியானார்கள்

கொடிகாமத்தைச் சேர்ந்த எஸ். வல்லிபுரம் (வயது 54) சாவகச்சேரியைச் சேர்ந்த பி. ஜெயசீலன் (வயது 23) ஆகிய இருவருமே மரணமானவர்கள் ஆவர்.

ஜெயசீலன் பலத்த காயங்களுடன் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு அங்கு மரணமானார். (இ-10)

### பொற்பதியில் கிரனேட்வீச்சு

கொக்குவில், ஆக 1

கொக்குவில், பொற்பதி வீதிப்பகுதியில் நேற்று மாலை கிரனேட் வீச்சுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

கிரனேட் வீச்சை அடுத்து சரமாரியான துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. இதனால் இப்பகுதியில் பதற்றம் நிலவியது.

மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம் பெயர்ந்தனர். (ஓ-69)

### தண்ணீரூற்றில் ஷெல் வீச்சு

முல்லைத்தீவு ஆக 1

தண்ணீரூற்றில் கடந்த 29 ஆம் திகதி நடந்த மோதலை அடுத்து தொடர்ச்சியான ஷெல் வீச்சு இடம் பெற்றது.

இதனால் இருவீடுகள் பலத்த சேதத்திற்குள்ளாயின. (த-92)

### நுணாவிலிலும் மோதல்

யாழ்ப்பாணம், ஆக 1

நேற்று நுணாவில் பகுதியிலும் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றிருக்கிறது.

ஷெல் வீச்சுக்களும் துப்பாக்கிப் பிரயோகங்களும் சம்பவம் நடந்த இடத்தை சுற்றி மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

### வடபகுதி ரயில் சேவை

வடபகுதிக்கான வாரஇறுதி ரயில் சேவை அடுத்த வாரம் முதல் வழமைக்குத் திரும்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அண்மையில் ரயில் யாழ்

(6-ஆம் பக்கம் பார்க்க)

### ராணுவ ஜீப் மீது தாக்கு; ஐவர் பலி

கொழும்பு, ஆக. 1

யாத்தளை மாவட்டத்தில் ஜே. வி. பி. தீவிரவாதிகள் இராணுவ ஜீப் ஒன்றின் மீது நடத்திய தாக்குதலில் ஒரு சிப்பாயும் இரு ஊர்காவல் படையினரும் இரண்டு பொது மக்களுமாக ஐவர் கொல்லப்பட்டனர்.

தெற்கு மற்றும் மத்திய மாகாணங்களில் ஏற்பட்ட கடும் மோதல்களில் பொது மக்கள் 6 பேரும் ஜே. வி. பி தீவிரவாதி ஒருவரும் உயிரிழந்தனர். (ஓ-எ)

### வீரேந்திரசிங் இராஜினாமா

புதுடில்லி, ஆக. 1

முன்னாள் மத்திய அமைச்சரும் இந்திராகாங்கிரஸ் எம் பியுமான திரு. வீரேந்திர சிங் இந்திரா காங்கிரஸ் கட்சியிலிருந்து இராஜினாமாச் செய்தார்.

தொடர்ந்து எம். பி. பதவியையும் அவர் இராஜினாமாச் செய்தார்

போபேர்ஸ் பீரங்கி பேர ஊழலில் அரசுக்கு சம்பந்தமிருப்பதாகக் கூறியே அவர் இராஜினாமாச் செய்திருக்கிறார். (உ-எ)

### 961 ஜவான்கள் உயிரிழப்பு

புதுடில்லி, ஆகஸ்ட் 1

1987 அக்டோபர் தொடக்கம் இதுவரை இலங்கை, வடக்கு-கிழக்குப் பகுதிகளில் 961 இந்திய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இத்தகவல் புதுடில்லி லோகசபையில் வெளியிடப்பட்டது.

வழக்கமாக வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் இந்திய இராணுவத்திற்கு செலவாகும் பணத்தை விட 232 கோடி ரூபா அதிகமாக இலங்கையில் செலவிடப்பட்டிருக்கிறது.

வடக்கு - கிழக்கு இராணுவ நடவடிக்கையில் 52 இராணுவ அதிகாரிகளையும் 66 கனிஷ்ட அதிகாரிகளையும் இந்திய இராணுவம் இழந்தது.

— இப்படி இந்திய இராணுவ இணை அமைச்சர் டி. சிவைதா லோகசபையில் நேற்றுத் தெரிவித்தார். (உ-எ)

### ஜனசக்தி: ஜனவரிக்கு ஒத்திவைப்பு

லண்டன், ஆக 1

வறுமை அகற்றும் தனது திட்டத்தை (ஜனசக்தி திட்டத்தை) இலங்கை அரசு அடுத்த ஆண்டு ஜனவரிக்கு ஒத்திவைத்திருப்பதாக அறிவத்திருக்கிறது.

சீரகுலைந்து வரும் நாட்டின் பொருளாதாரத்தை சரிசெய்யவும் சர்வதேச நாணய நிதியத்தைத் திருப்திப்படுத்தவும அரசாங்கம் இந்த சிக்கன நடவடிக்கையை எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

### மாவையில் தேர் காண பெருங் கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக 1

சரித்திரப் பிரசித்திபெற்ற மாவிட்டபுரம் கந்தசாமி ஆலய பஞ்ச ரதோற்சவம் நேற்று (31-7-89) காலை மிகவும் பக்திபூர்வமாகச் சிறப்பாக நடைபெற்றது.

பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் காலையில் இருந்து மாலைவரை ஆலயத்திற்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்
01—08—1989
ஆடி 17 — செவ்வாய்க்கிழமை
நக்ஷத்திரம்: பூசம்
சுபநேரம்:
10.33 முதல் 12.03 வரை
ராகுகாலம்:
03.03 முதல் 04.33 வரை
ஆடி அமாவாசை விரதம்

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## தேவை

வீட்டில் சிறுபிள்ளையைப் பார்ப்பதற்கு ஒருவர் தேவை: வயது 9-12 உட்பட்ட ஆணோ பெண்ணோ சம்பளத்துடன் சாப்பாடும் கொடுக்கப்படும். சுடிதமூலம் தொடர்பு கொள்ளவும். இல: 569, C/o உதயன் யாழ்ப்பாணம். (1339)

## மணமகன் தேவை

யாழ்ப்பாண இந்து வேளாளர் கச்சேரியில் வேலை செய்யும் செவ்வாய்க் குற்றமுள்ள 33 வயதுப் பெண்ணுக்கு Professional வங்கியாளர் பட்டதாரி மணமகன் தேவை. மங்களஏஜென்சி; யாழ்ப்பாணம். (11649)

## விற்பனைக்கு

இரண்டு மாதம் நிறைவடைந்த உயரின பொமேரியன் பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: து. வைத்தீஸ்வரன் மானிப்பாய் ஆண்கள் இந்துக் கல்லூரிக்கு முன். (11665)

மறுசீரமைக்கப்பட்ட நல்ல நிலையில் உள்ள Austin 'A30' கார் விற்பனைக்கு உண்டு: றஜீவ் ஸ்ருடியோ 44, அந்தோனியார் வீதி, பாசையூர். (1338)

## வகுப்புகள்

G. S. Q.(Bio and maths), Stenography, Home science, Diploma, English வகுப்புக்கள் யாவும் 01-08-1989 இல் ஆரம்பமாகியுள்ளன. தொடர்பு: அதிபர் உயர் கலைக்கல்லூரி, (The College of Higher Studies) 73, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (11661)

## புலமைப் பரிசிற் பரீட்சை ஆண்டு 5

புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் பயிற்சி வகுப்பு ஆரம்பம் 4-08-89 வெள்ளி 2-4 வரை நாளாந்த வகுப்புகள் குறிப்பிட்ட மாணவர்களே மட்டுமே அனுமதிக்கப்படுவதால் பெயர்களை முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்: விபரங்களுக்கு 98, செட்டித்தெரு, நல்லூர் (11668)

## சோதிடம்

வேலணை சோதிடர் ஆ. சிவராசாவை சனி, ஞாயிறு தினங்களில் வேலணையிலும் ஏனைய நாட்களில் 152 B, அரசடி றோட், கந்தர்மடம் யாழ்ப்பாணத்திலும் சந்திக்கலாம். (11666)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Golden Comet பிறவுண் பேட்டுக்குஞ்சுகள். சேவற் குஞ்சுகள் 2 ஆம் திகதி புதன்கிழமையும் Hy bro புரொயிலர் குஞ்சுகள் 3 ஆம் திகதி வியாழக்கிழமையும் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ், பிரப்படி லேன், சொக்குவில். (1327)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Hisex, Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள். Hyline வெள்ளை கறுப்பு, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள். Hybro புரொயிலர் குஞ்சுகள் முன்கூட்டியே பதிவு செய்து, ஒவ்வொரு வாரமும் பெற்றுக் கொள்ளலாம், சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரப்படி லேன், கொக்குவில். (1052

## கோழிக்குஞ்சு விநியோகம் Uplands Farm

(Dekalb) பிறவுண் பேடு சேவல் (Cobb) புரொயிலர் குஞ்சுகள் (02 - 08 - 89) புதன்கிழமை விநியோகிக்கப்படும். (சேவல் குஞ்சு 50க்கு மேல் எடுப்பவர்களுக்கு விலை ரூபா 3/50) உடன் பதியவும். இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அண்மையில்) குறிப்பு:- இரவில் குஞ்சுகளுக்கு லைட் அவசியமில்லை (1326)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



**அமரர் பெருமாள் ஐயாத்துரை**

அன்னையின் மடியில்- 23- 02- 1926 ஆண்டவன் அடியில்- 03- 07- 1989

ஞானதீபமாய் விளங்கி இன்று எம் இதயங்களில் அணையாத தீபமாய் ஆகிவிட்ட எமது குடும்பத்தின் நாயகனே! எமது கண்ணீர்ப் பூக்களைத் தங்கள் காலடிகளில் சமர்ப்பித்துத் தங்களுக்கு எமது 31ஆம் நாள் நினைவு அஞ்சலிகளைச் செலுத்துகின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோர்க்கும் பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அன்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

02- 08- 1989 புதன்கிழமை அதிகாலை நடைபெற இருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் தொடர்ந்து நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் :
அன்பான மனைவி, மக்கள், மருமக்கள், பெருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதர சகோதரிகள், மைத்துனர், மைத்துனிகள்.

இமையாணன், உடுப்பிட்டி. (11663)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. மாணிக்கம் நவரத்தினசிங்கம்**
(அவுஸ்திரேலியாவில் காலஞ் சென்றவர்)

அன்னையின் அணைப்பில்: 18. 05. 1940 ஆண்டவன் ஆதரவில்: 25 07 1987

திதி: 01. 08. 1989

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
எங்களை விட்டுப் பிரிந்த ஆத்மா திரும்ப வருமோ ?
இல்லையே இல்லை!
ஆகையால் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்!

மனைவி, மக்கள்,
பிதா: மாணிக்கம்,
மைத்துனர்: கணேசானந்தமூர்த்தி.
மாமனார்: M. P. பொ...

'நவஜோதி வாசம்' ...லை

(1408)

---

## - விஞ்ஞானம் -

வகுப்புக்கள் அனைத்தும் வழமையான நேர அட்டவணைப்படி ஆரம்பமாகிவிட்டன.

இரா. செல்வவடிவேல் (11678)

## வெளிநாட்டு பிரயாண ஒழுங்குகள்

### ஜேர்மனி

ஜேர்மனி செல்ல விரும்புவோர் உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும். விசாவுடன் டிக்கற் செய்து கொடுக்கப்படும்.

- ★ 16 வயதிற்குட்பட்டோருக்கு இரண்டு கிழமைகளில் பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.
- ★ CONFIRMATION, RE - CONFIRMATION, CANCELLATION OF TICKETS செய்து கொடுக்கப்படும்.
- ★ பாஸ்போட், BONDING, EXTENSION ஆகியவைகள் துரிதமாகச் செய்து கொடுக்கப்படும்.
- ★ விமான டிக்கட்டுகள் மிகவும் குறைந்த கட்டணத்தில் செய்து கொடுக்கப்படும்.

கொழும்பு / சிங்கப்பூர் (1 yr return) - 10,775/-

கொழும்பு / சூரிச் / TRONTO - 24,000/-
(IMMIGRANT VISA)
(BY AIR LANKA, + SWIS AIRWAYS)

கொழும்பு / சிங்கப்பூர் / TRONTO - 23,500/-
(IMMIGRANT VISA)
(BY KOREAN AIRWAYS)

- ✶ பலாலி விமான நிலையத்திற்கு எமது அலுவலகக் கார் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு கொள்ளவும்:

**MACK TRAVELS (PVT) Ltd.**
No: 8, FIRST LANE,
POINT PEDRO ROAD,
JAFFNA.

(C/2928)

## ஓராண்டு நினைவஞ்சலி



**திருமதி தங்கரத்தினம் சின்னத்தம்பு**

தோற்றம்: 1914- 04- 10 மறைவு: 1988- 08- 12

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத் துயில் கொண்ட எம் அன்புத் தெய்வமே! எம்மைப் பிரிந்து ஆண்டொன்று சென்றாலும் உங்களை நாம் எக்கணமும் மறவோம்; தங்கள் ஆத்மா சாந்தியடைய மாவைக் கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்

கணவர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''இரத்தின பவனம்'',
...
தெல்லிப்பழை. (11667)

---

## மலிவு விலையில் அறிமுகம் Chilton Trip Switch

மின் பொறியியலில் புகழ் மிக்க Ottermill Chilton Ltd. ஸ்தாபனத்தாரின் தயாரிப்பு

★ சுந்தர்சன் ★
சந்தை முன், மானிப்பாய்.

**OTTERMILL CHILTON LTD.**
HUNGERFORD, BIRKSHIRE,
ENGLAND.

[சி-3118]

## வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள்

1. தாய்வான் தோல்பதப்படுத்தும் ஆலைக்கும், மரவேலை ஆலை முதலியனவுக்கும் கூலி ஆட்கள் தேவை.
   - (a) வயது: 22 — 35க்கு இடைப்பட்டவர்கள்
   - (b) சம்பளம்: அமெரிக்கன் டொலேஸ் 250 ஓவரைம் சம்பளம் உண்டு.
   - (c) சாப்பாடு, இருப்பிட வசதிகள் உண்டு.
2. மலேசியாவின் ஆலை ஒன்றிற்குக் கூலி ஆட்கள் தேவை.
   - (a) வயது: 22 — 35க்கும் இடைப்பட்டவர்கள்
   - (b) சம்பளம்: ஒரு நாளைக்கு மலேசியா டொலர் 18 என்ற முறையில் ஓவரைம் சம்பளம் உண்டு.
   - (c) இருப்பிட வசதி உண்டு.
3. குவெயிற் ஆஸ்பத்திரி, எயப்போட் முதலியனவுக்கு கிளீனேர்ஸ் தேவை.
4. குவெயிற் எண்ணை சுத்திகரிக்கும் ஆலைக்கு கூலியாட்கள் தேவை.

மேலும் விபரங்களுக்கு கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்:

**ந. சிவப்பிரகாசம்,**
**இந்திரபாலாஸ் பார்மஸி,**
(பழைய பொலீஸ் ஸ்ரேஷன் முன்பாக)
**சுன்னாகம்.** [1409]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. மாணிக்கவாசகர் கதிர்காமநாதன்**
(பபா ; கதிர்)

மலர்வு: 22. 04. 1947 உதிர்வு: 13. 08. 1988

திதி: 02. 08. 1989

எம்மையெல்லாம் ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தி விட்டு அகால மரணமடைந்த எம் குல விளக்கு அமரர் திரு. மாணிக்கவாசகர் கதிர்காமநாதன் (முன்னாள் தொழில் நுட்பவியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, நீர் கொழும்பு) அவர்களின் ஓராண்டு நினைவஞ்சலி 02-08-1989 புதன்கிழமை அன்று காசிப்பிள்ளை வீதி, நுணுவில் மேற்கில் உள்ள அவரது இல்லத்தில் நிகழும்; உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் இவ்வஞ்சலியில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

பெற்றோர், மனைவி, மக்கள், சகோதர, சகோதரிகள்.

நுணுவில் மேற்கு,
சாவகச்சேரி.

(1243)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

குறள்:
பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்திமை யால்திரிந் தற்று:

பொருள்:
பண்பு இல்லாதவன் பெற்ற பெரிய செல்வம். வைத்த கலத்தின் தீமையால் நல்ல பால் தன சுவை முதலியன கெட்டாற் போன்றதாகும்.

உதயன்

இல. 292/2, நாவலர் வீதி, தொலைபேசி 24805
22073
யாழ்ப்பாணம்.
01 - 08 - 1989
த. பெ. இல: 23

# இலங்கை வங்கி முன்பாக...

இலங்கை வங்கி தனது ஐம்பதாவது அகவையை நிறைவு செய்து. இன்று ஐம்பத்தோராவது வயதில் காலடி எடுத்து வைக்கிறது.

இப்போதெல்லாம். தனி மனிதனுக்கே ஐம்பது வயதினைப் பூர்த்தி செய்வது என்பது ஒரு சாதனை என்றாகிவிட்டது. அவ்வாறிருக்க ஒரு நிறுவனம், பொன் விழாக் காண்பது பெருமைக்கும், போற்றுதலுக்கும் உரியதாகும்

அனேக நிறுவனங்களின் சரித்திரத்தைப் போலவே, இலங்கை வங்கியும் சிறிய அளவில், கொழும்பு நகரி மட்டும் இயங்கும் ஸ்தாபனமாக ஆரம்பிக்கப்பட்டு, இன்று நாடு முழுவதிலும் கிளை பரப்பி மக்களுக்குச் சேவை என்ற குளிர் நிழல் தந்து, பருத்துப் பெருத்த விருட்சமாக வளர்ந்து நிற்கிறது, அதன் மதானித்த வளர்ச்சி, மக்களுக்குப் பூரிப்புத் தருவதாகும்.

இலங்கை வங்கி அரசாங்கவங்கி. அதனால் அது வெறும் வர்த்தக நிறுவனமாக மட்டுமன்றி, மக்களுக்குச் சேவை செய்வதையும் தனது இலட்சியமாகக் கொண்டியங்க வேண்டியது அவசியம்; அந்தப் பொறுப்பை உணர்ந்து இலங்கை வங்கி காலத்துக்குக் காலம் தனது கொள்கைகளையும், திட்டங்களையும், நடைமுறைகளையும் மக்கள் நலன் நாடிச் செல்வதைக் கண்ணாரக் காண்கிறோம்;

ஒரு வங்கி, தான் நின்று நிலைத்துத் தொழிற்படும் நாட்டின் பொருளாதார, வர்த்தக, வளர்ச்சிகளுக்கு மட்டுமன்றி, சமூக முன்னேற்றத்துக்கும் பங்களிப்புச் செய்ய வேண்டும். அந்த நல்ல இலட்சியத்தை இலக்காகக் கொண்டு இலங்கைவங்கி உழைத்து வருவதை மெச்சலாம்;

மிக நெருக்கடியான காலகட்டங்களிலும், ஊழியர்களினதும், உடைமைகளினதும் பாதுகாப்பையும் பொருட்படுத்தாது இலங்கை வங்கி தனது சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கியதை இங்கு நினைவு கூர்ந்து பாராட்டலாம்.

அரசாங்க விதிமுறைகள், வங்கியியல் நடைமுறைக் கோட்பாடுகள் ஆகிய இரண்டுக்கும் கட்டுப்படும அதே வேளை, மக்கள் நலன் திட்டங்களைத் தாராள முறையில் சற்றேனும் இறுக்கமின்றிச் செயற்படுத்துவது சிரமமான காரியமாகும். எனினும் இலங்கைவங்கி இயன்ற வரை மக்களுக்கு நன்மை தரும் பல சமூக நலன் திட்டங்களை அமுல்படுத்தி வருகிறது:

வங்கியியல் செல்வந்தர்களுக்கும், நகரவாசிகளுக்கும் மட்டுமே என்ற நிலை சிறிது சிறிதாக மாறிவருகிறது. எனினும் அது மேலும் முற்றுமுழுதான அளவுக்கு மாறவேண்டும். சாதாரண சராசரி மனிதனும் வங்கியுடன் தொடர்புடையவனாக மாறவேண்டுமாயின், மேலும் பல மக்களின் சமூக நலன் சார்ந்த திட்டங்கள் அறிமுகபபடுத்தப்படவேண்டும். இது விடயத்தில் இலங்கை வங்கி மேலும் ஊக்கத்துடனும், உத்வேகத்துடனும் பணியாற்றி—தொண்டுபுரியவேண்டும். ஏனைய வங்கிகளுக்கு முன்னோடியாக, முன்னுதாரணமாக விளங்க உழைக்கலாம்.

வடக்கு-கிழக்கு, தமிழ்ப் பகுதிகளைப் பொறுத்தவரையில் இலங்கை வங்கி தனது செயற்பாடுகளை மேலும் காத்திரமாக்கிக் கொள்வது அவசியம் என வலியுறுத்த விரும்புகிறோம். முழு நாட்டுக்குமென வகுக்கப்படும் திட்டங்களை அப்படியே அமுல் செய்யும் களமாக வடக்கு-கிழக்கைப் பார்க்கக்கூடாது.

தமிழ்ப் பகுதிவாழ் மக்களின் பொருளாதார, வர்த்தக, சமூகத் தன்மைகளுக்கும், பின்னணிகளுக்கும், தேவைகளுக்கும் ஏற்ப, அவர்களின் மேம்பாடு கருதிய தனித்துவமான திட்டங்கள் தேவை. இது குறித்து இலங்கை வங்கி முகாமைத்துவம், பரந்த நோக்குடனும், தூரதிருஷ்டியுடனும், தெளிந்த சிந்தையுடனும் மிக உவப்பாக அக்கறை காட்ட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம்.

இலங்கை வங்கியின் வளர்ச்சியில், வடக்கு கிழக்கு வாழ் மக்களினதும், வெளிமாவட்டங்களில் வர்த்தகம் புரிந்த தமிழர்களினதும் பங்களிப்புப் பெருமளவில் உண்டு. அதனை மனதில் இருத்தியேனும், தமிழர்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்துக்கு உழைக்க வேண்டிய நன்றிக்கடனும், பொறுப்பும் இலங்கை வங்கிக்கு உண்டு.

பொன் விழாக் காணும் இந்தப் பூரித்த பொன்னாளில் தமிழர்களுக்கு உதவும் தனித்துவத் திட்டங்களை உருவாக்குவதை தனது பணிகளில் ஒன்றாக இலங்கை வங்கி சேர்த்துக் கொள்ளத் திடசங்கற்பம் பூணும் என நம்புவோமாக;

## நூற்றாண்டு விழா ஏற்பாடுகள்

காரைநகர், ஆக. 1

யாழ். காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயம் [illegible] அமைக்கப்பட்டு 100 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன; இதனை ஒட்டி நூற்றாண்டு விழாவிற்கான பூர்வாங்க ஏற்பாடுகளைக் கல்லூரி நிர்வாகம் துரிதமாக மேற்கொண்டு வருகின்றது.

நினைவுமலர் ஒன்றும் வெளிவர இருக்கின்றது; அத்துடன் நினைவுக் கட்டடம் ஒன்றுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது; (க-73)

## நூல் வெளியீடு

"புதிய நண்பர்கள்" நடத்தும் ரஞ்சகுமார் எழுதிய மோகவாசல் என்ற நூலின் வெளியீட்டு விழா 5ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக் கழக செல்வநாயகம் மண்டபத்தில் திரு. செம்பியன் செல்வன் தலைமையில் நடைபெறும்;

விழாவில் திரு. செங்கை ஆழியான் வெளியீட்டுரை நிகழ்த்த, திருமதி மௌ. சித்திரலேகா, திரு. மு. பொன்னம்பலம், திரு. க. டிவகலாலா, பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோர் ஆய்வு நிகழ்த்துவார்கள்; (க)

# பத்து லட்சம் ரூபா பெறுமதியான புத்தகங்கள் - நூலகங்களுக்கு

## உள்ளூராட்சித் திணைக்களம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 1

இந்த வருட இறுதிக்குள் 10லட்சம் ரூபா பெறுமதியான நூல்களை கொள்வனவு செய்து பொது நூலகங்களுக்கு வழங்க உள்ளூராட்சித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இம் முயற்சி நிறைவேறும் பொருட்டு யாழ் மாவட்டத்தில் உள்ள பொது நூலகங்கள் அனைத்தும் உடனடியாகத் தமது வாசகர் வட்டங்களை புனரமைக்க வேண்டும் என யாழ் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலாலா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புனரமைப்புச் செய்யப்பட்டதும் வாசகர் வட்டம் ஒவ்வொன்றும் நூல் கொள்வனவுப் பட்டியல் ஒன்றை தமது அலுவலகத்துக்கு அனுப்பிவைக்க வேண்டும் என உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேற்படி புத்தக கொள்வனவுப் பட்டியல் தயாரிக்கப்படும் பொழுது பாடசாலை உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு தேவையான பாடப் புத்தகங்களுக்கு முன் உரிமை கொடுக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

மேற்படி விடயங்களில் கவனமெடுத்து உடனடி நடவடிக்கை எடுக்கும் படி சகல பிரதேச சபைகளுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (இ-13)

## மோசமான பாதை

காரைநகர், ஆக. 1

காரைநகரில் பாலாவோடை ஊடாகச் சென்று ஊரிப் பிரதேசத்தை அடையும் போக்குவரத்துப் பாதை கடந்த 20 வருட காலமாக திருத்தப்படாமல் இருக்கின்றது. காரைநகரில் மிக மோசமான பாதை இதுவேதான் என்று மக்கள் பேசிக்கொள்கிறார்கள். (க-73)

## 2 குழந்தைகளுக்கு நஞ்சு பருக்கி தானும் உட்கொண்ட தாயார்

யாழ்ப்பாணம் ஆக. 1

இளம் தாய் ஒருவர் தனது இருகுழந்தைகளுக்கும் கிருமி நாசினி பருக்கி விட்டுத் தானும் தற்கொலை செய்த சம்பவம் அனலைதீவில் நடைபெற்றது.

கனகாம்பிகை (வயது 25), மஞ்சுளா (வயது 5), நவநீதன் (வயது 2) ஆகியோரே இறந்தவர்கள் ஆவர்.

இக்காட்சியைக் கண்ட கணவன் பொ. குகதாசன் தானும் மிகுதிக் கிருமிநாசினியை உட்கொண்டார்; இவர் முதலில் அனலைதீவு வைத்தியசாலையிலும் பின்னர் யாழ் அரசினர் வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவிலும் சிகிச்சை பெற்றார். தற்போது குணமடைந்து வருகிறார்.

இறந்த பெண்ணின் தாயாரும் முன்பு தமது ஏழு குழந்தைகளுக்கு நஞ்சூட்டி விட்டு தாமும் தற்கொலை செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அனலைதீவு மரணவிசாரணை அதிகாரி திரு. க. சிவனடியான் தனது விசாரணையின் போது குடும்பத் தகராறு காரணமாக இரு கொலைகளும் ஒரு தற்கொலையும் நடைபெற்றன. இது துரதிஷ்டவசமான விடயம் எனக் கூறினார்; (இ-18)

## சமய சந்நிதிகளில்

### கதிரமலை தேவஸ்தான தேர் தீர்த்தம்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 1

ஸ்ரீ சுன்னாகம் கதிரமலைச் சிவன் தேவஸ்தானத்தின் சுவர்ணாம்பிகை ஆடிப்பூர உற்சவத்தின் தேர்த் திருவிழா 3ஆம் திகதி வியாழக்கிழமையும் தீர்த்த உற்சவம் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் நடைபெறும்; (க)

### உற்சவம்

மாங்குளம், ஆக. 1

அல்வாய் வடக்கு வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் ஆகஸ்ட் 2ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15ஆம் திகதி தேர் மறுநாள் தீர்த்தத்துடன் முடிவடையும் (க- 94)

### ஆடிப்பூரவிழா

சாவகச்சேரி, ஆக. 1

சாவகச்சேரி ஸ்ரீ துர்க்கை அம்மன் தேவஸ்தான ஆடிப்பூரவிழா ஆகஸ்ட் மாதம் 4ஆம் திகதி நடைபெறும்.

அன்று மாலை 108 தீப பூசையும் நடைபெறும். (த- 31)

### வருடாந்த உற்சவம்

யாழ்ப்பாணம், ஆக. 1

யாழ். நாயன்மார்க்கட்டு அருள்மிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மாள் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியது.

எதிர்வரும் ஆகஸ்ட் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆடிப்பூரத்தினத்தன்று தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (க)

# 3 உதவி அரச அதிபர் பிரிவுகளில் வீடமைப்புக் களஞ்சியங்கள்

உடுவில் உதவி அரச அதிபர் பகுதி, சங்கானை உதவி அரச அதிபர் பகுதி, பருத்தித்துறை உதவி அரச அதிபர் பகுதி ஆகியவற்றில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தினால் 'வீடமைப்பு களஞ்சியங்கள்' அமைக்கப்பட்டுள்ளன.

இந்த வீடமைப்புக் களஞ்சியங்களுக்கு ஒரு களஞ்சியப் பொறுப்பாளரும், இரண்டு காவலாளிகளும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்: மேலும் ஒவ்வொரு களஞ்சியத்துக்கும் ஒரு டிராக்டரும் வழங்கப்பட உள்ளது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் ஒவ்வொரு உதவி அரச அதிபர் பிரிவிலும் இடம் பெயர்ந்த அகதிகளுக்கு 15,000 ரூபா செலவில் வீடமைத்துக் கொடுத்து வருவது தெரிந்ததே. (க-13)

## சீவல் தொழிலாளர்கள் பிளவுபட்டு நிற்பதால் பின்னடைவு ஏற்படும்

யாழ்ப்பணம், ஆகஸ்ட் 1

சீவல் தொழிலாளர்கள் தம் மத்தியில் சாதியின் பேரால் பிளவுபட்டு நிற்பதோ அல்லது ஊர் பிராந்தியம் என்பனவற்றின் பெயரால் பிளவுபட்டு நிற்பதோ அவர்கள் முன்னேற்றத்திற்கு ஒரு போதும் உதவப்போவதில்லை.

இப்படியான பிரிவுகள் அவர்களைப் பின்னடையச் செய்யும்;

வேலணை தெங்கு, பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கக் காரியாலயத்தில் நடைபெற்ற சீவல் தொழிலாளர் பொதுக்கூட்டத்தில் ஈழத் தொழிற்சங்க சம்மேளன யாழ். மாவட்டச் செயலாளர் திரு. அ. இராசலிங்கம் பேசும்போது இவ்வாறு கூறினார்.

திரு. க. இராசநாயகம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில், சமாசத் தலைவர் திரு. அமிர்தநாதன் பேசும் போது பின்வருமாறு தெரிவித்தார்;-

கள்ளை உற்பத்தி செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கங்களுக்கு மட்டும் அனுமதி உண்டு.

சகல சீவல் தொழிலாளர்களும் சங்கத்திற்குச் சரியான நிர்வாகத்தைத் தெரிவுசெய்து தொழிலாளர் ஒத்துழைப்புடன் சங்கத்தை லாபத்துடன் இயங்கச் செய்தால் சீவல் தொழிலாளர்களே பெரிதும் நன்மையடைவர் இவ்வாறு அவர் தெரிவித்தார்.

ஈழத் தொழிற்சங்க சம்மேளன அமைப்பாளர் திரு. வீ. ஏ. கந்தசாமி பேசும் போது:-

ஈழத்தொழிற்சங்க சம்மேளனத்தில் ளர்களும் இணைந்து செயல் படுவதன் மூலம் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு மட்டுமல்ல தமிழினத்தின் விடுதலைக்கும் சமூக மாற்றத்திற்கும் கூட உதவ முடியும் என்றும் கூறினார்: (த)

## எமதுஇயக்கத்தின்பெயரைப்பாவித்து

# போலிகள் மக்களை வருத்துவதை வன்மையாக கண்டிக்கிறோம்

## ரெலோ யாழ்மாவட்ட பொறுப்பாளர்

யாழ்ப்பாணம், ஆக. 1

'எமது இயக்கத்தின் பெயரைப் பாவித்து போலிகள் மக்களை வருத்துவதை மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறோம்'.

தமிழ்ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) புதிய யாழ் மாவட்டப் பொறுப்பாளர் திரு. மதன் யாழ். மாவட்ட தமிழபேசும் மக்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறுதெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில்:

இவ்வாறான போலிகளை இனங்காண்பதற்கு மக்களின் ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கிறேன்.

இன்று எமது இயக்கம் மக்கள் மத்தியில் நல்ல பெயரையும் நல்லபிமானத்தையும் பெற்றுவருகின்றது,

இதைக் கெடுக்க முயலும் எந்த ஒரு தீய சக்தியையும் நான் மன்னிக்கத் தயாராய் இல்லை.

நாம் எம் மண்ணிற்காகவும், இம்மண்ணின் மைந்தருக்காகவும், தமிழ்ஈழ விடிவிற்காகவும் ஆயுதம் ஏந்தினோம்.

ஜனநாயக வழியில் சென்றுகொண்டிருக்கும் நாம், தேவைப்பட்டால் மீண்டும் ஆயுதம் ஏந்திப் போராடவும் தயங்கமாட்டோம்,

அதேவேளையில் எம் இயக்கப்பெயரால், மக்களை நசுக்கிப் பணம்பறிக்க நினைக்கும் இனத் துரோகிகளை இனங்காண்பதற்கு என்றும் எம் வாசற்கதவுகள் எம்மக்களின் நலனிற்காகத் திறந்திருக்கும் என்பதை உறுதியுடன் அறியத் தருகிறேன்;

# ஆத்ம சாந்தி செய்வதற்கான ஆடி அமாவாசைத் தினம்

ஆடி மாதம் பிறந்ததுமே கூழ் காய்ச்சிக் கூடியிருந்து குடித்து மகிழ்ந்து குதூகலிப்பது நம் தமிழர் மரபு. ஆடி மாதத்தில் பல விசேட தினங்கள் வருகின்றன. ஆடிச் செவ்வாய், ஆடிப்பூரம், ஆடி அமாவாசை என்பவை குறிப்பிடத்தக்கவை.

ஆடிச் செவ்வாயில் துர்க்கா தேவியை வேண்டி விரதமிருப்பதும், ஆடிப் பூரத்தில் அம்பாள் பூர கர்பம் நடப்பதும் (பூப்புதனித மங்கள நீராட்டு விழா) ஆடி அமாவாசையில் இறந்துபோன ஆத்மாக்களுக்குப் பிதிர்க்கடன் செலுத்துவதும் தொன்று தொட்டு நடைபெற்று வரும் நிகழ்வுகளாகும்.

இதில் முக்கியமாக ஆடி அமாவாசையில் இல்லற தர்மத்திலிருப்போர் பிரதானமாக தந்தையார் இறந்திருந்தால் அவரது ஆத்மாவுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக விரதமிருந்து - மதகுருவுக்குக் காணிக்கை செலுத்தி, புனிதமான ஆலயத்துக்கு தூய்மையாகச் சென்று இறைவழிபாடியற்றி தேவாரபாராயணம் செய்து புண்ணிய தீர்த்தமாடி நண்பகல் போசனத்தின்போது இன்னுமொருவருக்கு அமுதூட்டி அன்னதானஞ் செய்து தாமுமுண்ணுவர்:

இத்தினத்தில் தான் அம்பிகை இறைவனை வேண்டி வரமிருந்து ஆதிபராசக்தியாக அகிலமனைத்தையும் காக்க சக்தி பெற்றாள் என்பது ஐதிகம்;

இப்புண்ணிய காலத்தில் விரதமிருந்து இறைவழிபாடியற்றி தான தர்மஞ்செய்து ஆத்மசாந்தி செய்தால் இறந்து போன ஆன்மாக்கள் திருப்தி அடைந்து அவர்களை [illegible] என்பது ஆன்றோர் கருத்து.

—இ. [illegible]

# பயிலுநர் ஆசிரியர் விண்ணப்பங்கள்:-

## புள்ளிகளையும் நீங்களே இட்டு திணைக்களத்துக்கு அனுப்புங்கள்

25 ஆயிரம் பயிலுநர் ஆசிரியர்கள் பதவிக்கு விண்ணப்பிப்போர் புள்ளிகளை இட்டு அனுப்பினால் இந்த வேலைகளை துரிதமாக முடிக்க இயலும்.

யாழ் பிரதிக் கல்விப்பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி இவ்வாறுதெரிவித்தார்.

அவர் மேலும் இதுபற்றித் தெரிவித்ததாவது:

25 ஆயிரம் பயிலுநர் ஆசிரியர் பதவிக்கு எமக்கு வந்து சேர்ந்துள்ள விண்ணப்பங்களில்பெரு பாலானவைபுள்ளி இடப்படவில்லை.

வர்த்தமானி ஆறும் பிரிவில் தெரிவிக்கப்பட்டபடி புள்ளிகளுடன் விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டால் வேலைகள் மேற்கொள்வதில் தாமதம் ஏற்படாது.

புள்ளிகள் இல்லாது வரும் விண்ணப்பங்களுக்கும் நாம் புள்ளியிடுவோம்.

ஆனாலும் புள்ளிகளை இட்டு அனுப்புவதன் மூலம் வேலைகளை சுலபமாக முடிக்கலாம் என்பதை விண்ணப்பிப்போர் கவனத்தில் கொள்ள வேண்டும்,

விண்ணப்பங்கள் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பத் தேவையில்லை. கல்வித் திணைக்களத்துக்கு விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.

இப்படி அவர் கூறினார். (த-3)

## ஜனசக்தி உரித்து அட்டைகள்

கோப்பாய். ஆகஸ்ட் 1

வலி. கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஜனசக்தி திட்டத்தின் கீழ் பத்தாயிரம் உரித்து அட்டைகள் வழங்கப்படவுள்ளன. இவை மிக விரைவில் வழங்கப்படும் என சம்பந்தப்பட்ட அதிகாரி தெரிவித்தார். (க-72)

# வாசகர் திருமுகம்

## துர்நாற்றம்

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோவிலுக்கு அருகாமையில் அமைந்திருக்கும் நாவலர் மண்டபத்தைச் சுற்றியுள்ள சுற்றுமதில் ஆலய சுற்றுடல் மாசுபடக் காரணமாக அமைகிறது: இச்சுற்றுடலில் மலசலம் கழித்தல் இச்சுற்றுமதில் அமைவின் காரணமாகவே ஏற்படுகிறது. மேலும் அங்கப் பிரதிட்சை செய்யும் அடியவர்களுக்கும் இச்சுற்றுமதில் இடையூறாக அமைகிறது. முக்கியமாக ஆலய சுற்றுமதிலுக்கும் இந்நாவலர் மண்டப சுற்றுமதிலுக்கும் இடையில் அடியவர்கள் செல்ல முடியாத நிலையில் துர்நாற்றம் வீசுகிறது. இது பற்றித் தக்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டிக் கொள்கிறோம்;

க. கண்ணன்,
த. சத்தியன்.
நல்லூர்.

## பழுதடைந்த வீதி

நீண்ட காலமாக வேலணை மண்கும்பான் சாட்டிவீதி மிகவும் பதான நிலையில் உள்ளது; அரசாங்க பஸ் சேவை, தனியார் பஸ்சேவை, தண்ணீர் கொண்டு செல்லும் வாகனங்கள் உட்பட பலரக வாகனங்கள் இவ்வீதியால் செல்கின்றன. ஆனால் மிகவும் ஆழமான குழிகள் காணப்படுகின்றன.

இவ்வீதியால் ஒரு தடவை பயணம் செய்த பின்பு வாகனங்கள் திருத்தும் இடங்களுக்கும், பயணிகள் வைத்தியசாலைகளுக்கும் செல்லவேண்டியிருக்கிறது! இந்த அவஸ்தையான நிலையில் சாட்டிவீதி அமைந்துள்ளது.

துவிச்சக்கர வண்டிகளில் செல்பவர்கள் காற்றுப்போய் விட்டது எனக் கூறிக்கொண்டு நடந்து செல்கிறார்கள். நடந்து செல்பவர்கள் காலில் கல் அடிபட்டது என்று இழுத்து இழுத்து நடக்கிறார்கள்;

எனவே சம்பந்தப்பட்ட திணைக்களமும், அதிகாரிகளும் இவ்வீதியைத் திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

K. ஆனந்தன்.
வேலணை கிழக்கு,
வேலணை.

## ஒரு கோரிக்கை

திட்டத்தின்படி ஓர் ஏழைக் குடும்பத்திற்கு மாதம் ரூபா 2500/- வருமானம் கிடைக்க வழிசெய்ய உதவுகின்றது. இன்றைய பொருளாதாரச் சூழ்நிலையில் ஒரு குடும்பத்திற்கு ஆகக் குறைந்தது மாதம் ரூபா 2500/- தேவை என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது; எனவே அரசாங்கம், கூட்டுத்தாபனம், தனியார்துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் கடமையாற்றும் ஒவ்வொரு ஊழியருக்கும் அடிப்படைச் சம்பளம் ரூபா 2500/- ஆக நிர்ணயிக்கப்பட வேண்டும். ஓய்வூதியம் பெறுவோர்க்கும் இது பொருந்தும். இவ்வண்ணம் சகலருக்கும் மாதம் ரூபா 2500/- வருமானம் கிடைக்க வழி செய்தால் தான் இந்த வறுமை ஒழிப்புத் திட்டம் பூரண வெற்றி பெறும்.

முறையாக வாழ்க்கைச் செலவுப்படி இன்றைய வாழ்க்கைச் சுட்டெண்படி மாதம் ரூபா 352/- கிடைக்க வேண்டும்; இதை முறையாக உரிய காலத்தில் இருந்து ஓய்வூதியம் பெறுவோர்க்கு கிடைக்க இலங்கையில் உள்ள எல்லா தொழிற்சங்கங்களும் குரல் கொடுக்க வேண்டும். இது ஓர் நியாயமான, மனிதாபிமானமான கோரிக்கை. எனவே இதைப்பெற சம்பந்தப்பட்ட எல்லாரும் தனியாகவும் கூட்டாகவும் முயற்சி எடுப்பார்களாக!

அ. சபாபதிப்பிள்ளை,
ஓய்வுபெற்ற
புகையிரத நிலைய அதிபர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**செல்வி ரஜனி நல்லதம்பி**

தோற்றம்- 16 - 06 - 1964 | மறைவு: 02 - 07 - 1989

திங்கள் ஒன்று சென்றாலும்
அழியாது எம்முடனே
தூண்டாமணி விளக்காய்
தோன்றும் அன்புருவே!
மீண்டும் காண்போமா
மேலான அன்புருவை?
வேண்டுகிறோம் நின் ஆத்மா
சாந்தி பெற பிரார்த்திக்கும்;

அப்பா, அம்மா, சகோதரர்கள்,
சித்தப்பாமார், சித்திமார், மாமாமார்.

சாந்தா தோட்டம்,
ஆவரங்கால், புத்தூர். (1336)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**செல்வன் சண்முகம் உதயவர்மன் (பேபி)**
(புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய கணித, விஞ்ஞான உயர்தர வகுப்பு மாணவன்)

உதயம்: 27 - 02 - 1972 | அஸ்தமனம்: 19 - 06 - 1989

எம் அருமை பேபிக்குஞ்சே!
பால் மணம் மாறாத பச்சிளம் பாலகனும்
தோல்பை தோளிற் கொண்டு சிரித்தழகமாய்
தெள்ளுத் தெறிப்பது போல் செல்லப்பிள்ளையாய் நீ
பள்ளி சென்ற பாத அடி இன்னமும் அழியாத
கோலமடா!
நிமிர்ந்து செல்கின்ற உன் குறுநடையும்
புன்னகை பொலியும் உன் மதி முகமும்
வயதுக்கு மீறிய உன் அறிவாற்றலும் - எம்
உள்ளத்தின் நீங்காத நினைவுகளடா!
உந்தன் சுடர் ஒளிக் கண்களையும்
ஆராய்ந்தறியத் துடிக்கும் கைகளையும்
பொறியியலாளன் என்றிருந்த எதிர்பார்ப்பையும்
கண்ணீரில் மூழ்க விட்டு எங்கு சென்று விட்டாய்?

02 - 08 - 89 புதன்கிழமை கந்தர்மடத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும் கலந்து கொண்டு எங்கள் செல்வ மகன் உதயனின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அவர் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, அண்ணமார்.

ச. சாந்தகுமார்,
13, பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (11657)

'உமாவாசம்'
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

## ஆறும் மாத நினைவஞ்சலி



**கந்தையா யோகநாதன்**
(யோகன்)

உயிர்ப்பு: 03- 11- 1968 | உதிர்வு: 06- 02- 1989

உன்னை நினையாமல் ஊரை, உலகை, இனந்தன்னை நினைந்த தமிழ் யோகா! சின்னப் பருவத்தே புத்துலகம் படைக்கப் புறப்பட்ட திருமகனே! யாம் பெற்ற செல்வா! பொருள், பதவி, பட்டங்கள் என்றுலகம் நாடும் பகட்டனைத்தும் துச்சம் எனத்தள்ளித் தொடுவானை - சுட்டி, இனம் மீள உழைத்த விடிவெள்ளி! நம்மிடையே வாழ மறுபடியும் வா!

உளக்கோயிலில் உன்னை
விளக்காய் ஏற்றி வைக்கும்
பெற்றோர், உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

திருநெல்வேலி தெற்கு. (1282)

## போதைப் பொருள் எதிர்ப்பு சுவரொட்டிப் போட்டி முடிவுகள்

சுண்டிக்குளி, ஆக. 1

யாழ். லியோ கழகமும் நற்சமூக நடு நிலையமும் இணைந்து நடத்திய பாடசாலை மாணவர்களுக்கு இடையேயான போதைப்பொருள் எதிர்ப்புப் பற்றிய சுவரொட்டிப் போட்டியின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

பன்னிரண்டாம் பதின்மூன்றும் ஆண்டுப் பிரிவு:-

முதலாமிடம் இ. நிக்சன் ரஞ்சித்குமார் (யாழ். மத்திய கல்லூரி) இரண்டாமிடம் கோ மதி இராமச்சந்திரன் (மானிப்பாய் மகளிர் கல்லூரி) மூன்றாமிடம் க. சிவராம் (கொக்குவில் இந்துக்கல்லூரி)

ஆறுதல் பரிசுகள்: ப.பகீரதி கந்தசாமி (மண்டைதீவு ம. ம. வி.) வசந்தி கந்தசாமி (மானிப்பாய் மகளிர் கல்லூரி)

பத்தாம் பதினோராம் ஆண்டுப் பிரிவு:-

முதலாமிடம் தில்லைக்கரசி முத்துத்தம்பி (மானிப்பாய் மகளிர் கல்லூரி) இரண்டாம் இடம் ராஜினி கணேசரட்ணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) மூன்றாமிடம் ஜெயந்து துரைராஜா (மனிப்பாய் மகளிர் கல்லூரி)

நான்காம் பரிசு மூவருக்கு வழங்கப்பட்டுள்ளது. தீபா பெனடிக்ற் (யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்) பொ. ரவீந்திரன் (யாழ். மத்திய கல்லூரி) த. உதயசேனன் யாழ். மத்திய கல்லூரி)

ஐந்தாமிடம் பு. தயாளன் (கொக்குவில் இந்துக் கல்லூரி)

ஆறுதல் பரிசுகள்:-

சிந்துஜா (இடைக்காடு ம. ம. வி) மகாவலிவாணி கணபதிப்பிள்ளை, கௌரீஸ்வரி பரராஜசிங்கம், சீதாரமணி கணபதி, ஜெயதேவி சின்னத்துரை, இந்திரா சண்முகராஜா (இவர்கள் மானிப்பாய் மகளிர் கல்லூரிமாணவிகள்) வி. துவாரகேசன் (கொக்குவில் இந்துக் கல்லூரி) சி ஜனகன் (கொக்குவில் இந்துக்கல்லூரி)

ஆகக்கூடுதலான சுவரொட்டிகளை அனுப்பி முதலாம் இடத்தை யாழ் திருக்குடும்ப கன்னியர்மடமும் இரண்டாம் இடத்தை மானிப்பாய் மகளிர் கல்லூரியும் பெற்றன.

### உதவி அரச அதிபர்

அண்மையில் மரணமடைந்த கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. க. குலேந்திராவின் இடத்தில் திரு. வ. சபாபதிப்பிள்ளை உதவி அரசாங்க அதிபராக தற்போது கடமையாற்றி வருகிறார். (க-72)

### பாராட்டு விழா ஏற்பாடு

காங்கேசன்துறை, ஆக. 1

முதுபெரும் தொழிற்சங்கவாதியான காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை பொதுத் தொழிலாளர் யூனியன் முன்னாள் தலைவர் திரு. ச. கணபதிப்பிள்ளை ஓய்வு பெறுவதையொட்டி பாராட்டு விழா ஒன்றை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிமெந்து தொழிற்சாலை வெள்ளி விழா மண்டபத்தில் நடைபெறவுள்ள இப்பாராட்டு விழாவை சிமெந்து பொதுத் தொழிலாளர் யூனியன், காலி, புத்தளம் சிமெந்து ஆலை தொழிலாளர்கள், சிமெந்து ஆலை நலன் புரி உத்தியோகத்தர்கள் உட்பட மற்றும் பல அமைப்புக்கள் இணைந்து நடத்த உள்ளன. (க- 68)


ஸ்டைறோபோம் உற்பத்திகளை (றிஜிபோம்) நாம் தயாரிக்கின்றோம்

- மீன் பிடிக்க உதவும் மிதப்புக் கட்டைகள், ஷீட்டுக்கள், மீன்கொண்டு செல்லும் பெட்டிகள், ஐஸ்கிறீம் கொள்கலன்கள், பைப், இன்சுலேஷன் மற்றும் பொதிகட்டும் பொருட்கள்

மற்றும்

பொலிபிளெக்ஸ் உற்பத்திகளும் (ஆர்பிபோம்)

குஷன்கள், மெத்தைகள், ஷீட்டுக்கள், ஸ்பொன்ஜ்கள் மற்றும் மெத்தை போன்றவற்றைத் தயாரிக்க உதவும் பொருட்களுக்கும்

- கவர்ச்சிகரமான கழிவுகள் வழங்கப்படும்;

வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு முகவர்கள் தேவை.

தொடர்பு கொள்க:
லங்கா பொலிமர்ஸ் (பிறைவேட்) லிமிடெட்.,
49, கெய்சர் வீதி, கொழும்பு-11.
246, நீர்கொழும்பு வீதி, வத்தளை.
29/1, போதிராஜ மாவத்தை, கொழும்பு - 11.
(பீப்பிள்ஸ் பார்க் கம்பிளெக்ஸ்)
தொலைபேசி: 421954, 530455



25,000 ஆசிரியர் பயிலுநர் ஆட்சேர்ப்பு
போட்டிப் பரீட்சைக்குரிய வழிகாட்டி

பொதுஅறிவு - பொது உளச்சார்பு

(1984, 87 Jan, 87 Aug நடைபெற்ற பரீட்சைகளின் மாதிரி வினாத்தாள்களையும் - விடைகளையும் உள்ளடக்கியது.

அஸ்ரன் வெளியீடு - விலை ரூபா 65.50

யாழ்நகரில்:- பூபாலசிங்கம் புத்தகசாலை, ஸ்ரீலங்கா புத்தகசாலை, ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம்

மொத்தமாகப் பெற:-

அஸ்ரன் பதிப்பகம் (இன்ஸ்ரிரியூட்)

166/1, ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம்,
(A. S. சங்கரப்பிள்ளை கட்டடம் 1 ஆம் மாடி, (C/3078)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி





**புஸ்பநாதன் பாலமுரளி**
ஆசிய மண்ணில் வரவு: 24- 0.8 1978
ஐரோப்பிய மண்ணில் விரைவு: 02- 07- 1989


**புஸ்பநாதன் முகுந்தன்**
ஆசிய மண்ணில் வரவு: 11- 12- 1979
ஐரோப்பிய மண்ணில் விரைவு: 02- 07- 1989

ஆசியாவின் இதயமாம் இலங்கைத்
தீவினிலே தோன்றிய இளம்
சிங்கங்களே! முரளி! முகுந்தா!!
நம் வாழ்வின் சூரியனும் சந்திரனும்
ஐரோப்பாவின் காஷ்மீராம் சுவிற்சிலாந்தின்
மலையோரம் சங்கமித்த செய்தி கேட்டு
வானகமும் இடிந்ததய்யா வையகமும் இருண்டதையா!

உங்கள் பிரிவால் ஆறாத்துயரில் நீறாகும் நெஞ்சங்கள்:
அப்பா, அம்மா, சகோதரி, அம்மப்பா, அம்மம்மா
மாமாமார், அன்ரிமார், மாமிமார், பேரன், பேத்திமார்
உற்றார், உறவினர்கள்.

இமையாணன், [illegible]
உடுப்பிட்டி. (1293)


புரோட்டீன் நிறைந்த
புரோட்டீனெக்ஸ்®
பக்கெட் ஒன்றை
இன்றே வாங்குங்கள்!




Grant BJK&E PFL 1158

புரோட்டீனெக்ஸ்® 56% தாவர புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும் அவசியமான விற்றமின்களும் தாதுப்-பொருட்களும் அடங்கியது.

புரோட்டீனெக்ஸ்®
நீங்கள் நாளாந்தம் இழக்கும்
சக்தியை மீட்டுத் தருகிறது

Pfizer

®ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ போபேர்ஸ் பேரத்தில்

# 64 கோடி ரூபா பெற்றவர் 82 கோடி மக்களை ஆள்வதா?

## ராஜீவ் மீது ராமராவ் தாக்கு

ஹைதராபாத், ஜூலை 31
போபேர்ஸ் பீரங்கிபேர ஊழலில் ராஜீவ் அரசு 64 கோடி ரூபாவை லஞ்சமாகப் பெற்றது. 82 கோடி மக்களின் தலைவராக இன்னமும் ராஜீவ் காந்தியை இருக்க அனுமதிப்பதா?

ஆந்திர மாநில முதலமைச்சரும் தெலுங்கு தேசம் கட்சியின் தலைவருமான திரு என்.ரி. ராமராவ் ஹைதராபாத் விமான நிலையத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற கூட்டத்தில் பேசுகையில்முன் கண்டவாறு கூறினார்.

லோகசபையில் இருந்து ராஜினாமாச் செய்த 34 தெலுங்கு தேசம் எம்.பி.க்களுக்கு இக்கூட்டத்தில் வரவேற்பளிக்கப்பட்டது.

திரு. ராமராவ் மேலும் சொன்னதாவது:

தன்னையே கமிஷன் பணத்துக்காக விற்றவர் ராஜீவ் காந்தி.

எதிர்க்கட்சிகள் அரசியல் நடத்துவது ஒரு குழுவின் நலனுக்காக அல்ல; நாட்டின் நலனுக்காக.

ராஜீவ் அடுத்த தேர்தலில் தோற்கடிக்கப்படுவது நிச்சயம்.

இப்படிச் சொன்னார் திரு: ராமராவ்:

# இந்தியப் பொதுத் தேர்தல் எப்போது நடக்கும்?

## ஒரு கண்ணோட்டம்

புதுடில்லி, ஜூலை 31
இந்திய நாடாளுமன்றத் தேர்தல் எப்போது நடைபெறும்?

உரியகாலத்தில் நடைபெறுமென்று பிரதமர் ராஜீவ் காந்தி அறிவித்திருக்கிறார்.

அந்த உரியகாலம் எப்போது? என்ற கேள்விதான் புதுடில்லி அரசியல் வட்டாரங்களில் எழுந்திருக்கிறது.

எதிர்க்கட்சி எம். பிக்கள் 93 பேர் கூட்டாக ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து நாடாளுமன்றம் விரைவில் கலைக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் எதிர்க்கட்சியினரின் ராஜினாமா நடவடிக்கை குறித்து ஆளுங்காங்கிரஸ் கட்சி பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை என அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போதைய நாடாளுமன்றத்தின் ஆயுள் அடுத்தஆண்டு ஜனவரி 14ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

அதற்கு முன்னர் புதிய நாடாளுமன்றம் தெரிவுசெய்யப்படவேண்டும்.

தற்போதைய சூழ்நிலையில் டிசம்பர் மாதத்தில்தான் பொதுத்தேர்தலை நடத்த அரசு தீர்மானிக்கக்கூடும்.

தேர்தலை நடத்தக்கூடிய அரசியல் மற்றும் சூழ்நிலைகள் ஆகஸ்ட் மாதத்திற்கும் செப்டம்பர் மாதத்திற்கும் இடையில் இல்லை என்று அரசு கருதுகிறது.

இக்காலத்தில் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மழைக்காலமாகும்.

அக்டோபர் நவம்பர் மாதங்களில் பண்டிகைகள் வருகின்றன.

நேரு நூற்றாண்டு விழாவின் உச்சக்கட்டம் நவம்பர் மாதம் 3ஆம் வாரத்தில் வருகிறது.

இந்தநிலையில் பொதுத்தேர்தலை முன்கூட்டி நடத்தும் எண்ணம் அரசுக்கு இல்லை என்று கூறப்படுகிறது.

தற்போதைய நாடாளுமன்றத்தின் ஆயுள் நீடிக்கப்படுமா? என்ற கேள்வியும் புதுடில்லி அரசு வட்டாரங்களில் எழுந்துள்ளது.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 83(2) ஷரத்துப்படி, நாடாளுமன்றத்தின் ஆயுள் அவசரகாலச் சட்டத்தின்கீழ் ஒருதரத்தில் ஆறு மாதங்களுக்கு நீடிக்கப்படலாம். எக்காரணங்கொண்டும் ஒரு வருடத்துக்குமேல் நீடிக்கப்பட முடியாது.

இந்திரா காந்தி 1970களில் இந்த விதியைப் பயன்படுத்தி நாடாளுமன்ற ஆயுளை நீடித்தார். ஆனால் பின்னர் நடந்த தேர்தலில அவரது ஆட்சியின் ஆயுளை நீடிக்கமுடியாதுபோய் விட்டது.

இருந்தும் நாடாளுமன்ற ஆயுளை நீடிக்க அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள ஒரு 'குறை'யைப்பயன்படுத்தமுடியும்.

உதாரணமாக வருகிற ஜனவரி 10அளவில் பொதுத்தேர்தல் நடந்தால், நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டம் 1990 ஜூலை மாதமளவில் தான் நடைபெறலாம்.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் கடைசிக் கூட்டத்திற்கும் புதிய நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்திற்கும் இடைப்பட்ட காலம் 6 மாதங்களுக்குமேல் இருக்கக்கூடாது.

இந்தக்குறைபாட்டைத் தவிர்க்கவேண்டும் என்றால் தற்போதைய நாடாளுமன்றத்தின் கடைசிக் கூட்டம் ஜனவரி மூன்றும் திகதியுடன் முடிவடைவதாக இருக்கவேண்டும்.

ஆனால் தற்போது நடந்துகொண்டிருக்கும் நாடாளுமன்றத் தொடர் கூட்டம்தான் கடைசியானது என்று அரசு கூறியுள்ளது:

அப்படியானால் இந்தியப் பொதுத்தேர்தல் எப்போது? (எ)


## பிறந்த நாள் வாழ்த்து



செல்வன்
★ ப. கதாகரன் ★

வண்ணார்பண்ணை மேற்கு நாவலடி ஒழுங்கை பரமலிங்கம்-தேவி தம்பதிகளின் புதல்வன் கதாகரன் இன்று 01-08-89 தனது 9 ஆவது பிறந்தநாளை நினைவு கூருகிறார்.

அவரை அப்பா, அம்மா, அக்கா கவிதாயினி, உற்றார், உறவினர்கள் சீரும் சிறப்புடனும் வளர வாழ்த்துத் தெரிவிக்கிறார்கள்.

(C/3123)


★ இன மோதல் காரணமாக

# சோவியத்யூனியன் சிதறாமல் இருக்க பூரண சமஷ்டி அரசமைப்பு தேவை

## மனித உரிமைவாதி சகாரோவ் கோரிக்கை

மாஸ்கோ ஜூலை 31
சோவியத் யூனியனில் மொல்டேவியா என்ற மாநிலமும் பிரிந்துபோகும் சுயநிர்ணய உரிமை மற்றும் பூரண சுதந்திரம் கோரி கிளர்ச்சி நடத்த ஆரம்பித்துள்ளது.

இம்மாநிலத்தின் தலைநகரில் மொல்டேவியா மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

★ மொல்டேவிய மொழியை உத்தியோக மொழியாகப் பிரகடனம் செய்ய வேண்டும்.

★ பிரிந்துபோகும் உரிமை மொல்டேவிய மக்களுக்கு இருக்க வேண்டும்.

★ மொல்டேவியா நாடாளுமன்றம் இக்கோரிக்கைகளை நிறைவேற்றத் தவறின மக்கள் பொது வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவர்.

இக்கோரிக்கைகளை முன்வைத்து சுமார் 30 ஆயிரம் பேர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்;

40 ஆண்டுகளுக்கு முன்னர் மொல்டேவியா சோவியத் யூனியனுடன் இணைக்கப்பட்டது. அதற்கு முன்னர் மொல்டேவியா ருமேனியா நாட்டுடன் இருந்தது.

சோவியத் யூனியனுடன் இணைக்கப்பட்ட 40ஆவது ஆண்டு நிறைவை ஒட்டியே இந்த ஆர்ப்பாட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது.

இதேவேளை — பௌதிகவியல் நிபுணரும் மனித உரிமைவாதியும் சோவியத் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. அன்ட்ரி சாக்கரோவ், 'சோவியத ஏகாதிபத்தியம்' என்ற நிலைமை மாறி 'சோவியத் சம்மேளனம்' என்ற அமைப்பின்கீழ் செயல்பட்டால்தான் மாநிலங்களில் ஏற்பட்டுவரும் தேசிய உணர்வலைகளைக் கட்டுப்படுத்தலாம் —'' என்று வலியுறுத்தியிருக்கிறார்.

சோவியத் யூனியனிலுள்ள பதினைந்து மாநிலங்களுக்கும் பூரண சுதந்திரம் வழங்கப்பட வேண்டும்; சமஷ்டி அமைப்பின் கீழ் சோவியத் மத்திய அரசு, பாதுகாப்பு, வெளியுறவு, போக்குவரத்து, தொலைத்தொடர்பு ஆகியவற்றை மட்டுமே தன்னிடம் வைத்துக்கொள்ள வேண்டும்-

இப்படி திரு. சகாரோவ் மேலும் சொன்னார்; (எ)

# இந்தியாவில் அதிக வருமானம் பெறும் இந்தி நடிகர் அமிதாப்

புதுடில்லி, ஜூலை 31
அதிக வருமானம் பெறும் இந்தியாவின் பத்து நடிகர்களில் முதலாவது இடத்தை இந்தி நடிகர் அமிதாப்பச்சன் தொடர்ந்து வகித்து வருகிறார்.

லோகசபையில் நிதி இணை அமைச்சர் அஜித்குமார் பஞ்ஜா முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

அப்பட்டியலில் உள்ள ஏனைய நடிகர்கள் விவரம் வருமாறு:

தர்மேந்திர டியோல், ஜிதேந்திரா, மிதுன் சக்கரவர்த்தி, வினோத்கன்னா.

அனில்கபூர், சிரஞ்சீவி, சஞ்சய் அம்ரிஷ்பூரி, ஹேமமாலினி.

வரி செலுத்தத் தவறியதற்காக நடிகர்கள் என்.ரி. ராமராவ், ராஜேஸ் கன்னா, அம்ஜத்கான், தர்மேந்திர டியோல், காதர் கான், நடிகைகள் ஜெயப்பிரதா, டிஸ்முனிம் ரேகா, ஹேமமாலினி, ஆஷா பரேக், பின்னணிப்பாடகர் எஸ். பி. பாலசுப்பிரமணியம் ஆகியோர் மீது வழக்குகள் தொடரப்பட்டிருப்பதாகவும் இணை அமைச்சர் திரு. பாஞ்ஜா தெரிவித்தார் (எ)

## போதைவஸ்து விற்றவர்கள் கைது

சென்னை, ஜூலை 31
ஐந்து நைஜீரியாப் பிரஜைகளும் ஓர் இலங்கைப் பிரஜையும் கடந்த புதன்கிழமை சென்னை நகரில் ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்டிருந்ததாகக் கூறப்படும் சமயம் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து 47கிறாம் ஹெரோய்ன் வெளிநாட்டுப் பணம், சிரிஞ்சுகள், ஊசிகள் ஆகியனவும் கைப்பற்றப் பட்டன.

கைதான ஐந்து நைஜீரியர்களும் சென்னையில் படிக்கும் கல்லூரி மாணவர்களாவர், (எ)

இந்திய அரசியல்

# பதவி விலகிய எதிர்க்கட்சி எம்பிக்கள் மீது புதுடில்லி உயர் நீதிமன்றத்தில் வழக்கு!

புதுடில்லி, ஜூலை 31
அண்மையில் லோகசபையில் இருந்து இராஜினாமாச் செய்த 81 எதிர்க்கட்சிகள் மீது புதுடில்லி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஆகஸ்ட் 8இல் விசாரணைக்கு வர உள்ளது.

வழக்கு தொடரப்பட்ட எம்பிக்களில் ஜனதாதள் எம்.பி. வி.பி. சிங்கும் ஒருவர்;

வழக்கைத் தாக்கல் செய்தவர் அசோக் கே. ராய்.

இராஜினாமாச் செய்ததன் மூலம் இந்த எம்பிக்கள் நாடாளுமன்றத்தை அவமதித்து விட்டனர். ஆகவே அவர்களை வருகிற நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிடத் தடைவிதிக்க வேண்டும்—

இப்படி திரு: ராய் மனுவில் கோரியிருக்கிறார்; (எ)

## சிலி நாட்டில் ஜனநாயகம்

சந்தியாக்கோ, ஜூலை 31
சிலி நாட்டில் நேற்று நடந்த கருத்துக் கணிப்பு ஒன்றில் வாக்காளர்களில் 85 சதவீதமானோர் அரசியல் சீர்திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர்.

1990 முதல் சிலியில் ஜனநாயக அரசாங்கம் ஒன்றை அமைக்க இது வழிவகுக்கிறது.

16 ஆண்டுகளாக ஒரு கட்சி ஆட்சி நடத்திய ஜெனரல் பினோஷோ வருட இறுதியில் பதவி விலகுகிறார். (எ)

# தி.மு.க பெண் அமைச்சர் மீது ஜெயலலிதா அவதூறு வழக்கு

சென்னை, ஜூலை 31
தி.மு.க. பெண் அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன் மீது அவதூறு வழக்குத் தொடரப் போவதாக அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா அறிவித்திருக்கிறார்.

காங்கிரஸுக்கு ராஜ்ய சபை எம்பி பதவியை விற்று விட்டதாக செல்வி ஜெயலலிதா மீது குற்றஞ்சாட்டி திருமதி ஜெகதீசன் ஈரோட்டில் நடந்த கூட்டத்தில் பேசியிருந்தார்.

மூன்று தினங்களுக்குள் அப்பேச்சு வாபஸ் வாங்கப்பட வேண்டும்; அல்லது 20 லட்சம் ரூபா நட்டம்கோரி அவதூறு வழக்குத் தொடருவேன்'— என்று செல்வி ஜெயலலிதா, திருமதி ஜெகதீசனுக்கு வழக்கறிஞர் மூலம் நோட்டீஸ் அனுப்பியிருக்கிறார். (எ)

# மாணவருக்கு முட்டை வழங்குவதை தமிழக அரசு நிறுத்த வேண்டும்!

## சைவ மாநாட்டில் கோரிக்கை

சென்னை, ஜூலை 31
மரக்கறி உணவை உண்பவர்களுக்கு உணவினால் ஏற்படும் நோய்கள் குறைவு. அவர்கள் மருத்துவ மனைகளுக்குச் செல்வதும் குறைவு.

முன்னாள் உபஜனாதிபதி பி. டி. ஜட்டி சென்னையில் 5 ஆவது தேசிய மரக்கறி உண்போர் மாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் முன்கண்டவாறு சொன்னார்:

மரக்கறி உணவின் பயனை உலகில் மக்கள் மத்தியில் பரப்புவதற்கு இந்தியா முன்னணியில் நின்று உழைக்க வேண்டும் என்றும் திரு. ஜட்டி சொன்னார்.

மரக்கறி உண்போர் சம்மேளனப் பொதுச் செயலாளர் சுரேந்திரா மேத்தா பேசுகையில்,

மதிய உணவாக மாணவருக்கு முட்டை வழங்குவதை தமிழ்நாடு அரசு நிறுத்த வேண்டும்; முட்டைக்குப் பதிலாக நல்ல ஊட்டச்சத்து நிறைந்த மரக்கறி உணவை வழங்கலாம் — என்று சொன்னார்: (எ)

## எம். ஜி. ஆர். பல்கலைக்கழகம்

சென்னை, ஜூலை 31
எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் ஆகஸ்ட் 31 ஆம் திகதி அங்குரார்ப்பணஞ் செய்து வைக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி ஆர். வெங்கடராமன் அங்குரார்ப்பண விழாவில் கலந்து கொள்ள விருக்கிறார்; (எ)

# அதிகாரங்களைப் பயன்படுத்த முயலும் பாக். ஜனாதிபதி

இஸ்லாமபாத், ஜூலை 31
மத்திய அரசுக்கும் மாகாண அரசுகளுக்கும் இடையே மோசமடைந்துவரும் அரசியல் நெருக்கடிகளைத் தீர்க்க தனக்கு உள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தப்போவதாக பாகிஸ்தான் ஜனாதிபதி குலாம் இஷாக்கான் அறிவித்திருக்கிறார்.

'ஆனால் முன்னாள் ஜனாதிபதி ஸியா-உல்-ஹக் போன்று சர்வாதிகாரத்தனமாக நான் நடந்துகொள்ளமாட்டேன்' என்று ஜனாப் குலாம் இஷாக் [illegible] (எ)

## கெரில்லாக்கள் பயமுறுத்தல்

பேரூட், ஜூலை 31
கடந்த வெள்ளிக்கிழமை கடத்தப்பட்ட பலஸ்தீன ஹிஸ்புல்லா குழுவைச்சேர்ந்த மூன்றுபேரை விடுதலைசெய்யாவிட்டால் 1988இல் இருந்து பணயக்கைதியாக வைக்கப்பட்டுள்ள அமெரிக்க இராணுவ அதிகாரி கேர்ணல் வில்லியம் ஹிக்கின்ஸைத் தூக்கிலிடப்போவதாக கெரிலலாக் குழு ஒன்று எச்சரித்துள்ளது. (எ)

## கம்போடியா; பாரிஸில் மாநாடு

பத்துஆண்டு காலமாக நீடித்துவரும் கம்போடியத் தகராறுகளுக்குத் தீர்வு காணும் சர்வதேச மாநாடு நேற்று பாரிஸில் ஆரம்பமானது.

15 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் இம்மாநாட்டில் கலந்துகொள்கின்றனர். (எ)


★ முதலாவது ★
பிறந்ததின வாழ்த்து



செல்வன் கு. கிஷோக்குமார்

சங்கத்தானை சாரதா வீதியைச் சேர்ந்த குலேந்திரராஜன் — வேதநாயகி (பேபி) தம்பதிகளின் அருமைப் புதல்வன் கிஷோக்குமார் தனது முதலாவது பிறந்த தினத்தை 01. 08. 1989 இன்று கண்டி வீதியிலுள்ள பெரியப்பா இல்லத்தில் குதூகலமாகக்கொண்டாடுகிறார்; கிஷோர் மீனாட்சி அம்மன் துணையால் பல்கலையும்பெற்று சிறப்புற்று வாழ அப்பா, அம்மா, மற்றும் உற்றார் உறவினர்கள் வாழ்த்துகின்றார்கள்;

(1269)

NEW SCIENCE ACADEMY

B. M, C முன்பாக, JAFFNA.

G. C. E (A/L) 89 Batch

சகல பகல்நேர வகுப்புகளும் நடைபெறவிருக்கும் பரீட்சைக்கான மீட்டல்களுக்காக எதிர்வரும் புதன் (02- 08- 89) முதல் வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறும்.

இலுப்பையடிச் சந்தியில் நடைபெற்று வந்த (Personal Classes) இல் கல்விபயின்றவர்களும் இணைந்து கொள்ளவும்.

90, 91 வகுப்புகளும்
05- 08- 89இல் ஆரம்பம்

— நிர்வாகி

(C/2930)

கொழும்பு
பஸ் சேவை நீடிப்பு

கொக்குவில், தாவடி, கோண்டாவில், இணுவில் சுதுமலை, உடுவில்
ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களின் வேண்டுகோளுக்கிணங்க

காங்கேசன்துறை - கொழும்பு
மினி பஸ் சேவை

தாவடிப் பிள்ளையார் கோயிலடியில் தினமும் தரித்து நின்று சேவையைத் தொடரும்

ஆசனங்களைப் பதிவு செய்யுமிடங்கள்

1. தாவடி: லிங்கம் ஸ்ரோர்ஸ் (தாவடிப் பாடசாலை முன்பாக)
2. மருதனமடம்: எஸ். தர்மராஜா (வாணி விலாஸ் - கூல்பார்)
3. சுன்னாகம்: சண்யோ கூல்பார்
4. தெல்லிப்பளை: தெல்லி எஞ்ஜினியரிங்
5. காங்கேசன்துறை: லக்ஷ்சுதன்ஸ் புக்கிங் சென்ரர்

சேவையில் ஈடுபடும் பஸ்கள்

- ஒலிம்பிக் குறூப்
- காங்கேசன் எக்ஸ்பிறஸ்

பிரதம நிர்வாகி
காங்கேசன் எக்ஸ்பிறஸ்

[சி-2929]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலலையின் கடுமையினுல் கலங்கவுள்ளம்
கர்த்தர் சொல் வார்த்தையினுல் செத்தமநமாறி
விடலையோகு பருவமதில் வேதநெறி கூறி
வேதனைக்கும், சோதனைக்கும் ஆளாகிய தேவே

சென். அன்ரனீஸ்
40, கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

# உதயன்.

01 08 1989 செவ்வாய்க்கிழமை

புடமதனில் வார்த்திட்ட பொன்போன்ற யேசு
புனிதருடன் தவவாழ்வில் பொய்மறைகள் மாழ
திடமனதுடன் அன்னை, தந்தை விலத்தி
தெய்வீக வழிநின்ற யாசப்ப முனியே!

சென். அன்ரனீஸ்.
40, கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

## 'தமிழ் ஈழம்' பிரேரணை தமிழக சட்டசபையில்

### பண்ருட்டி அணி கோருகிறது

சென்னை ஆக. 1

இலங்கையில் 'தமிழ் ஈழம்' அமைக்கும்பிரரேணையை நிறைவேற்ற தமிழ் நாடு சட்ட சபையை உடனடியாகக் கூட்டும்படி முதலமைச்சர் மு. கருணாநிதி க்கு முன்னுள் அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் தலைமையிலான அ. தி. மு. க. கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண தமிழீழம் அமைப்பதேசிறந்த வழி என்று திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் நேற்று முன்தினம் சென்னையில் செய்தியாளரிடம் தெரிவித்தார். (உ-எ)

## போலி பிறப்புச் சான்றிதழ் குறித்து எச்சரிக்கை!

யாழ்ப்பாணம், ஆக.1

பெருந்தொகை பணத்தை வசூலித்துக்கொண்டு பிறப்பு, இறப்பு போலிச்சான்றுப் பத்திரங்களை வழங்குவோர் பற்றி பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

அவர்களைப் பற்றி தகவல்களை அறிந்தால் அரசாங்க செயலகத்தில் உள்ள தமது காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். மாவட்ட அரசியல் இணைப்பாளர் திரு. அ. முருகநேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரசாங்க செயலக ஊழியர்கள் அச்சுறுத்தல்கள் காரணமாக, மட்டுப்படுத்தப்பட்ட நாட்கள் வேலைகளை மேற்கொண்ட காலத்தில், பல ஆயிரக்கணக்கான பிறப்பு, இறப்புச் சான்றிதழ்களுக்கான விண்ணப்பங்கள் குவிந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. தற்போது முழு வேலை நாட்களிலும் அரசாங்க செயலகம் திறந்து கடமை மேற்கொள்ளப்படுவதால் நிலுவையாக இருந்த எல்லா பிறப்பு, இறப்புச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

ஆகஸ்ட் மாதம் தொடக்கம் சான்றுப் பத்திரங்கள் துரிதமாக வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

—இவ்வாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

## யாழ் — மண்டைதீவு பாதை இன்று முதல் பாவனைக்கு!

யாழ்ப்பாணம், ஆக 01

யாழ்ப்பாணம் — மண்டைதீவுபாதை பொதுமக்கள்பாவனைக்காக இன்று முதல்திறந்து விடப்பட்டிருப்பதாக ஈ. பி. ஆர். எல். எப். அறிவித்திருக்கிறது.

மக்களின் வேண்டுகோளைக் கவனத்தில் எடுத்து தமது நிர்வாகிகள் மாகாண அரசுடன் தொடர்புகொண்டதாகவும்—

யாழ். அரசியல் இணைப்பாளர் திரு. அ. முருகநேசன் இது தொடர்பாக அமைதிப்படை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தினர் என்றும் ஈ. பி. ஆர். எல். எப். விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா அரச படைகளின் தாக்குதல்கள் தீவிரமடைந்த காலம் முதல் யாழ்ப்பாணம் - மண்டை தீவுப் பாதைபொது மக்களின் பாவனைக்குத் தடை செய்யப்பட்டிருந்தது. இதனால் மண்டைதீவு மக்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் அல்லைப்பிட்டி வழியாகவே பிரயாணம் செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டிருந்தனர்.

## நேற்று முதல் பரு. பஸ்கள் சேவையில்

வல்வெட்டித்துறை ஆக 1

பருத்தித்துறை போக்குவரத்துச்சபையின் சில பஸ்கள் நேற்று சேவையில்ஈடுபட்டன.

கடந்த 26திகதிஇடம்பெற்ற அசம்பாவிதங்களின் போது மேற்படி டிப்போவை சேர்ந்த இரு ஊழியர்கள் கொலையுண்டதை அடுத்துசம்பவம் நடந்த தினத்திலிருந்து பஸ்கள்சேவையில் ஈடுபடவில்லைஎன்பது தெரிந்ததே. (ஓ-160)

விக்ஞ டியூசன் சென்ரர்
★★★★★★★★★★★★
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

A/L 90, 91 பிரிவு
வழமையான நேர அட்டவணைப்படி
ஆரம்பம்: 05-08-89

O/L ஆண்டு
10, 9, 8, 7, 6 வகுப்புகள்
Day
Evening ] Classes
வழமையான நேர அட்டவணைப்படி
ஆரம்பம்: 02-08-89

புதிய O/L Day 8 30 – 1 30
Evening 3 00 – 5 00
வகுப்புகள் ஆரம்பம்: 04- 8-89

புதிய A/L 91 கலை, வர்த்தக வகுப்புகள் ஆரம்பம்
புதிய பிரிவு 11 05-08-89 (8.00 a.m:)
(சி-2931)

## முல்லைத்தீவில் ஊரடங்கும் தாக்குதலும்

முல்லைத்தீவு, ஆக. 1

முல்லைத்தீவு பட்டின எல்லைக்குள் கடந்த சனிக்கிழமை காலை 7 மணியிலிருந்து 24 மணிநேர ஊரடங்கு இந்திய அமைதிப்படையினரால் பிறப்பிக்கப்பட்டது.

தண்ணீரூற்றுப் பகுதியில் இடம்பெற்ற மோதலே இதற்குக் காரணம் என்று பின்னர் தெரிய வந்தது.

## குருநகரில் சூட்டுச் சம்பவம்

### இளைஞன் காயம்

குருநகர், ஆக 1

குருநகர், சென். ஜேம்ஸ் கிழக்கு வீதியில் நேற்றுக்காலை 10 மணியளவில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றது. இதில இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

குருநகர். 3ஆம் குறுக்கு வீதியைச் சேர்ந்த ஜெயில் ராஜ் (வயது 21) என்பவரே காயமடைந்தவராவார்.

இவர் யாழ்-ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (ஓ-51)

## சாவகச்சேரியில் வேட்டுக்கள்

சாவகச்சேரி ஆக 1

நேற்று முன்தினம் இரவு சுமார் ஏழரை மணியளவில் சாவகச்சேரி நகரில் துப்பாக்கி வேட்டுக்கள், ஷெல் சத்தங்கள் கேட்டதால் மக்கள் பதற்றம் அடைந்தனர். (ஓ-31)

## சுன்னாகம் கிளையிலும்

சுன்னாகம். ஆக 1

இலங்கை வங்கியின் பொன் விழா நிகழ்ச்சிகள் சுன்னாகம் வங்கிக் கிளையிலும் இன்று நடைபெறுகின்றன.

சுன்னாகம் இலங்கை வங்கி மண்டபத்தில் முகாமையாளர் திரு எம் பாலசிங்கம் தலைமையில் விழா நடைபெறும். (த-27)

## மரத்துடன் மோதிய வான்

பச்சிலைப்பள்ளி ஆக 1

பருத்தித்துறையிலிருந்து உடையார்கட்டுக்கு சென்று கொண்டிருந்த கட்டி வான் ஒன்று பாதையிலிருந்து விலகி மரத்துடன் மோதி பலத்த சேதத்திற்குள்ளாகியது.

இதனால் வானில் பிரயாணம் செய்த பலர் காயம் அடைந்தனர்.

இந்தவிபத்து பளை, கச்சார்வெளிச் சந்தியில் இடம் பெற்றது. (த-117)

## இரு சடலங்களும் அடையாளம் காணப்பட்டன

யாழ்ப்பாணம், ஆக 01

யாழ்- ஆஸ்பத்திரியில் பிரேத அறையில் கடந்த மூன்று நாட்களுக்கு மேலாக அடையாளம் காணப்படாமல் இருந்த இரண்டு சடலங்களும் நேற்று அடையாளம் காணப்பட்டன.

ஒருவர் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த வைத்திலிங்கம் சுப்பிரமணியம் (வயது 70) என்பவராவார்.

சலரோக வியாதியுடைய இவர் யாழ் ரயில் கடவைக்கு அருகில் இறந்து கிடந்தார் என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

மற்றையவர் கடந்த 27ஆம் திகதி கந்தர்மடம் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானுர்.

கிருஷ்ணபிள்ளை கிருஷ்ணபாவன் (வயது 21) என்னும் இவர் முத்தையன்கட்டைச் சேர்ந்தவர் என்றும் யாழ்ப்பாணத்தில் கூலி வேலை செய்து வந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-10)

## மீனம்பாக்கம் குண்டு வெடிப்பு:

## இலங்கைத் தமிழர் உட்பட ஐவருக்கு ஆயுள் தண்டனை

சென்னை, ஆக 1

சென்னை விமான நிலைய வெடிகுண்டு வழக்கில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட ஐவருக்கு செங்கல்பட்டு மாவட்ட தலைமை நீதிபதி திரு. சந்தானகிருஷ்ணன் நேற்று ஆயுள்கால சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பு அளித்தார்.

2-8-84 அன்று சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வெடிகுண்டு வெடித்து 31 பேர் உயிரிழந்தனர்; 37 பேர் படுகாயமடைந்தனர்.

இது தொடர்பாக தமிழ்நாடு குற்றப்பிரிவு பொலீஸார் சரவணபவன், சந்திரகுமார், லோகநாதன், விஜயகுமார், பாலசுப்பிரமணியம் ஆகிய 5 பேர் மீது குற்றஞ் சாட்டியிருந்தனர்.

இந்த ஐவரில் ஒருவர் மட்டுமே இலங்கைத் தமிழர். அவரது பெயர் சரவணபவன் சென்னை மருத்துவக் கல்லூரி மாணவர் இவர்.

லோகநாதன், விஜயகுமார் இலங்கை விமான அலுவலகத்திலும், சந்திரகுமார் விமானப் பாதுகாப்புப் படையிலும் பாலசுப்பிரமணியம் என்பவர் மதுரை வர்த்தகர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வழக்கில் பிரதான சந்தேக நபர்களாக இருந்த விக்னேஸ்வரராஜா, உமா, மகராஜ் தம்பிராசா ஆகிய இலங்கைத் தமிழர்கள் இன்னும் தலைமறைவாக உள்ளனர்.

செங்கல்பட்டு மாவட்டத் தலைமை நீதிமன்றத்தில் இவ்வழக்கு விசாரிக்கப்பட்டு வந்தது. 81 சாட்சிகள் இவ்வழக்கில் விசாரிக்கப்பட்டனர். 81 சாட்சிகள் கூறிய சாட்சியங்கள் உண்மையா, பொய்யா என்று ஐந்து எதிரிகளிடமும் தலைமை நீதிபதி திரு. சந்தானகிருஷ்ணன் 125 கேள்விகள் கேட்டார். இதற்கு எதிரிகள் சாட்சியங்கள் அனைத்தும் பொய் என்று கூறினர்.

அதன் பின்னர் சென்ற 22ஆம் திகதி எதிரிகளின் வழக்கறிஞர்கள் தொகுப்புரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து தீர்ப்பு வழங்குவதை நீதிபதி நேற்றுவரை ஒத்திவைத்தார்.

எதிரிகள் அனைவரையும் குற்றவாளிகள் என்று கண்டு. அவர்களுக்கு ஆயுட்காலச் சிறைத்தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார். (இ-க-எ)

## பேச்சுக்களில் --

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரத்தின தலைமையிலான இலங்கைக் குழு இந்திய வெளியுறவு அமைச்சர் பி. வி. நரசிம்மராவ், பாதுகாப்பு அமைச்சர் கே. ஸி. பந்த் ஆகியோரைக் கொண்ட இந்தியக் குழுவுடன் நேற்று ஐந்தரை மணித்தியாலங்கள் பேச்சுக்கள் நடத்தியது.

இந்தப் பேச்சுக்கள் குறித்து அமைச்சர் விஜேரத்தினவும், இந்தியாவில் உள்ள இலங்கைத் தூதர் ஸ்டான்லி கல்பகேயும் தொலைபேசி மூலம் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு உடனுக்குடன் தகவல் தெரிவித்தனர்.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் பின்னரே, நேற்று மாலையில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை இலங்கை அமைச்சர்கள் ரஞ்சன் விஜேரத்தினவும், சாகுல் ஹமீதும் சந்தித்தனர்.

இந்த சந்திப்பு ஒரு மணித்தியாலம் 45 நிமிடம் நீடித்தது. (உ-எ)

## புத்தூர்···

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

32), பொன்னர் இராசா ஆகியோர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். வைத்திலிங்கம் (வயது42) என்ற நபர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

சின்னத்தம்பி, எஸ். சதாசிவம் (வயது 50) செல்லன் தெய்வேந்திரம் ஆகியோரும் இந்தச் சம்பவத்தில் காயமடைந்தனர்.

ஞாயிறு மாலை நடைபெற்ற சம்பவத்தை அடுத்து புத்தூர் பகுதி மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறி அச்சுவேலி நீர்வேலி, மட்டுவில் ஆகிய அயற்கிராமங்களில் தஞ்சமடைந்தனர். (உ-11)

## வடபகுதி:-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கி வந்தபோது பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ரயில் சாரதி ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

இதனை அடுத்து ரயில்வே ஊழியர்கள் வடபகுதிக்கு வர மறுத்தனர்.

பின்னர் கொழும்பில் நடந்த பேச்சுக்களில் பிரஸ்தாப துப்பாக்கிச் சூட்டுக்கு சிங்கள-தமிழ் இனப்பிரச்சினை காரணமல்ல என்று தெரிய வந்ததாம். (இ-9)

## நாளை நல்லூர் உற்சவ கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஆக.01

எதிர்வரும் ஆறும் திகதி ஆரம்பமாக இருக்கும் நல்லூர் கந்தசாமி ஆலய உற்சவ காலங்களில் கடமையாற்றும் சைவத் தொண்டர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை புதன்கிழமை பி. ப. 2 30 மணிக்கு யாழ். மாநகர சபையில் நடைபெற இருக்கிறது.

யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. பொ. பாலசிங்கம் தலைமையில் கலந்துரையாடல் நடைபெறும்.

யாழ் இந்து இளைஞர் பேரவையில் அங்கம் வகிக்கும் சகல இந்து அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (ஓ-3)

## மாவையில் --

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சென்று தரிசித்த வந்தவண்ணம் இருந்தனர்.

மாவிட்டபுரம் கந்தன் தேரேறி வரும் அற்புதக் காட்சியைக் கண்டு அருள் பெற குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் அடியார்கள் வந்திருந்தனர்.

பாற் காவடிகள், பறவைத் துலாக் காவடிகள் நான்கு திக்குகளி இருந்தும் ஆலயத்தை வந்த காட்சிகள் ஆனந்தக் காட்சிகளாக அமைந்தன.

இன்று ஆடி அமாவசை தினத்தன்று மாவிட்டபுரத்தில் இருந்து கீரிமலைக்கு எழுந்தருளும் முருகப்பெருமான் சமுத்திரத தீர்த்தமாடுவார். (அ-51)

## அடம்பன்-:

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் விவரம் வருமாறு!

அடம்பனைச் சேர்ந்த புஷ்பம் பேதுரு (வயது 54) இன்னாசிப்பிள்ளை சகாயநாதன் (வயது 34), மகேந்திரன் மதிந்தா (வயது 1) ஆகியோரே அந்த மூவருமாவர்.

இச் செய்தி நேற்று மன்னாரிலிருந்து அனுப்பும் வேளையிலும் மோதல் தொடர்ந்ததாக எமது செய்தியாளர் அங்கிருந்து அறிவித்தார். (ஒ-ரி-9-10)

## வானொலி, ரூபவாஹினியும் படையினர் கட்டுப்பாட்டில்

கடந்த வெள்ளிக்கிழமை முதல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினி, சுயாதீன தொலைக்காட்சி நிலையம் (ஐ ரி. என் ) லேக்ஹவுஸ் பத்திரிகை நிலையம் ஆகியவை பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்து வருகின்றன.

இந்த ஸ்தாபனங்களில் ஊழியர்கள் மற்றும் பத்திரிகை ஆசிரியர்கள் கடுக்து வைக்கப்பட்டு பணிபுரியவைக்கப்படுவதாக ஏ. எப் பி. செய்தி ஸ்தாபனம் அறிவித்திருக்கிறது.

இலங்கை வானொலியின் செய்திப் பிரிவில் உள்ள சிரேஷ்ட ஆசிரியர் ஒருவர், ''தானும் இன்னும் பத்து பத்திரிகையாளரும் பரா இராணுவத் துருப்புக்களால் வீடுகளில் இருந்து பலாத்காரமாக அழைத்து வரப்பட்டு பணிபுரிய வைக்கப்பட்டுள்ளோம்'' என்று தொலைபேசி மூலம் ஏ. எப். பி. ஸ்தாபனத்துக்குத் தெரிவித்தார்.

ஜே. வி. பி. யினரின் 'இரண்டுநாள் ஊரடங்கு உத்தரவை' ஒட்டியே பாதுகாப்புப் படையினர் இந் நடவடிக்கையை எடுத்தனர்.

இலங்கை வானொலித் தலைமைக் காரியாலயத்தில் தடுத்து வைக்கப்பட்ட ஊழியர்களில் ஒருவர் கூவரேறித் தப்பிச் சென்றார் என்றும் ஏஜன்ஸி செய்தி ஒன்று தெரிவித்தது

## பங்களாதேஷில் 100 பேர் மரணம்

கடும் மழைக்காரணமாக 100க்கு அதிகமானேர் பங்களாதேஷில் உயிரிழந்தனர்.

விருந்து வைபவம் ஒன்றில் கலந்து கொண்டவர்களில் 30 பேரும் அப்போது இறந்தனர். (எ)

## மரண அறிவித்தல்கள்

### கந்தர் இளையதம்பி வேலுப்பிள்ளை

இளவாலை வடக்கு மாயன் பென்சனியர் திரு. க. இ. வேலுப்பிள்ளை அவர்கள் (30-07-89) இறைபதம் சேர்ந்து விட்டார். இவர் காலஞ்சென்ற சின்னத்தங்கத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சோதிப்பிள்ளை, சின்னத்தங்கம், திரு. சங்கரப்பிள்ளை, திரு. விஸ்வலிங்கம், திரு. சிதம்பரப்பிள்ளை (மலாயன் பென்சனியர், விழிசிட்டி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் திருமதி கமலாம்பிகை, திரு. மகாதேவன் (பொறியியலாளர், சிங்கப்பூர்) காலஞ்சென்ற திருமதி சிவபாக்கியம், திருமதி செல்வபாக்கியம், திருமதி சரஸ்வதி, டாக்டர் குணசிங்கம் (லண்டன்), திரு. பாலசிங்கம் (குளோப் றேடேர்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்). திரு. தருமராசசிங்கம் (முகாமையாளர், நந்தி இன்டஸ்றீஸ் அன்ட் ஏஜென்ஸிஸ் லிமிட், ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம் . திரு. தவரத்தினசிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும் திரு. மு. சுப்பிரமணியம் (Retd Head Guard, Railways) ஓய்வு பெற்ற புகையிரத தலைமைக் காப்பாளர்), திருமதி ம. விஜயசக்தியா (சிங்கப்பூர்), காலஞ்சென்ற திரு வ. நவரசிங்கம், காலஞ்சென்ற திரு இரங்கநாதன், திரு. த. ஆறுமுகம் (பொதுமுகாமையாளர், கட்டைவேலி ப. நோ. கூ. சங்கம்), திருமதி கு. மேனகாதேவி (லண்டன்). திருமதி பா. விஜயலட்சுமி, திருமதி த. கமலாதேவி, திருமதி த. ரஞ்சினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும். திருமதி நாவுக்கரசன் சாந்தி (பிரதிப் பணிப்பாளர், இந்து விவகார அமைச்சு, கொழும்பு) செல்விகள் சுசுந்தா (ஆசிரியை), வசந்தி [லிகிதர்] ரேணுகா, சர்வரி, கவிதா, பிரேமிலா [கணக்காளர், சிங்கப்பூர்]. கிருபாகரன், தேவராஜன், ரவீந்திரன், [நோர்வே], திருமதி அமிர்தலிங்கம், நளினி, யாழினி, ராஜ்குமார், ராஜினி, குமாரபரதன், சிவானி, குலதாசன், பிரபாசினி, காயத்திரி, துஷ்யந்தி. நவஜினி, சஞ்சயன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

இறுதிக்கிரிகைகள் 89 - 8 - 02 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:

வே, தருமராசசிங்கம்

இளவாலை, வடக்கு,
இளவாலை.

(1415)

### திருமதி எலிசபெத் சின்னத்தம்பி

திருமதி எலிசபெத் சின்னத்தம்பி காலமானுர். இவர் சாவகச்சேரியைச் சேர்ந்த காலஞ் சென்ற திரு. S. N சின்னத்தம்பி (தென்னிந்திய திருச்சபையின் உபதேசியார்) அவர்களின் மனைவியும், திருமதி அற்புதம் அரசரட்னம் (இளைப்பாறிய ஆசிரியை), அருள் திரு தேவநேசன் (மெதடிஸ்த திருச்சபை (U.S. A.) ஆகியோரின் அன்புத் தாயாரும் திரு. W. J. அரசரட்னம் (இளைப்பாறிய அரசாங்க ஊழியர்), திருமதி தேவமலர் தேவநேசன் (ஆசிரியை U. S. A.), ஆகியோரின் மாமியாரும் திரு. A. J. அரசரட்னம் St. Antonys Consolidated Ltd. Colombo], அருள் திரு. C. A. அரசரட்னம், (மெதடிஸ்த திருச்சபை), திரு. O. J. அரசரட்னம் (சுவிற்சலாந்து), கிருஷாந்த் (U.S.A). ஜெஷாந்த் (U.S.A), ஜெசிக்கா U.S.A) அருள் திருமதி R.J அரசரட்னம் (மெதடிஸ்த திருச்சபை) ஆகியோரின் அன்புப் பேத்தியாரும் ஆவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை 01-08-1989 செவ்வாய்க்கிழமை காலை 10- 00 மணிக்கு 220 கண்டி வீதி, சாவகச்சேரியில் நடைபெறும்.

தகவல்:

திரு. திருமதி அரசரட்னம்

சாவகச்சேரி.

(1416)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 192/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 01-08-1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# 1939 1989 50 இலங்கை வங்கி ஐம்பதாவது ஆண்டு நிறைவுச் சிறப்பிதழ்

## நல்லை ஆதீன முதல்வரின் ஆசி

இலங்கை வங்கியினது 50 ஆண்டு பூர்த்திவிழா நிகழ இருப்பதறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறேம். இவ்வங்கி ஈட்டியுள்ள நற்பெயரை நாம் அறிவோம். நாணய நடமாட்டத்துக்கு வங்கி ஓர் இருதய ஸ்தானம் போன்றது.

சொல்லொணு இடுக்கண் நிறைந்த இக்காலகட்டத்திலும் இங்குள்ள உத்தியோகத்தர்கள் தம்மாலியன்றளவு மக்களுக்குச் சேவையாற்றியமை மகேசன் சேவையாகும். மேலும் அவர்கள் அசைக்க முடியாத இறைநம்பிக்கையோடு மக்களுக்காகப் பிரார்த்தனை செய்ய முன்வந்திருப்பது பாராட்டுக்குரியது.

அவர்களின் இன்னேரன்ன கைங்கரியங்கள் சிறப்புற எல்லாம்வல்ல பரம்பொருளின் பாதார விந்தங்களைத் தியானித்து எமது உளமார்ந்த நல்லாசிகளை வழங்குகிறேம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

நல்லை ஆதீன முதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாச்சாரிய சுவாமிகள்

## மக்கள் நலன் காக்க உறுதி பூணுவோமாக

ஒரு நாட்டின் அபிவிருத்தியில் பங்கெடுத்துக் கொள்கின்ற நிறுவனங்களில் வங்கிகள் மிகமுக்கியமானவை. இரண்டாம் மகாயுத்தத்திற்குப் பின் நாடு அரசியல் சுதந்திரமடைந்ததுடன் பொருளாதார சுதந்திரமும் முக்கியமான இடத்தைப் பெற்றது. இந்தச் சுதந்திரத்திற்கு வணிக வங்கிகள், குறிப்பாக அரச வங்கிகள்வித்திட்டன எனச் சொல்லலாம். இன்று இலங்கையில் இருக்கின்ற இரண்டு பெரிய வணிக வங்கிகளில் முதலில் தோன்றியது என்ற பெருமை இலங்கை வங்கியைச் சேர்கின்றது.

வேகமாக முன்னேறி வருகின்ற விஞ்ஞான, தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி வெற்றிகரமாக இயங்கக் கூடிய சாத்தியக் கூறுகளைக் கொண்ட பாரிய கைத்தொழில் மற்றும் விவசாயத் திட்டங்களுக்கு எமது வங்கி பெருமளவில் கடன் வழங்கி உள்ளது. வர்த்தகத் துறையினருக்கு (உள்நாட்டு, வெளிநாட்டு) மிகவும் கூடிய உதவிகளை வழங்கியதோடு வெளிநாட்டில் வதிவோர் தமது சேமிப்புகளை இந்நாட்டுக்கு இலகுவாக அனுப்பி வைக்கும் வகையில் வதிவற்றேர் அந்நியநாணயக்கணக்கு (NRFC) அந்நிய நாணயக் வங்கிக்கூறு(FCBU)முதலானவற்றை நடைமுறைப்படுத்தி எம்நாட்டுக்குப் பிரதானமாகவும் அவசியமாகவும் தேவைப்படும் அந்நியச் செலாவணி கிடைக்க வழி செய்தது.

**பணிகளை மறக்கவில்லை.**

நாட்டின் தற்போதைய சூழ்நிலைகளில் எமது செயற்பாடு சற்று மெதுவாகச்



சென்ருலும் நாட்டின் தேவைகளையும் அவற்றுக்கு வங்கி செய்ய வேண்டிய உதவிகளையும், பணிகளையும் நாம் மறந்துவிடவில்லை. பொருளாதாரத்திற்கு அடிப்படையான சேமிப்பை ஊக்குவிக்கும் பொருட்டு நாம் அறிமுகப்படுத்திய சேமிப்புச் சான்றிதழ் திட்டம், நாட்டில் குறிப்பாக வடபிராந்தியத்தில் வெற்றிகரமாக நடைபெறுகின்றது என்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

அதே வேளையில் கஷ்டப்பட்ட மக்களுக்கு உதவுமுகமாகப் பல திட்டங்களை– சமூகக் கடன் வழங்கும் திட்டம், சுயதொழில் முயற்சிக்கான கடன்வழங்கல் திட்

(2 ஆம் பக்கம் பார்க்க)

- கே. துரைராசா -
பிரதிப் பொதுமுகாமையாளர் (செயற்பாடு)
இலங்கை வங்கி, மத்திய அலுவலகம், கொழும்பு

## பொருளாதார வளர்ச்சி கருதி பல்துறைச் சேவை புரியும் வங்கி

இற்றைக்குச் சரியாக 50 வருடங்களுக்கு முன்பு தோன்றி, இன்று இந்த நாட்டின் பொருளாதாரத்தில்முக்கிய பங்குவகிக்கும் வங்கிகளில் ஒரு வங்கியாக இலங்கை வங்கி மிளிர்கின்றது. ஏனைய அரச வணிக வங்கிகளைவிட முன்னணியில் நிற்கும் வங்கியாகவும் இது திகழ்கின்றது. இன்று தனது பொன்விழாவைக் கொண்டாடிக்கொண்டிருக்கும் வேளையில் இந்த வங்கியின் தோற்றம், வளர்ச்சி என்பவற்றைப் பற்றிச் சிந்தித்தல், அறிதல் மிகவும் பொருத்தமான ஒன்ருகும்.

20ஆம் நூற்ருண்டின் முதல் முப்பது ஆண்டுக்கால பகுதியிலும் இருந்த பொருளாதார, சமூக, முதலீட்டுக் காரணிகளே இலங்கை வங்கியின் தோற்றத்திற்குக் காரணமெனலாம். 19ஆம் நூற்ருண்டின் இறுதிவரை இலங்கையில் வங்கி வசதிகள், கடன் வசதிகள் என்பன அதிகளவு தேவைப் படாதிருந்தன. இலங்கை பெரும்பாலும் விவசாய நாடாக விளங்கியமையால் மூலதனமாகப் பாவிக்க போதிய முதல் காணப்பட்டது. ஆனுல் அடுத்த 30ஆண்டுகளில் அதாவது 1930 ஆம் ஆண்டுவரை இருந்த நிலைமை



காணப்பட்டது. மக்கள் தம்மிடையே உள்நாட்டுச் சந்தையை விருத்திசெய்வதற்கும் சுதேச முதலீடுகளைச் செய்வதற்கும் விரும்பினுர்கள். இந்த விருப்பத்திற்கு கள், நன்கு அமைக்கப்பட்ட ஒரு வங்கியின் அவசியத்தை உணர்த்தியது.

அக்காலப் பகுதியில் பொருளாதாரத்தில் பலவீனம் ஏற்றதாக அப்போது இருந்த வங்கிமுறை அமைந்திருக்கவில்லை. இதன் விளைவாக, 1920ஆம் ஆண்டளவில் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு தனது அறிக்கையில் விவசாயத்திற்கும், விவசாயிகளுக்கும் முதன்மை இடம் வழங்குவதற்கான அரசவங்கி ஒன்று

**இலங்கை வங்கியின் ஒரு வரலாற்றுக் கண்ணேட்டம்.**

நிறுவப்படவேண்டியதன் அவசியத்தை உணர்த்தியது.

**சில்வாவின் பிரேரணை**

இதன்பின்னர் 1930 ஆம் ஆண்டை அடுத்த காலப்பகுதியில் இரண்டாவது உலகமகாயுத்தத்துக்குச் சற்றுமுன்னர் எமது நாட்டில் ,ஏற்பட்ட பொருளாதார மந்த நிலையானது உலகப் பொருளாதார மந்த நிலையுடன் சேர்ந்து வங்கிமுறை, கடன் வழங்கல் ஆகியவற்றின் அவசியத்தை மக்களுக்கு உணர்த்

( 2 ஆம் பக்கம் பார்க்க)

மு. கனகரத்தினம்,
செயற்பாட்டு முகாமையாளர், வடபிராந்தியம்.

1939 50 1989
ලංකා බැංකුව
இலங்கை வங்கி
Bank of Ceylon

## கஷ்டமான காலங்களிலும் தோழன்

இலங்கை வங்கியின் பொன்விழாவையொட்டி இந்தச் செய்தியை வழங்குவதில் நான் பெருமைப்படுகிறேன் ஐந்து தசாப்தங்களுக்கு முன்னர் நீண்ட அனுபவம் பெற்றன்



வெளிநாட்டு வங்கிகள் இலங்கையிலே ஆதிக்கம் செலுத்தி வந்த காலகட்டத்திலே, இலங்கையரின் தேவைகளை உணர்ந்து, அவர்களுக்காக அவர்களாலேயே 01-08-1939 அன்று ஆரம்பிக்கப்பட்ட இவ்வங்கி, இன்று வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு வங்கிகளின் பலவித போட்டிகளுக்கு மத்தியிலும் சமூக, பொருளாதார மாற்றங்களுக்கிடையேயும், ஆலவிருட்சம் போல், இலங்கையின் சகல பாகங்களிலும் உறுதியாக வேரூன்றி நிற்கின்றது.

இவ்வங்கி ஆரம்பத்தில் ஒரு வர்த்தக வங்கியாக ஆரம்பிக்கப்பட்ட போதிலும், 1961 ஆம் ஆண்டு தேசியமயமாக்கப்பட்ட பின்னர், அபிவிருத்தி வங்கியாக மெல்ல மெல்ல மாறத்தொடங்கி, நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் ஒரு பாரிய பங்கையும் இன்று வகிக்கின்றது.

யாழ் நகரத்தில் முதலாவது இலங்கை வங்கிக்கிளை 1945 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இன்று மொத்தமாக யாழ் மாவட்டத்திலுள்ள ஒன்பது (09) கிளைகளும் இம் மாவட்டத்தின் அபிவிருத்தியில் பெரும்பங்கு வகிப்பதனை நாம் மறுக்க முடியாது. 1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நடந்த-நடக்கும் அசம்பாவிதங்கள் காரணமாகவும்,

(2 ஆம் பக்கம் பார்க்க)

க. கணேசமூர்த்தி
மாவட்ட முகாமையாளர், இலங்கைவங்கி, யாழ்ப்பாணம்.

## யாழ். ஆயரின் நல்லாசி

இலங்கை வங்கி கடந்த ஐம்பது ஆண்டு காலமாக இலங்கைவாழ் மக்களின் நல்வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் செய்துவந்த உன்னத சேவைக்காக இறைவனைப்போற்றுவோம்.

எமது நாட்டின் முதற் சுதேச வங்கியாக உதயமாகி ஐம்பது ஆண்டுகள் அரிய சேவைசெய்து ஈடற்ற நன்மைகளை எல்லா மக்களுக்கும் நல்கி வந்தமைக்காக அவர்களை நாம் நன்றியுடன் நினைவுகூர்ந்து, அவர்கள் நற்சேவையைவாழ்த்தி பாராட்டி இந்த ஸ்தாபனம் இன்னும் வளர்ச்சிபெறவும் மேலும் பல நற்பணிகளில் நாட்டின் அபிவிருத்தியையும் மக்களின் நன்மையையுமே முன்வைத்து செயற்பட வேண்டுமென்று விரும்பி இறைவன் நல்லாசி இந்த நிறுவனத்தின் மேலும் அதில் பணியாற்றும் அனைவர் மீதும் நிறைவாகக் கிடைக்கவும் பிரார்த்திக்கிறேம்.

ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

வ. தியோகுப்பிள்ளை,
யாழ். ஆயர்.

## நன்றியும் நல்லாசியும்

இலங்கை வங்கியின் 50 ஆண்டுகள் நிறைவால் குதூகலிக்கும் பொன்விழாவை முன்னிட்டு யாழ். கிளை இலங்கைவங்கியின் சேவையாளர்கள் தமது பொதுநலச் சேவையில் சாதி, மத, குல, இனபேதமின்றி சமத்துவ நெறியில் நடாத்துவதை எடுத்துக்காட்டுமுகமாக யாழ். இலங்கை வங்கியின் ஆதரவில் யாழ். பஸார் முஹிதீன் ஜும்மா மஸ்ஜிதில் கடந்த 30-06-89 வெள்ளிக்கிழமையன்று முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் சமத்துவ நடத்தை வழிப்போதனை ஏட்டிலிருந்து எடுத்து ஓதப்பட்டு சிற்றுண்டி வைபவமும் வழங்கி யாழ். வாழ் முஸ்லிம் மக்களை மகிழ்வித்தமைக்காக நன்றி கூறுவதுடன்—

அவர்களது சேவையும் நற்பணியும் யாழ். இலங்கை வங்கியின் வளர்ச்சியும் பல்லாண்டு நிலைத்துப் பரவப் பிரார்த்தித்து யாழ். இலங்கை வங்கியின் நடத்துநர்கள், முகாமையாளர், சேவைப்பணியாளர்கள் அனைவரையும் ஆசித்து வாழ்த்துகின்றேம்.

முஹைதீன் மஸ்ஜித் குழு
யாழ்ப்பாணம்.

## நாட்டின் அபிவிருத்திக்கு தன்னை அர்ப்பணித்த வங்கி

இலங்கை வங்கி கடந்த ஐந்து தசாப்தங்களாகத் தேசத்திற்கு அரும் தொண்டாற்றி வருகின்றது என்பதை மக்கள் அனைவரும் அறிவார்கள். 1939 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி ஒரு நிறுவனமாகக் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்ட வங்கி, இன்று சுமார் 600 கிளைகளுடன் இலங்கை முழுவதும் நன்கு வேரூன்றி விசாலித்து நிற்கும் ஆலவிருட்சமாக விளங்குகின்றது.

இலங்கையில் முதன் முதலாகத் தோன்றிய அரசவங்கி என்ற பெருமையையும் இது பெறுகின்றது. ஏறக்குறைய 11, 000 ஊழியர்களைப் பணிக்கமர்த்தி, நாட்டின் அபிவிருத்தியில் முக்கிய பங்கு கொண்டு விளங்குகின்றது. நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கும் விவசாயம்,கைத்தொழில் வர்த்தகம் ஆகிய துறைகளில் தீவிரபங்கு கொண்டு அத்துறைக்குச் சகல விதமான வங்கி உதவிகளையும் வழங்கி




நிற்கின்றது.

அரசாங்கத்தின் தாராள பொருளாதாரக் கொள்கைகளுக்கமைய, தனது செயற்பாட்டினைத் துரிதப்படுத்தி

(2 ஆம் பக்கம் பார்க்க)

பி. ஜே. வின்சன்ட்
உதவிப் பொது முகாமையாளர்,
இலங்கை வங்கி வடபிராந்தியம், மத்திய அலுவலயம் கொழும்பு



அன்றும்



இன்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 இலங்கை வங்கி ஐம்பதாவது ஆண்டு நிறைவுச் சிறப்பிதழ்

## மக்கள் நலன் காக்க---

(I ஆம் பக்கத் தொடர்ச்சி)
டம், சிறு அளவிலான கைத் தொழில்களுக்கு கடன்வழங்கும் திட்டம் — ஆகிய திட்டங்களை ஆரம்பித்து நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

அத்துடன் புனர்வாழ்வு அமைச்சுடன் சேர்ந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவவும் நாங்கள் முன்வந்துள்ளோம்.

எமது வங்கி கஷ்டங்களுக்கு மத்தியிலும், வாடிக்கையாளர்களது நன்மையைக் கருத்திற் கொண்டு மேற்கூறிய கருமங்களை ஆற்றிவருகின்றது. கடந்த காலங்கள் எமக்குச் சாதகமான முடிவுகளையே தந்துள்ளன. அதே போல எதிர்வரும் காலங்களும் அமையவேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன். வாடிக்கையாளராகிய உங்களது ஆதரவு என்றும் எமக்கு இருக்கும் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை ஆகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் எமது வங்கியின் ஐம்பதாவது நிறைவு விழாவை முன்னிட்டு ஓர் சிறப்பு இதழை வெளியிட்ட 'உதயன்' பத்திரிகை நிறுவனத்திற்கு எனது மனமுவர்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ★

## நாட்டின் அபிவிருத்திக்கு....

(I ஆம் பக்கத் தொடர்ச்சி)
நாட்டின் அபிவிருத்தியில் தன்னை அர்ப்பணித்திருக்கின்றது எனச் சொல்லினும் மிகையாகாது.

நாட்டில் அண்மைக்காலங்களில் நடந்த குழப்பங்களுக்கு மத்தியிலும், மக்களுக்குத் தன்னாலான உதவிகளைச் செய்வதில் இவ்வங்கி பின்னிற்கவில்லை. குறிப்பாக வடக்குப் பகுதியில் நடந்த பல்வேறு விதமான குழப்பச் சூழ்நிலைகளிலும், தனது வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்தக் கூடியதாக இலங்கை வங்கியின் சேவை அமைந்திருந்ததை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என நம்புகின்றேன்.

இன்று. எமது வங்கி, தனது 50 ஆண்டுப்பூர்த்தி விழாவை நாட்டின் எல்லாப்பாகங்களிலும் கொண்டாடி மகிழ்கின்ற இந்த வேளையில், நானும் நான் சேர்ந்த வங்கியின் சார்பில் வாடிக்கையாளர்கள், நலன் விரும்பிகள், ஏனைய சக வங்கியாளர்கள் ஆகியோருக்கு வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் சொல்லொலணாத மகிழ்ச்சி அடைகின்றேன்.

வாழ்க எமது வங்கி! வளர்க நம் நாடு! ★

## கஷ்டமான காலங்களிலும்...

(I ஆம் பக்கத் தொடர்ச்சி)
எமது சக்திக்கு அப்பாற்பட்ட காரணிகளாலும் ஒரு முழுமையான வங்கிச் சேவையை நாம் எமது வாடிக்கையாளருக்கு அளிக்க முடியாததையிட்டு, உண்மையிலேயே மனம் வருந்துகின்றோம்.

இருப்பினும் எமது வழமையான வங்கிச் சேவைகளை விட புனர்வாழ்வுக் கொடுப்பனவுகளையும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அளிக்கும் சேவையினையும் நாம் ஏற்றுக் கொண்டோம். ஏறத்தாழ ஒரு லட்சம் குடும்பங்களுக்கான பத்துக்கோடி ரூபாவை எமது வங்கிக்கு ஊடாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் சில வேளை உயிர் ஆபத்தையும் பொருட்படுத்தாது, எமது ஊழியர்கள் இப்பணியில் ஈடுபட்டதை-ஈடுபட்டுக் கொண்டிருப்பதை நாம் இத்தருணத்தில் நினைவு கூருகின்றோம்.

### வாடிக்கையாளர் நல்கிய ஆதரவு

எமக்கு ஏற்பட்ட இடையூறுகள் காரணமாக எமது சேவைகளில் ஏற்பட்டுள்ள தற்காலிகத் தடங்கல்களையும் பொருட்படுத்தாமல் எம்மோடு என்றும் இணைந்து, தங்கள் ஆதரவை நல்கும் வாடிக்கையாளரையும் நாம் அன்போடு இன்று நினைவுகூருகின்றோம். சரியான நேரத்தில் கஷ்டம் ஏற்படும் வேளைகளில் கைகொடுக்கும் ஒரு நல்ல தோழனாக அவர்கள் இலங்கை வங்கியை நோக்குகிறார்கள் என்பது எமக்குப் புரிகிறது.

எத்தனை இடர்ப்பாடுகள் நேரிட்ட போதிலும் இறைவன் ஒருவன் தான் நமக்குத் துணையென்ற நோக்கில், எமது ஐம்பது வருட வழிகாட்டுதலுக்கு நன்றியைத் தெரிவிக்கும் முகமாகவும், இனி வரும் ஆண்டுகளில் அமைதியும், சமாதானமும் நிலவ வேண்டுமென்று கோரியும், நாம் கடந்த இருமாத காலங்களில், சர்வமத வழிபாடுகளையும் நடத்தியதையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றோம்.

இவ்வழிபாடுகளில் எமது உயரதிகாரிகள் மட்டுமல்லாமல், பெருந்திரளான வாடிக்கையாளர்களும், ஊழியர்களும் நலன்விரும்பிகளும் கலந்து கொண்டனர். இத்தருணத்தில் எமது பொன் விழாவையொட்டி, அறிமுகப்படுத்தப்பட்ட சேமிப்புச் சான்றிதழ் திட்டத்தைப் பற்றியும் மக்கள் மத்தியில் நாம் விளக்கினோம். மற்றைய வங்கிகளின் வட்டி விகிதங்கள் கவர்ச்சிகரமாக இருந்த போதிலும், அந்தக் கவர்ச்சிகளில் சிக்காமல், 30 லட்சம் ரூபா பெறுமதியான சேமிப்புச் சான்றிதழ்களைக் கொள்வனவு செய்து, எம்மை ஆதரித்த எமது வாடிக்கையாளரின் தோழமை எம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றது,

இந்த மத நிகழ்ச்சிகளைப் புனிதத்தன்மையோடு நடாத்தித் தந்த மதகுருமாரின் பாதங்களில் எமது நன்றியையும் இத்தருணத்தில் நாம் சமர்ப்பிக்கின்றோம்.

எமது பொன்விழாவை ஓட்டி, மாணவ மாணவிகளுக்கான ஒரு கட்டுரைப் போட்டியையும் கல்வி அமைச்சுடன் இணைந்து நாம் நடத்தினோம். இதனை வெற்றிகரமாக நடத்த எமக்கு உதவிய பிராந்திய கல்விப்பணிப்பாளர் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகளுக்கு எமது மனமார்ந்த நன்றியை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஒரு ஸ்தாபனம் எவ்வளவு நீண்ட காலத்திற்கு இயங்கிக் கொண்டு இருக்கிறதோ அதனை அடிப்படையாகக் கொண்டு அதன் வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் கணிப்பிட முடியும்

ஐம்பது ஆண்டுகளாக ஒரு ஸ்தாபனம் மக்களுக்குத் தொண்டாற்றி வருகின்றதெனில், அது ஒரு சரித்திர முக்கியத்துவம் பெற வேண்டிய தொண்டாகும். காலத்திற்குக் காலம் நாட்டில் ஏற்படும் சூழலுக்கு இசைந்து கொடுத்து சேவையாற்றி வரும் இலங்கை வங்கி, பல இக்கட்டான சூழ்நிலைகளையும் சந்தித்து, 51 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் இச் சந்தர்ப்பத்தில் எமது சேவைகள் இடையறுது தொடரவும் அமைதியும், செல்வமும் கொழிக்கும் இலங்கையை உருவாக்குவதற்கும் இறைவன் அருள் புரிவாராக. ★

# இல்லாதவருக்கும் இருப்பவருக்கும்

# பாகுபாடில்லாத உதவி - சேவை

ஒரு சிறிய அழகிய தீவில் எத்தனையோ பிரச்சினைகள் மத்தியில் ஒரு நிதி நிறுவனம் தனது பொன் விழாவைக் கொண்டாடுகிறதென்றால் அது அந்த நிறுவனம் செய்த சாதனையையே குறிக்கிறது!

அந்த நிறுவனம் இலங்கை வங்கியாகத்தானிருக்கும் என்பதில் எவருக்கும் ஐயமிருக்க முடியாது. மேலைத்தேசத்தவர் ஆட்சியின்போது ஆரம்பிக்கப்பட்டது இலங்கைவங்கி.

எத்தனை எத்தனை வருடங்கள்! என்ன என்ன மாற்றங்கள்! எத்தகைய அரசியல் சிந்தனைகள்! எனினும் இலங்கை வங்கி காலத்துக்குக் காலம் திட்டமிட்டபடி தனது நடவடிக்கைகளை மேற்கொண்டது.

பாரிய அரசியல் மாற்றங்கள் அடிக்கடி இடம்பெற்றன, எத்தனையோ புதுப்புது நிறுவனங்கள் நாட்டில் தோன்றின. எனினும் சளைக்கவில்லை இலங்கைவங்கி!

அரிய பெரிய திட்டங்களை அறிமுகப்படுத்தியது இலங்கைவங்கி! புதுப்புதுத் திட்டங்கள்! வர்த்தகர்க்கேற்ற வளமிகுதிட்டங்கள்! விவசாயிகளுக்கேற்ற விந்தை மிகு திட்டங்கள்! தொழிலாளர்களுக்கு தொண்டுகள் செய்வோம்! ஏற்றுமதியாண்டு ஏற்றமிகு திட்டங்கள்! இறக்குமதியாளருக்கு இலகுவான வழிவகைகள்! மீன்பிடியாளருக்கு பாரிய திட்டங்கள்! வீட்டுக்குக் கடனா? விரும்புங்கள் இலங்கை வங்கியை! காலநேரத்திற்கேற்றவகையில் சேமிப்புத் திட்டங்கள்! கவர்ச்சியானவிதத்தில் நிலையான வைப்புக்கள்! பால்குடிப் பாலகர்க்கும் பாங்கான

- ஆ, இரகுபதி பாலஸ்ரீதரன் -
(இலங்கை வங்கி, காங்கேசன்துறை)

திட்டங்கள்! பல்லில்லாப் பாட்டாவுக்கும் 'பென்ஷன்' வழங்குகிறோம்! சம்பளப் பணமா? சரியான சமயத்தில் வெளிநாட்டுப் பணமா, வெள்ளிக்காசா? உடன் மாற்ற வேண்டுமெனில் — அது இலங்கை வங்கியில் தான் முடியுமெனப் பெரும் பெயர் பெற்றோம்!

பொன்விழாவையொட்டிப் புதுப்புதுத் திட்டங்கள்! ஜன சக்தி சனங்களைக் கவர்கிறது! 'முகவர்' திட்டம் முதன்மையடைகிறது!

இன்னும்எண்ணிறைந்தவை. எதில் நாம் சளைத்தோம்? எதில் நாம் பின்னின்றோம்?

பல்கலைக்கழக மாணவருக்கு] கடன்கள் வழங்குகின்றோம்! நிவாரணம் வழங்கத் தயாராக உள்ளோம்!

அண்டிவந்தோரை அன்புடன் அரவணைத்தோம். ஏழை, எளியவர் வித்தியாசம் அறியோம். பணம் இல்லாதவர்களுக்கும் இருப்பவர்களுக்கும் உதவுவது இலங்கை வங்கி. இனிய முகத்துடன் உபசரித்தோம். எனினும் என்ன? எல்லாப்பிரச்சினைகளுக்கும் எம்மால் தீர்வு காண முடியுமா என்ன?

எமக்கு எதிரில் எங்கோ வெகுதூரத்தில் ஒளிமயமான எதிர்காலம் தெரிகிறது! அதற்கு வங்கியாளராகிய நாம் மாத்திரம் பாடுபட்டால் போதாது என்பதையும் நாங்கள் உணருகின்றோம்.

### வாடிக்கையாளர் ஆதரவை நாடுகிறோம்

எமது இனிய இலங்கை வங்கியும், எம்மால் அறிமுகப்படுத்தப்பட்ட அனைத்துப் பயன் மிகு பொருளாதாரத் திட்டங்களும் சரிவரச் செயற்பட்டு, பெருவெற்றியளிக்கப் (VI ஆம் பக்கம் பார்க்க)

## பொருளாதார வளர்ச்சி கருதி----

(I ஆம் பக்கத் தொடர்ச்சி)
தியது. உலகின் ஏனைய சில நாடுகளிலும் இதே போன்ற நிலை இருந்தமை குறிப்பிடத்தக்கது. இங்கிலாந்து, கனடா போன்ற மேலைத்தேச நாடுகளிலும் இந்தியா, இலங்கை போன்ற கீழைத்தேச நாடுகளிலும் மாறுபடுகின்ற பொருளாதார நிலைமைகளின் கீழ் அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு வங்கிகளின் தேவைகள் நன்கு உணரப்பட்டன. வங்கிகளை அமைக்க அரசாங்கங்கள் நடவடிக்கைகளை எடுத்தன.

இலங்கையில் 1933 ஆம் ஆண்டு அரசாங்க நிர்வாகக் குழு இதை நன்கு உணர்ந்தது. அன்று பிரதேச சபையில் கண்டிப் பிரதேச உறுப்பினராக இருந்த திரு. ஈ. டி. சில்வா (பின்னர் சேர். ஏனஸ்ட் டி' சில்வா) வர்த்தகம், வங்கிமுறை. காப்புறுதி பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ஓர் ஆணைக் குழு அமைக்கவேண்டும் என்ற பிரேரணையைக் கொண்டுவந்தார். அதன் விளைவாக 1934 ஆம் ஆண்டு ஏப்ரலில் ஓர் ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இவ்வாணைக்குழு நாட்டின் வங்கித்தேவைகளை, மிக முக்கிய துறைகளான, விவசாயம், கைத்தொழில், வர்த்தகம் ஆகியவற்றுடன் தொடர்புபடுத்தி அவற்றிற்குக் கடன் வழங்குதல் சம்பந்தமான விஷயங்களையும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்தது.

இந்த ஆணைக்குழுவில் அங்கம் வகித்தவர்களில் பின்வருவோர் குறிப்பிடத்தக்கவர்கள், அக்காலத்திலிருந்த வரையறுக்கப்பட்ட இந்திய மத்திய வங்கியின் நிர்வாக இயக்குநர் சேர் சொராப்ஜி பொக்கனவாலா, சேர் மார்க்கஸ் பெனுன்டோ ஆகியவர்களும் மற்றும் செயலாளராக விளங்கிய கலாநிதி டி. பி. தாஸ் குப்தாவும் (பின்னர் இலங்கை பல்கலைக்கழகத்தில் பொருளியல் பேராசிரியர்), அவருக்கு உதவியாக இருந்த முன்னாள் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும், தற்போது வரையறுக்கப்பட்ட மேர்க்கன் டைல் கிரடிட் கொம்பனியின் இயக்குநருமான திரு. என். யூ. ஜெயவர்த்தனவும் அடங்குவர். இந்த ஆணைக்குழுவினர் விதைந்துரைகளை ஏற்றுக் கொண்ட அக்காலத்தைய தேசிய சபை, பலவிதக் கருத்துப் பரிமாறுதலின் பின்பு, வங்கி நிறுவுவதை அங்கீகரித்து 1938 ஆவது வருட 53 ஆம் இலக்கசட்டத்திற்கமைய இலங்கைவங்கி ஸ்தாபிக்கப்பட்டது.

### 1939 ஆகஸ்ட் 1 இல்

இலங்கை வங்கி 1939 ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதலாம் திகதி இலங்கை வர்த்தக சம்மேளன கட்டிடத்தை வாடகைக்கு எடுத்து அதில் தனது வங்கி அலுலல்களை ஆரம்பித்தது. கொழும்பு கோட்டையில் பல அரசாங்க நிறுவனங்களின் கட்டடங்களுக்குச் சமீபமாக, பிறிஸ்டல் வீதியில் இது அமைந்திருந்தது. வங்கியின் முதல் தலைவராக சேர் ஏனஸ்ட் டி' சில்வா நியமிக்கப்பட்டார். பொது முகாமையாளராக திரு. டபிள்யு. பி மக்கே நியமிக்கப்பட்டார். வங்கியின் முழு முன்னுரிமை பங்கு மூலதனம் ரூபா 15 லட்சம் அரசாங்கத்திற்கே ஒதுக்கப்பட்டது. சாதாரண பங்கு மூலதனம் ரூபா 30 லட்சம் பொதுமக்களுக்கு விற்கப்பட்டு உடனடியாகவே அதற்குரிய பணம் செலுத்தப்பட்டது.

வங்கியின் ஆரம்ப கால ஊழியர்களுடைய கடின உழைப்பினால் வங்கியின் முதலாவது கிளை 1941 இல் கண்டியிலும், அதற்கு அடுத்த கிளை 1942 ல் காலியிலும், அதற்கு அடுத்த கிளை அடுத்த ஆண்டு கொழும்பு புறக்கோட்டையிலும் திறக்கப்பட்டன.

### யாழ்ப்பாணக் கிளை

1945 ஆம் ஆண்டில் தற்போதைய பரணி ஹோட்டல் இயங்குகின்ற கட்டிடத்தில், யாழ்ப்பாண நகரில் இலங்கை வங்கியின் கிளை ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கட்டடம் தற்போதைய யாழ் பொது வைத்தியசாலையில் வெளி நோயாளர் பிரிவுக்கு எதிர்ப்புறத்தில் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்திருந்தது. ஆரம்பத்தில் [illegible] ஊழியர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கிளை இன்று ஒரு பெரிய ஆலவிருட்சமாகப் பரந்து சிறந்து விளங்குவதைக் காணலாம். இதே ஆண்டில் திருகோணமலையிலும் ஒரு கிளை ஆரம்பிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இலங்கையின் பல பாகங்களிலும் வங்கி தனது கிளைகளை நிறுவி ஒரு தனிப் பெரும் அரச வங்கியாக விளங்கியது.

இரண்டாம் மகாயுத்தத்தின் இறுதியில் இவ்வங்கி தனது வெளிநாட்டுக்கிளையை நிறுவியது. கிரான்ட் ஓரியன்டேல் ஹோட்டேல் கட்டடத்தில் அமைந்த இந்த வெளிநாட்டுக் கிளை யுத்தத்திற்குப் பின்னர் ஏற்பட்ட வெளிநாட்டு வர்த்தக விருத்திக்கு மிகவும் ஏற்புடையதாக அமைந்தது. இதைத் தொடர்ந்து 1949 ஆம் ஆண்டு இலங்கை வங்கியின் முதலாவது வெளிநாட்டுக் கிளையாக லண்டன் கிளை நிறுவப்பட்டது.

### பொதுமுகாமையாளரான முதல் இலங்கையர்

இதுவரை காலமும் இலங்கையர் அல்லாதாரே இலங்கை வங்கியின் பொது முகாமையாளராக இருந்து வந்தார்கள். இந்த நிலை மாறி 1953 ஆம் ஆண்டில் முதலாவது இலங்கையரான திரு. சி. லோகநாதன் பொதுமுகாமையாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டார். தனது அயராத முயற்சியினாலும் சிறந்த முகாமைத்துவத்தினாலும் இவரைப் பொது முகாமையாளராகக்கொண்டு வங்கி வேகமாக முன்னேறியது. மத்திய காரியாலயம் அமைக்கப்பட்டதுடன் சிறிய நகரங்களிலும் கிளைகள் அமைக்கப்பட்டன. குருநாகல், மட்டக்களப்புப் போன்ற கிளைகளை இதற்கு உதாரணமாகக்கொள்ளலாம்.

வாடகைக் கட்டடத்தில் தனது மத்திய காரியாலயத்தை அமைத்த இலங்கை வங்கி 1955 ஆம் ஆண்டில் (கிராண்ட் ஒறியன்டேல்) அக்கட்டடத்தை கொள்முதல் செய்தது. இக்கட்டடத்தில் வங்கிக்கு விசாலமான ஒரு மண்டபத்தை (IV ஆம் பக்கம் பார்க்க)

இலங்கை வங்கியின்
பொன் விழாப்
பூர்த்தியை முன்னிட்டு
அதன் சேவை மேன்மேலும் வளர
எமது இதயம் நிறைந்து கனிந்த
நல்வாழ்த்துக்கள்

★ ஹட்டன் ★
நஷனல் வங்கி
லிமிட்டெட்
யாழ்ப்பாணம்.

ரவி அன்
ராஜ் சில்க்ஸ்
77, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

எம். சண்முகம்
அன் பிறதர்ஸ்
85, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பெட்டா ஏஜென்சி
8
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

கோல்டன் செரமிக்
இல: 2-D ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

முருகன் ஸ்ரோர்ஸ்
சிறுப்பிட்டி மத்தி,
நீர்வேலி.

LIQUOR
RESTAURANT
NO: 4,
KAYTS.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வங்கி ஐம்பதாவது ஆண்டு நிறைவுச் சிறப்பிதழ்

## பொதுமுகாமையாளர் வாழ்த்துகின்றார்

ஐம்பது வருட சரித்திரத்தைத் தன்னுள் அடக்கி எத்தனையோ எதிர்ப்புகளைச் சந்தித்த இலங்கை வங்கி தன் பொன் விழாவைக் கொண்டாடும் நேரத்திலும் சோதனைகளைச் சந்தித்துக்கொண்டுதான் பீடுநடை போடுகின்றது என்பதை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை.

சுடச் சுடத்தான் சங்கு வெண்மை பெறுகின்றது; உருக்க உருக்கத்தான் பொன் அதிகப் பொலிவடைகின்றது. இதைப்போல்தான், தான் அடைந்த சோதனைகளையே இலங்கை வங்கி சாதனைகளாக மாற்றியிருக்கின்றது.

இந்த நாட்டிற்கும் அதன் மக்களுக்கும் என்றும் சேவை செய்த இந்த வங்கி இனி வரும் ஆண்டுகளில் இன்னும் அதிக சேவைகள் புரிந்து, இந்த நாட்டின் சுபீட்சத்திற்கும், சமாதானத்திற்கும் வழிவகுத்து, உலகப் புகழ்பெற்ற வங்கியாக வளரவேண்டுமென்று பிரார்த்திக்கும் அதேவேளையில், இதன் வளர்ச்சிக்காக உழைத்த, உழைக்கும் எனது அன்பான ஊழியர்களுக்கும் எமது வாடிக்கையாளர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அத்துடன் எமது பொன்விழாவையொட்டி இவ்வளவு அழகிய அறிவாழமுள்ள ஒரு மலரை வெளியிட முன்வந்த 'உதயன்' நிறுவனத்தாருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ரோஹினி நாணயக்காரா,
பொதுமுகாமையாளர்.
இலங்கை வங்கி,
கொழும்பு-1.



இலங்கை வங்கியின் யாழ்ப்பாண மாவட்ட அலுவலகம் மற்றும் பிரதானகிளை அமைந்துள்ள கட்டடத்தின்கம்பீரமான தோற்றம்.

## நற்சேவை புரியும் ஊழியரை உயர்த்தி வளர்க்கும் வங்கி

எமது இலங்கை வங்கி தன் பொன்விழாவைக் கொண்டாடுவது எல்லோருக்குமே பெரு மகிழ்ச்சிதரும் அரிய நிகழ்ச்சியாகும்.

இலங்கை வங்கி தொடங்கிய காலத்தில் சாதாரண



மக்களுக்குச் சேவையாற்றவல்ல வேறு வங்கிகள் இருக்கவில்லை. அது இன்று, இலங்கை மக்களுக்கு மட்டுமன்றி பிற நாட்டு மக்களுக்கும், பல ...னல்கள் மத்தியிலும் பெருஞ்சேவை செய்து வருகிறது.

இனபேதம், மொழிபேதம், நிறபேதம், சாதிபேதம் முதலாய பாகுபாடுகளைக் கடந்து நின்று, ஏழை செல்வரென்றும், சிறுவர் முதியோரென்றும் பாராது, எல்லோரும் பயன்பெறுமாறு, இஃது உழைத்துவருகிறது.

காலத்துக்குக் காலம், பொருத்தமான பல்வேறு பொருளாதாரத் திட்டங்களையும், சேமிப்புத் திட்டங்களையும் கடன் திட்டங்களையும் அறிமுகப்படுத்தியும், உலகளாவிய சார்பில் வங்கி நிதித் திட்டங்களை மாற்றியும், வெளிநாட்டுச் செலாவணியை உடன்பணமாக்கியும், பலரும் பயன்பெறுமாறு, எல்லோரையும் அணைத்து வளர்த்து வருகிறது. இதனால், இதன் வளர்ச்சியில் தொடர்பு கொண்ட எல்லோரும் பொன் விழாக்காணும் இச்சந்தர்ப்பத்தில் பெருமகிழ்ச்சியும், பெருமையும் அடைவதில் வியப்பொன்றுமில்லை.

இங்ஙனம் எல்லாச் சிறப்பும் தன்னகத்தே கொண்டு விளங்கும் இலங்கை வங்கிக்குத் தனிப்பட்டமுறையில் நான் பெரிதும் கடமைப்பட்டவன் என்பதை பணிவோடு குறிப்பிட விழைகின்றேன். ஒரு சாதாரண எழுதுவினைஞனாகச் சேர்ந்து, அதன் அரவணைப்பில் இன்று உயர்ந்து வளர்ந்திருக்கும் பேறுபெற்றேன். நற்சேவை புரியும் ஊழியரை அது கைவிட்டதில்லை என்பதற்கு நான் ஓர் உதாரணம்.

இலங்கை வங்கி ஒரு பெரிய ஆலவிருட்சம். அதன் நிழலில் பலர் வாழ்கிறோம். அது பல விழுதுகள்விட்டு, மேலும் பல விழுதுகள் விட்டு, மேலும் பரந்து வளரும்போது இன்னும் பலர் அதன் நிழலில் சுகம்பெறுவர்.

பொன்விழாக்காணும் எங்கள் இலங்கை வங்கி, இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து பல சேவைகளை ஆற்றி மேலும் பல விழாக்களைக்காணவேண்டுமென்று மனமார வாழ்த்துகிறேன்!

வாழ்க இலங்கை வங்கி!
நீடு வாழ்க!!

க. திருநாவுக்கரசு
பிரதான முகாமையாளர்
இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்.

### மக்கள் வங்கி வாழ்த்துகிறது!

தன் மாபெரும் சேவையில் 50 வருடங்களைப் பூர்த்திசெய்து பொன் விழாக் கொண்டாடும் எமது சகோதர வங்கியான இலங்கை வங்கி மேன்மேலும் வளர்ச்சி அடைய வாழ்த்துகின்றோம்.

மக்கள்வங்கி
யாழ்ப்பாணம்.

## யாழ். ஆதீனத்தின் பேராயர் வாழ்த்துகிறார்

இந்த ஆண்டு 50 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இலங்கை வங்கிக்கு எனது இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

இலங்கையில் உள்ள மிக முக்கியமான தேசிய வங்கி என்ற முறையில் எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் இலங்கை வங்கி குறிப்பிடத்தக்க, தீர்க்கமான பாத்திரத்தை வகித்திருக்கிறது. தனியார் நபர்களும், ஸ்தாபனங்களும் சேமிப்பில் ஈடுபடவும், முதலீடு செய்யவும் இலங்கை வங்கி பெரும் ஊக்கம் அளித்துள்ளது. ஆரம்பம் தொட்டே எமது திருச்சபை இலங்கை வங்கியுடன் தொடர்புடையதாக இருந்து வருகின்றது. இலங்கை வங்கியின் நிர்வாகத்துக்கும், ஊழியருக்கும் ஆண்டவனின் நல்லாசி கிடைப்பதாக!

இலங்கை வங்கி தொடர்ந்து எமது மக்களினதும், தேசத்தினதும், பொருளாதார வளர்ச்சியில் பயன்தரும் பாத்திரம் வகிக்க வேண்டும் என்று ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வண. டி. ஜே. அம்பலவாணர்
ஆதீன பேராயர்,
தென் இந்தியத் திருச்சபை.
பேராயர் இல்லம்,
வட்டுக்கோட்டை.

## பணப் புழக்கத்தைத் தவிர்க்க ஒரு புதிய முறை: "சீபாங் கார்ட்"

பணமில்லாத ஒரு சமுதாயம் இன்று சாத்தியமா என்று நீங்கள் யோசிக்கலாம்.

ஆம், பணமில்லாமலே தங்களுக்குத் தேவையான பொருள்களை வாங்குவதற்கும், சேவைகளைப் பெறுவதற்கும் ஏற்றவாறு ஒரு திட்டத்தினை, தனது 50 ஆவது வயதினைக் கொண்டாடும் எமது இலங்கைவங்கி, மக்களுக்கு ஆற்றும் பல பணிகளில் ஒன்றாக அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன் வெற்றி எமது மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. கடந்த 5,6 வருடங்களாக எம்மக்கள், வங்கிகளில் இருந்து பணத்தைப் பெறுவதற்கும் பல கஷ்டங்களின் மத்தியில் தமது காலத்தையும் நேரத்தையும் செலவு செய்தனர். ஆகையால் தற்பொழுது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இத்திட்டம் நல்லமுறையில் செயல் உருவம்பெறும்பொழுது, பொருள்களை வாங்குவதற்கோ, உணவு விடுதி மற்றும் வைத்திய சாலைகளினதும், இதுபோன்ற நிறுவனங்களினதும் சேவைகளைப் பெறுவதற்கோ, பணத்தைக் கொண்டுசெல்லவேண்டிய அவசியமில்லை.

இவ்வசதியினை மக்களுக்கு அளிப்பதற்காக, 'கடன் அட்டைகள்' மூலம் 'சீ பாங்கார்ட்' (Cey Bank Card) என்ற பெயரில் உலகப் பிரசித்திபெற்ற 'விசா' (Visa) நிறுவனத்தினருடன் இணைந்து இலங்கை வங்கியினர் புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளனர். விசா நிறுவனத்தினருடன் இலங்கைவங்கி இத்திட்டத்தில் இணைவதன்மூலம் 'சீ பாங் கார்ட்' உலகின் பல பாகங்களிலும், பாவனைக்கு ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு செய்துள்ளது. அதன்மூலம் உயர்த்திஉள்ள அதே வங்கி தனது தராதரத்தை வேளை, தனது ஸ்திரத்தை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

இந்தக்கடன் அட்டைத்திட்டம், மேலைநாடுகளிலும், பல அபிவிருத்தியடையும் நாடுகளிலும் பல வருடங்களுக்கு முன்னரே நடைமுறைப்படுத்தப்பட்டு, வெற்றிகண்டுள்ளது. மேலை நாடுகளில் இந்த அட்டை இல்லாதவர்கள் இல்லை என்றே கூறலாம். சுமார். 160 நாடுகளில் 180 கோடி மக்கள் இதன் பலனை அனுபவித்து வருகின்றனர். இந்தக் 'கார்ட்' முறையை எமது நாட்டில் ஏற்கனவே அறிமுகப்படுத்தத் தாமதமாகியதற்குப் பல காரணங்கள் இருந்தன.

'சீ பாங் கார்ட்'டின் தன்மைகள், நுட்பங்கள் என்ன, அதன் பாவனையாளர்கள், வியாபாரிகள் அடையும் நன்மைகள் யாவை என்பதை மக்கள் ஓரளவு அறிந்துகொள்வது நல்லதல்லவா?

### இரண்டு வகை

இலங்கை வங்கி தற்பொழுது பொன் மற்றும் வெள்ளி நிறங்களில் உள்நாட்டில் அதாவது இலங்கையில் மட்டும் பாவனைக்கு என இரண்டு வகை 'சீ பாங் கார்ட்' ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. காலக்கிரமத்தில், உலகில் பலபாகங்களிலும் பாவனைக்கு ஏற்றவிதத்தில் இதுபோன்ற 'கார்ட்' முறையை அறிமுகப்படுத்தவுள்ளனர்.

பிளாஸ்ரிக்கினால் உருவாக்கப்பாட்டுப் பலதொழில் நுட்பங்களை உள்ளடக்கிய இந்த 'சீ பாங் கார்ட்' சர்வதேச பிரமாணங்களுக்கு ஏற்ற அளவில் தயாரிக்கப்பட்டுள்ளது. மற்றும் இலங்கைவங்கி இலச்சினையை ஒரு கோணத்திலும், மறு கோணத்தில் 'Visa'

( VI ஆம் பக்கம் பார்க்க )

வே. பாலச்சந்திரன்
மேற்பார்வையாளர்,
இலங்கை வங்கி மாவட்ட அலுவலகம்,
யாழ்ப்பாணம்.


வெங்கடேஸ்வரா ஸ்ரோர்ஸ்
97, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ஈ. எஸ். பேரம்பலம்
50, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ලංකා බැංකුව
இலங்கை வங்கி
Bank of Ceylon
1939 1989

மின்சார உபகரண ஒப்பந்தக்காரர்களும் விநியோகஸ்தர்களும்
ஜப்னு எலக்ரிகல்ஸ்
6, ஸ்டான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

லங்கெம் (வி. வடிவேல்)
ஏரியா டீலர் டிப்போ
219, 221, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பெற்ரு எசன்ஸ் சப்ளையர்ஸ்
223, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சிற்றி ஏஜென்சி
158, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

சுந்தர்சன்
மார்க்கெட் வீதி, மானிப்பாய்.

பன்சி ஹவுஸ்
681, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வங்கியின்
பொன் விழாப்
பூர்த்தியை முன்னிட்டு
அதன் சேவை மேன்மேலும் வளர
எமது இதயம் நிறைந்து கனிந்த
நல்வாழ்த்துக்கள்

**N. S. NAGALINGAM**
Lanka Filling Station,
Chunnakam.

**விவசாய மாளிகை**
No 15, மார்க்கட் தெற்கு வீதி,
சுன்னுகம்.

**குருேமோ அகுருே சேவிசஸ்**
41, கே. கே. எஸ். ரோட்,
சுன்னுகம்.

**ஈஸ் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்**
காங்கேசன்துறை வீதி,
சுன்னுகம்.

**ஹப்பி எலெக்ரிக்கல்ஸ்**
கே. கே. எஸ் வீதி,
சுன்னுகம்.

**பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்**
கே. கே. எஸ். ரோட்,
சுன்னுகம்.

**அண்ணு தொழிலகம்**
இணுவில்.

**K. R. SIVALOGANATHAN & CO**
No. 6, Stanley Road,
Jaffna.

**NATHAN IRON & METAL WORKS**
Prop. S. KANANATHAN
K. K. S. Road,
Tellippalai.

**S. ARUMUGANATHAN**
Govt. Contractor,
K. K. S. Road,
Tellippalai.

**ஜெனட்டென்ஸ் ஹாட்வெயர்ஸ்**
**ஜெனட்டென்ஸ் இன்டஸ்ரிஸ்**
கே. கே. எஸ். ரோட்,
இணுவில்.

**LAKSHUMYNATHAN**
General Merchants
TELLIPPALAI.

மில்க்வைற் சவர்க்காரம் MWS MILKWHITE
DO GOOD
BE GOOD
— Swami Sivananda.
Health is Wealth
Collect MILK WHITE Wrappers and Obtain Yogasana Chart and Practise Yogasana Daily for Good Health.

**கே. மாயராஜா**
தொல்புரம் மேற்கு, சுழிபுரம்.
(Cement Transporter)

**S. R. கனகரட்ணம்**
கந்தரோடை, சுன்னுகம்.
(Transport Contractor)

தரமான
போட்டோஸ்ரற், நபர்சீல்
செய்பவர்கள்
துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ், சுன்னுகம்

# பொருளாதார வளர்ச்சி---

(II ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைத்து அதில் பல நிர்வாகப் பிரிவுகளை அமைத்தது. தற்போதைய மாநகரக்கிளை (Metropolitam Braneh) அமைந்திருக்கும் இடமே அந்தக் கட்டடம் ஆகும்.

1961 ஆம் ஆண்டின் 65ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் மூலம் இலங்கை வங்கி தேசிய மயமாக்கப்பட்டதும் இன்னெரு முக்கிய நிகழ்ச்சியாகும். இதுவரை காலமும் பொதுமக்களால் கொள்ளப்பட்ட சாதாரண பங்குகள் யாவும் அரசாங்கத்தினுல் கொள்வனவு செய்யப்பட்டன. தேசிய மயமாக்கப்பட்ட இலங்கை வங்கியின் முதல் தலைவராக திரு. எச். வி. பெரேரா கியூ. சி. நியமிக்கப்பட்டார். இந்தக் காலத்தில் இலங்கை வங்கி தன்னுடன் போட்டியிட்ட ஏனைய வங்கிகள் எல்லாவற்றையும் மிஞ்சி ஒரு பெரிய நிறுவனமாக நாட்டின் முழு வங்கி வைப்பின் 40% தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தது.

## அமைப்புப் பரவலாக்கம்

இலங்கை வங்கியினுடைய வரலாற்றில் அடுத்த மைல்கல்லாக 1968 இல் நிறுவப்பட்ட இலங்கை வங்கி ஆணைக்குழு அமைந்திருந்தது. அதன் தலைவர் எ. பி. டி. சில்வா (ஓய்வுபெற்ற சிரேஷ்ட நீதித்துறை அதிகாரி) ஆவர். திரு. ஆர். எச். டி. மெல் (பெருந்தோட்ட சொந்தக்காரர்), கே. சாட்டோ (ஜப்பானிய வங்கியாளர்) ஆகியோர் ஏனைய உறுப்பினர்கள் ஆவர்.

அந்த ஆணைக்குழுவின் விதந்துரைகள் பாரிய மாற்றத்தைக் கொண்டு வருவனவாகவும், வங்கியினுடைய அபிவிருத்தியில் கூடிய தக்கத்தை ஏற்படுத்துவனவாகவும் அமைந்தன. இக்குழு வங்கியின் அமைப்புப் பரவலாக்கப்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியது.

இதற்கேற்ப படிப்படியாக 1970 ஆம் ஆண்டில் கொழும்பு, கண்டி, காலி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நான்கு பிரதேச அலுவலகங்கள் நிறுவப்பட்டன. இந்த 4 காரியாலயங்களும் வங்கியினது 52 கிளைகளை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தன. 1971 இல் கச்சேரிக் கிளைகள் நிறுவப்பட்டு கச்சேரி சிருப்பர்களினுல் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டன.

வங்கி தற்போது அபிவிருத்தி வேலைகளில் முன்னுரிமை காட்டி கிராமப்புற மக்களுக்கு விவசாயம், கைத்தொழில் ஆகிய துறைகளுக்குத் தேவையான வங்கி உதவிகளை வழங்குகிறது. அரசாங்கம் விவசாய சேவை மத்திய நிலையங்களைத் திறந்து உணவு உற்பத்திக்கு ஊக்கம் அளித்தது. 1977ஆம் ஆண்டு இறுதியில் 390 கிளைகளை நிறுவியது. அவை மூலம் 21 கோடி 40 லட்சம் ரூபா விவசாயிகளுக்கும், கிராமிய மட்டத்திலுள்ள அமைப்புகளுக்கும் கடனுக வழங்கப்பட்டது.

## மாவட்டக் காரியாலயங்கள்

1977 ஆம் ஆண்டில் இறுதிவாக்கில் திரு. நிசங்க விஜயவர்த்தன புதிய தலைவராக நியமிக்கப்பட்டார். அரசின் புதிய தாராள பொருளாதாரக் கொள்கைக்கு ஏற்ப வங்கியின் கொள்கைகள் வகுக்கப்பட்டு வர்த்தக நடவடிக்கைகள் பெரிதும் அதிகரிக்கப்பட்டன. இக்காலப் பகுதியில் புதிய பொதுமுகாமையாளராக திரு. சி. ஜே. ஈ. அந்தனிஸ் நியமிக்கப்பட்டார். வங்கியினுடைய மீள் அமைப்பு இவருடைய தலையில் சுமத்தப்பட்டது. அரசாங்கத்தினுல் அமைக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கிணங்க மாவட்ட அடிப்படையில் கிளைகள் அமைக்கப்பட்டன. இதன்படி 24 மாவட்டக் காரியாலயங்கள் அமைக்கப்பட்டன. இவை ஏற்கனவே இருந்த 11 பிரதேச காரியாலயங்களைப் பொறுப்பேற்று அபிவிருத்தி வேலைகளில் அரசாங்கத்துடன் இணைந்து கடமையாற்றின. மாவட்ட முகாமையாளர்கள் ... மாவட்டங்களில் இருக்கின்ற கிளைகளை மேற்பார்வை செய்வதும், அதே சமயம் மாவட்ட முகாமையாளர்கள் உதவி பொது முகாமையாளர்களுடைய மேற்பார்வையின் கீழும் வந்தார்கள்.

1979 இல் சர்வதேச நிதி நிறுவனத்தின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட மீள் அமைப்புத்திட்டம் முக்கிய அபிவிருத்தியாக அமைந்திருந்தது. கொழும்பில் யோர்க் வீதிக் கிளை மாநகரக் கிளையாகவும் பாரிய (Corporate) கிளையாகவும் விருத்தியாக்கப்பட்டது. வெவ்வேறு சந்தைக் கூறுகளாக (Segments) வாடிக்கையாளர்கள் வகுக்கப்பட்டு அவர்களுக்கு சிறந்த சேவை நல்கப்பட்டது. ஒரு புதிய திட்டமிட்ட வரவு செலவு வங்கியினுடைய நடைமுறைகளுடைய திறமைகளை அறிவிக்கும் முறை போன்றவை அறிமுகம் செய்யப்பட்டன. எல்லாப் பிரிவு வங்கி ஊழியர்களையும் பயிற்றுவிக்கும் திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டது. இதே காலத்தில் லண்டனில் உள்ள இலங்கை வங்கிக் கிளை ஐக்கிய இராச்சியத்தின் வங்கிக் கட்டளைக்கு (1979 ஆம் ஆண்டு) அமைய ஓர் அங்கீகரிக்கப்பட்ட வங்கி என்ற சிறப்பான இடத்தைப் பெற்றது. ஐக்கிய இராச்சியம் மிகவும் வேகமாக வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கும் காலத்தில் இது நிகழ்ந்தமை ஒரு சிறப்பம்சமாகும்.

1939 1989 50
ලංකා බැංකුව
இலங்கை வங்கி
Bank of Ceylon

## வெளிநாட்டுப் பிரிவுகள்

இலங்கை வங்கியின் வெளிநாட்டுப் பிரிவு, சுற்றுலா சம்பந்தமான பிரத்தியேகமான சேவைகள் ஏற்றுமதி, இறக்குமதி நடைமுறைக்கான ஆலோசனைகள் அவை சம்பந்தமான ஏனைய சேவைகள் ஆகியவற்றை வழங்கி உதவி புரிந்தது.

வெளிநாட்டில் வாழும் இலங்கையர்கள் வெளிநாட்டுச் செலாவணியில் அவர்களது சேமிப்புகளை அனுப்ப வகை செய்யும் பொருட்டு அரசாங்கத்திற்கு உதவி புரியும் நோக்கத்துடன் எமது வங்கி வதிவற்றேர் வெளிநாட்டு நாணயப் பிரிவை ஆரம்பித்தது. 1980 ஆம் ஆண்டில் ஒரு வெளிநாட்டு நாணய வங்கிப் பிரிவும், கடல் கடந்த (Off Shore) வங்கித் தொழிலுக்கென அமைக்கப்பட்டது. அதே வருடத்தில் முகாமைத்துவ ஆலோசனைப் பிரிவும் அமைக்கப்பட்டது.

1980 இல் வைப்புக் கடன் ஆகியவற்றின் மொத்தத் தொகை 1970 இன் தொகையைவிடப்பத்துமடங்காகஅதிகரித்தது. வங்கியின் கிளைகளின் தொகை 61 இல் இருந்து 592 ஆக அதிகரித்த அதே வேளையில் ஊழியர்களின் எண்ணிக்கையையும் 2,480 இல் இருந்து 8,350 ஆக அதிகரித்தது.

1981 இல் திரு. எல். பியதாச பொது முகாமையாளராக நியமனம் பெற்ருர். இரண்டாவது வெளிநாட்டுக் கிளை மாலைதீவில் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கிளை இப்போதும் நன்கு இயங்குகின்றது. இந்த வருடத்தில் வங்கியின் கணக்குகளை ஒழுங்குபடுத்துவதற்கும், தரவு வங்கியை (Data Bank) நிறுவுவதற்கும் உதவியாககணனி (Computer) அமைக்கப்பட்டது.

1984இல் திரு. விஜயவர்த்தன தலைவர் பதவியிலிருந்து இராஜினுமா செய்தார் அவரைத்தொடர்ந்து டாக்டர் எல். ஈ. என். பெர்னுன்டோ பதவியேற்று அப்பொழுது மொத்த எல். ஈ. என். ஊழியர்களின் எண்ணிக்கை 11,000 க்கும் மேற்பட்டது. மொத்தக் கிளைகள் 600க்கும் மேற்பட்டன. நாடு முழுவதும் இலங்கைவங்கிக் கிளைகள் திறக்கப்பட்டன.

## 32 மாடிக் கட்டடத்தில்

டாக்டர் எல். ஈ. என். பெர்னுன்டோ ... இலங்கை வங்கி டாக்டர் ... தலைவராகக்கொண்டு இவங்கி வந்தது. அவரது காலத்திலேயே வங்கியின் தலைமைக் காரியாலயம் எச்சுலன் சதுக்கத்தில் அமைந்த 32 அடுக்கு மாடி கட்டடத்திற்கு மாற்றப்பட்டது. இது மத்திய வங்கி, இந்தியன்வங்கி, சார்ட்டட் வங்கி முதலான பெரிய வங்கி நிறுவனங்களுக்கும், ஹோட்டல் கில்டன் இன்டகொன்டினல்ட்டன் கலதாரி மெரிடியன் ஆகியவற்றுக்கும் பழைய நாடாளுமன்றக் கட்டடமும் தற்போதைய ஜனுதிபதி செயலகம் அமைந்துள்ள கட்டடம், ஜனுதிபதி மாளிகை, சிலிங்கோ கட்டடம் ஆகியவற்றுக்குச் சமீபமாக வானளாவ உயர்ந்து மிகக் கம்பீரமாகக் காட்சி அளித்துக்கொண்டிருக்கின்றது.

1987ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆம் திகதி இந்தப் புதிய தலைமையகக் கட்டடம் ஜனுதிபதி ஜெவர்த்தனுவால் திறந்து வைக்கப்பட்டது. அப்பொழுது பிரதமராக இருந்தவரும் தற்போதைய ஜனுதிபதியுமான திரு. பிரேமதாஸா அவர்களும் ஏனைய அமைச்சர்களும் இந்த நிகழ்ச்சியில் சமுகமளித்திருந்தனர். இந்தக் கட்டடத்தில் பிராந்திய அலுவலகங்கள் (Zonal Offices) தவிர்ந்த ஏனைய நிர்வாகப் பிரிவுகளும், தலைவர், பொது முகாமையாளர் காரியாலயங்களும், சர்வதேசப் பிரிவு, ஆளணிப் பிரிவு போன்ற முக்கிய பிரிவுகளும் அமைந்துள்ளன. கண்டவர் வியக்கும் வண்ணம் கட்டட அமைப்பு தளபாட ஒழுங்குகள் என்பன இருப்பதுடன், கொழும்பு மாநகரை ஆகாயத்தில் இருந்து பார்ப்பது போன்ற காட்சியை இதனுடைய 28 ஆவது மாடியில் உள்ள பார்வையாளர் பகுதியில் இருந்து பார்க்கலாம். நவீன தொழில்நுட்பத்துறைகளை வங்கி ஏற்று ஏனைய சர்வதேச வங்கிகளுடன் சமமாக வளரும் விதத்தில் நவீன தொலைத்தொடர்பு சாதனங்களுடன்இக்கட்டடம் விளங்குகின்றது. இன்று இந்த நாட்டில் வங்கித்துறையில் தனக்கென ஓர் இடம்பிடித்திருக்கும் தன்மை போன்றே தன்னைச் சுற்றியுள்ள கட்டடங்களிலும்பார்க்க உயரத்திலும் தோற்றத்திலும் இலங்கை வங்கிக்கட்டடம் தனிச்சிறப்புடன் அமைந்துள்ளது. வாடிக்கையாளர்களுக்கு சிறந்த வசதியை ஏற்படுத்திக் கொடுத்து, ஒரேகூரையின் கீழ் பலவிதவான வங்கிச் கருமங்களை ஆற்றவும் இக்கட்டடம் வகைசெய்கின்றது.

கட்டிட அமைப்பில் எவ்வாறு நவீன மயப்படுத்தல் காணப்பட்டதோ, அதேபால் வங்கிச் சேவைகளிலும் இலங்கை வங்கி வேகமாக அபிவிருத்தி அடைந்து வருகின்றது. தற்காலப்பகுதியில் மேலைநாட்டு விஞ்ஞானத் தொழில் நுட்ப முன்னேற்றங்களைக் கொண்டு வந்த வங்கி நடைமுறைகளையும் கைக்கொண்டது. பணம், காசோலை, பட்டுவாடா செய்கின்ற தன்னியக்க இயந்திரங்கள், கடன் அட்டைகள் (Credei card) சீ - பாஸ் விஸா அட்டை (Cey bank visa card) ஆகிய நவீன வங்கி வசதிகளையும் வாடிக்கையாளருக்கு வழங்கியுள்ளது. அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு ஏற்ப சமூகக்கடன் வழங்குனரை நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் நியமித்து இருப்பதுடன், வறுமைக்கோட்டின் எல்லைக்குக் கீழே வாழும் மக்களுக்கும் உதவும் முகமாகப் பல சிறு திட்டங்களுக்குக் கடன் உதவி வழங்கி அதன் மூலம் நாட்டிற்கும், மக்களுக்கும் பெரும் சேவை ஆற்றி வருகின்றது.

இலங்கை வங்கியின் தற்போதைய தலைவராக டாக்டர் ஏ. எஸ். ஜெயவர்த்தன விளங்குகின்றுர். இவர் இலங்கை மத்திய வங்கியிலிருந்து வந்துள்ளார். ஏறக்குறைய 10 ஆண்டுக்கு முன் இதே வங்கியில் பொதுமுகாமையாளராகவும் கடமைபுரிந்துள்ளார். ஏனைய தலைவர்களைப்போலல்லாது, இந்த இரண்டு பதவிகளையும் வகித்த காரணத்தால், இவரது தலைமையின் கீழ் வங்கி மேன்மேலும்சிறந்து விளங்கும் என்பதில் ஐயம் இல்லை.

இலங்கை வங்கி இதுவரை காலமும் ஒரு சிறந்த சாதனையை ஏற்படுத்தி இருப்பினும் வங்கி முகாமைத்துவமும், ஊழியர்களும் வங்கியுடைய பிரகாசமான எதிர்காலம் எதிர்வரும் காலத்தில் தான் இருக்குமென நம்புகிருர்கள். அவர்களுடைய கடின உழைப்பும், சீரிய நோக்கமும் நிச்சயமாக அவர்களுடைய இந்த நம்பிக்கை வீண்போகாதென்பதை உணர்த்திநிற்கின்றது. ★

இலங்கை வங்கியின்
பொன் விழாப்
பூர்த்தியை முன்னிட்டு
அதன் சேவை மேன்மேலும் வளர
எமது இதயம் நிறைந்து கனிந்த
நல்வாழ்த்துக்கள்

**வி. காசிநாதன்**
மாவிட்டபுரம்,
தெல்லிப்பளை
(Cement Dealers & Lorry Transporter)

வாழ்த்துகின்றோம்
சமூக சேவையில் 55 ஆண்டுகள்
**சன்மார்க்க சபை**
குரும்பசிட்டி
தெல்லிப்பழை.

**Bank of Ceylon K. K. S.**
**Manager & Staff**
**K. K. S. Branch**

**GOLDEN CHEMIST**
K. K. S. Road,
Tellippalai.

**RAJAH STORES**
Mavviddapuram,
TELLIPPALAI.

**ELBEHEM METAL HOUSE**
Maviddapuram,
Tellippalai.

**P. ALFRED**
Antanies Cfcale
Kankesanthurai.
Cement Transporter

★ **விக்ரர் ரேடர்ஸ்** ★
245, கண்டி வீதி,
சாவகச்சேரி.

**T. தாமோதரம்பிள்ளை அன் சன்ஸ்**
133, கண்டி ரேட். சாவகச்சேரி.

**M/s கௌரி ஸ்ரோர்ஸ்**
கண்டி ரோட்.
கொடிகாமம்.

**லங்கா (F)பில்லிங் ஸ்ரேசன்**
(Lanka Filling Station)
கைதடி (Kaithady)

**V. சோமசுந்தரம்**
இலங்கை வங்கி கடன் வழங்கும் முகவர்
பிரஜா நய நியாமக திட்டம்
கருகம்பானை, காங்கேசன்துறை.

★ **றிகல் பேக் ஹவுஸ் அன் சாள்ஸ் மில்** ★
ஊர்காவற்றுறை.

**திருப்பதி ஸ்ரோர்ஸ்**
ஊர்காவற்றுறை.

★ **மார்பிள்ஸ்** ★
281/D, மணிக்கூட்டுக் கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வங்கி ஐம்பதாவது ஆண்டு நிறைவுச் சிறப்பிதழ்

# மிகக் கஷ்ட காலங்களில் உதவும் முகமாக புதிய பணக்கொடுப்பனவு முறை அமுல்

## வாடிக்கையாளர் நலன் கருதி யாழ். கிளையிலேயே முதல் அறிமுகம்

செ. சிறிரங்கநாதன்
முன்னாள் மாவட்ட முகாமையாளர்
இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்
இந் நாள் பொது முகாமையாளர்
ஷப்ரு யுனிக்கோபினன்ஸ் லிமிட்டெட், யாழ்ப்பாணம்.

வடமாகாண வங்கிச் சேவையின் வரலாற்றை நாம் ஆராயும்போது இலங்கை வங்கி தனது சேவையைத் தொடங்கும் முன்னர் இப்பிரதேசத்தில் ஓர் அன்னிய வங்கியான மெர்க்கன்டைல் வங்கி செயற்பட்டதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

இவ்வங்கிதான் தற்பொழுது கொமேர்ஷல் வங்கியாக இயங்கி வருகிறது. இந்த வர்த்தக வங்கிச்சேவை ஆரம்பிக்கும் முன்னர் வடமாகாணத்தில் இயங்கிய இரண்டொரு வங்கிகள் பின்னர் ஸ்தம்பித்தன எனவும் அறிய வருகிறது.

யாழ். பிரதேசத்திலியங்கிய மேர்கண்டையில் வங்கி ஒரு பிரித்தானிய முகாமையாளரால், சில இலங்கையரின் உதவியுடன் நிர்வகிக்கப்பட்டது. இவ் வங்கி யாழ். பிரதேசத் தமிழர்களின் நலனுக்கு உதவியாக அமைந்ததாகக் காணப்படவில்லை. இலண்டன் மாநகரிலிருந்து இங்கு வந்து முகாமையாளர்களாகச் சேவை செய்த பிரித்தானியர்கள், யாழ். வாடிக்கையாளர்களுக்கு வசதிகளை அமைத்துக் கொடுக்கத் தயங்கினர்.

எனினும், வங்கி நிர்வாகம் தமிழ் சிருப்பர்களை உத்தரவாதிகளாக நியமித்து அவர்களின் உத்தரவாதத்தின் பேரில், வங்கிக்கடன்களையும் Over Drafts வசதிகளையும் வழங்கினர். ஆனால், ஒரு சில வாடிக்கையாளர்கள் மட்டுமே அவற்றால் பயன்பெற்றதனால் இத்திட்டம் திருப்திகரமானதாக அமையவில்லை. சிறிய அடிப்படையில் வியாபாரம் செய்த வாடிக்கையாளர்களுக்கு இத்திட்டத்தினால் தமதுவியாபாரத்தை விருத்தி செய்யமுடியவில்லை.

இப்பின்னணியிலே 1945 ஆம் ஆண்டில் இலங்கை வங்கி தனது கிளையொன்றை ஆஸ்பத்திரி வீதியில் இன்று பரணி ஹோட்டல் அமைந்துள்ள கட்டடத்தில் ஆரம்பித்தது.

இலங்கை வங்கியின் பொது முகாமையாளராக முதன் முதல் நியமனம்பெற்ற இலங்கையரான திரு. சி. லோகநாதன் யாழ். கிளையின் முதலாவது முகாமையாளராக நியமனம் பெற்றார். அவருக்கு உதவியாக 6 உத்தியோகத்தர்கள் கடமை புரிந்தனர். திரு. சி. லோகநாதன் யாழ்நகரிலுள்ள வியாபாரிகளைத் தனித்தனியே சந்தித்து இலங்கை வங்கியின் நடைமுறைக் கணக்கினை ஆரம்பிக்கும் வண்ணம் தனிப்பட்ட வேண்டுகோள் விடுத்தார். இவருடைய சாந்த முயற்சி காரணமாகவும், இவரைத் தொடர்ந்து முகாமையாளராக் கடமையாற்றிய திரு. ரி. எஸ். முத்துலிங்கசுவாமி, திரு. எல். பி. என். சிங்கம் போன்றோரின் அயரா முயற்சி காரணமாகவும் இலங்கை வங்கியின் சேவை விரிவுபடுத்தப்பட்டு, இங்கு இயங்கிய மேர்கண்டையில் வங்கியின் செல்வாக்குக் குறைந்தது. இதனைத் தொடர்ந்து அரசாங்கத் திணைக்களங்களும் இலங்கை வங்கியின் யாழ். கிளையிலேயே தங்கள் கணக்குகளை ஆரம்பித்தன.

### பருத்தித்துறையில் முதலாவது கிளை

1959 ஆம் ஆண்டு இலங்கை வங்கி பருத்தித்துறையில் ஒரு



கிளையை ஆரம்பித்து, அதனைத் தொடர்ந்து சுன்னாகம், ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை, சாவகச்சேரி, கிளிநொச்சி, மானிப்பாய், நெல்லியடி, வேலணை ஆகிய கிளைகளை விஸ்தரித்தது.

இதைத் தொடர்ந்து யாழ் கிளை தனக்கென ஓர் கட்டடத்தை அமைத்து, இன்று இயங்குகின்ற விசாலமான கட்டடத்தில் 1961இல் தனது அலுவலகத்தை ஆரம்பித்தது. இந்த வங்கியினுடைய வாடிக்கைக் கணக்குகள் பெரும் எண்ணிக்கையில் அதிகரிக்கத் தொடங்கியமையால் 1977 ஆம் ஆண்டு ஸ்ரான்லி வீதியில் யாழ்ப்பாணத்தின் இரண்டாவது கிளை ஆரம்பிக்கப்பட்டது.

மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் 1981 இல் இலங்கை வங்கி யாழ்ப்பாணத்தில் சர்வதேச பிரிவொன்றை தனித்துவமாக ஆரம்பித்தது. இப்பிரிவு இன்று வெளிநாட்டுக் கொடுக்கல், வாங்கல்களை மிகச் சிறப்பாகச் செய்து பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதைக் காணலாம்.

1974 ஆம் ஆண்டில் விவசாயிகளுக்கு உதவும் நோக்கில், விவசாயத் திணைக்களம் 300 க்கும் மேற்பட்ட விவசாய சேவை நிலையங்களை ஒவ்வொரு கிராமச்சங்க பிரதேசத்திலும் ஆரம்பித்தது. இதனால் இந்த சேவைகளுக்குக் கிராமிய அடிப்படையில், விவசாயிகளுக்கு வழங்குவதற்காக விசேட வங்கிச் சேவைகளை ஆரம்பிக்கும்படி இலங்கை வங்கியை அரசாங்கம் கேட்டிருந்தது.

இலங்கை வங்கி இதை ஒரு சவாலாக ஏற்று விவசாயிகளுக்கு வங்கிச் சேவையை அவர்களின் வீட்டுவாசலுக்கே எடுத்துச் சென்றது. யாழ்ப்பாணத்திலும் இவை நடைமுறைப்படுத்தப்பட்டன. இதற்கென பின்வரும் கிளைகள் அமைக்கப்பட்டன:- சாவகச்சேரி, கைதடி, கீரிமலை, கிளிநொச்சி, நல்லூர், பளை, பூநகரி, புலோலி, புத்தூர், இராமநாதபுரம், தொல்புரம், உடுவில், வேலணை.

உருளைக்கிழங்கு, வெங்காயம், மிளகாய் போன்ற பயிர் உற்பத்திக்கு இச்சேவை கடனுதவி வழங்கியது. ஆனால் பெரும்பாலான கடன்கள் திருப்பிக்கொடுக்கப்படவில்லை. இதனாலும், பாதுகாப்புக் காரணங்களாலும் இக்கிளைகள் மூடப்பட்டு அப்பகுதியிலுள்ள கிளைகளோடு இணைக்கப்பட்டன.

1971 ஆம் ஆண்டு வங்கிச் சேவை நிர்வாகத்தில் அதிகாரப்பரவலாக்கல் முறை அமுலாக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் பிரதேச இலங்கை வங்கி அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதலாவது பிரதேச முகாமையாளராக திரு. ரி. வி. ஏ. சண்முகம் நியமிக்கப்பட்டார். யாழ்ப்பாணம், அனுராதபுரம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய பகுதிகளிலிருந்த கிளைகள் இப்பிரதேச அலுவலக நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன.

1979 ஆம் ஆண்டு வங்கியின் நிர்வாகம் மேலும் பரவலாக்கம் செய்யப்பட்டு, இலங்கை வங்கி மாவட்ட அலுவலகங்கள் மாவட்டந்தோறும் அமைக்கப்பட்டன. அரசாங்கம் மாவட்ட அமைச்சுகளை அமைத்த திட்டத்தின்கீழ் இம்மாவட்டக்கிளைகளின் சேவை அமுலாக்கப்பட்டது. மாவட்ட ரீதியான அபிவிருத்தியை விரிவுபடுத்தவும், விரைவுபடுத்தவும் இவ்வமைப்பு இலங்கை வங்கிக்கு பேருதவியாக அமைந்தது. யாழ் மாவட்டத்தின் முதல் மாவட்ட முகாமையாளராக திரு. சி. கே. குணநாயகம் பதவி ஏற்றார்.

இலங்கை வங்கி மேலும் தனது நிர்வாகத்தை உயர்மட்டத்தில் இருந்து அதிகாரப்பரவலாக்கல் செய்தது: நாட்டைப் பல வலயங்களாகப் பிரித்து ஒவ்வொரு வலயத்துக்கும் ஒரு உதவிப் பொது முகாமையாளர் நியமிக்கப்பட்டார்.

வடக்கு வலயத்தின் கீழ் யாழ்ப்பாண மாவட்டத்துடன் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, அனுராதபுரம், பொலன்னறுவை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களும் கொண்டுவரப்பட்டுள்ளன.

இந்த வலயத்தின் முதலாவது உதவிப் பொது முகாமையாளராக திரு. எம். ஜே. ஏ. ஜெயநாதன் நியமிக்கப்பட்டார்.

### கஷ்டமான காலத்தில்...

1984 — 85 காலத்தில் வங்கிக் கொள்ளைகள் இடம்பெற்றபோது பணக்கொடுக்கல் வாங்கல்களை நிறுத்தும்படி வடபகுதியில் உள்ள வங்கிகளுக்கு அரசாங்கம் உத்தரவிட்டது முக்கிய ஓர் அம்சமாக இருந்தது.



இலங்கை வங்கியின் பொது முகாமையாளர் பதவியை வகித்த முதல் இலங்கையரும் யாழ்ப்பாணக் கிளையின் முதலாவது முகாமையாளராகப் பணிபுரிந்தவருமான திரு. சி. லோகநாதன் அவர்கள்

குருநகர் இராணுவ முகாம் முன்னால் பணம் வழங்கும் அலுவலகங்களைத் திறக்கும்படி வங்கிகளை அரசு பணித்தது. இதனால் தங்களுக்குத் தேவையான பணத்தைப் பெற்றுக் கொள்ள இந்தப் பணம் கொடுப்பனவு அலுவலகங்களுக்குச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் வாடிக்கையாளருக்கு ஏற்பட்டது. இராணுவமுகாம் அருகில் இருந்ததால் வாடிக்கையாளர்கள் அச்சத்துடனேயே அங்கு சென்று வந்தனர்.

தங்கள் காசோலைகளை மாற்றிப் பணம்பெறுவதற்காகத் தூர இடங்களான பருத்தித்துறை, கிளிநொச்சி, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களில் இருந்தும் குருநகர் வரவேண்டியதாயிற்று.

பின்னர் இராணுவமுகாம் யாழ்ப்பாணம் கோட்டைக்கு இடமாற்றம் செய்யப்பட்டது. அத்துடன் வங்கிகளின் பணம் கொடுப்பனவு அலுவலகங்களும் யாழ். கோட்டைக்கு அருகில் உள்ள பொலீஸ் விடுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டன,

பணக்கொடுக்கல் வாங்கல்களைச் செய்வதற்குத் தேவையான பாதுகாப்பு வழங்கப்பட்டு வந்த காலம் வரை வங்கிகளின் கொடுப்பனவு அலுவலகங்களும் அங்கு இயங்கி வந்தன.

அக்காலத்தில், இராணுவ முகாமுக்கு அருகில் செல்லப் பயந்து வங்கி கொடுக்கல் வாங்கல் அலுவலகங்களுக்குப் போகாத வாடிக்கையாளர், தங்கள் வங்கி நடவடிக்கைகளைக் கொடுப்பனவுக் கட்டளை (Pay order) மூலம் நடத்தி வந்தனர்.

அவர்கள் தங்களுக்குத் தேவையான பணத்துக்கு வங்கிகளில் இருந்து கொடுப்பனவுக் கட்டளைகளை பெற்று அவற்றை வெளியே மாற்றி வந்தனர்.

இதுகாலவரை இதுபோன்ற வங்கி நடைமுறை உலகிலே வேறு எங்குமே நடந்ததாகத் தெரியவில்லை.

வாடிக்கையாளர் கஷ்டங்களுக்கு ஆளாகியிருந்தும், நெருக்கடியான காலத்தில் தங்கு தடையின்றி இலங்கை வங்கி நடத்திவந்த இச்சேவை காரணமாக, அக்கஷ்டங்களைப் பாவனையாளர்கள் பொருட்படுத்தவில்லை.

யாழ்ப்பாணத்தின் பொருளாதார அபிவிருத்தியில் இலங்கை வங்கி எப்பொழுதும் மிகப்பெரிய பங்குவகித்துவருகிறது.

எப்படியாயினும், தற்போதைய அமைதியற்ற நிலையில் பொருளாதார வளர்ச்சிக்குத் தனது ஆகக்கூடிய பங்களிப்பைச்செய்யமுடியாத நிலையில் இலங்கைவங்கி இருக்கிறது.

வடபகுதியின் பொருளாதார வளர்ச்சிக்கு இலங்கை வங்கி தீவிரமாக உழைக்க அனுமதிக்கும் விதத்தில், நிலைமையில் முன்னேற்றம் காணப்படும் என்று நாம் நம்புகிறோம். ★

1939 50 1989
ලංකා බැංකුව
இலங்கை வங்கி
Bank of Ceylon

ஞானம்ஸ் டிரேடர்ஸ்
★ ★ ★ ★
150-152, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

★ சிற்றி ★
மெடிக்கல்ஸ்
487, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.



இலங்கை வங்கியின்
பொன்விழாப்
பூர்த்தியை முன்னிட்டு
அதன் சேவை மேன்மேலும்
வளர எமது இதயம் நிறைந்து
கனிந்த
★ நல்வாழ்த்துக்கள் ★



ஷப்ரு
யுனிகோ பினன்ஸ் லிமிட்டெட்
★★ ●● ★★
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
61, பௌத்தாலோக மாவத்தை,
கொழும்பு - 4

செல்லப்பா அன் கோ
4/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

பூபாலசிங்கம் புத்தகசாலை
★★★★
பஸ் நிலையம்,
யாழ்ப்பாணம்

க. கே. வி.
ஜப்னா ஜுவல் ஹவுஸ்
82/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

குகன் ஸ்ரோர்ஸ்
180(380), ஆஸ்பத்திரிவீதி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24427

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1939 1989 இலங்கை வங்கி ஐம்பதாவது ஆண்டு நிறைவுச் சிறப்பிதழ்


இலங்கை வங்கியின்
பொன் விழா
பூர்த்தியை முன்னிட்டு
அதன் சேவை மேன்மேலும் வளர
★ எமது இதயம் நிறைந்து கனிந்த ★
நல்வாழ்த்துக்கள்

எஸ். மூர்த்தி
அம்பாள் சவுண்ட்ஸ்
(ஒலி, ஒளி அமைப்பாளர்)
தம்பாட்டி.

KAYTS DISTRIBUTORS
KAYTS.

ராஜா ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
ஊர்காவற்றுறை.

P. ஜேம்ஸ்
ஊர்காவற்றுறை.

வாகீசன் இன்ஜினியர்ஸ்
(கட்டட ஒப்பந்தக்காரர்)
நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்றுறை

A. S. ஆறுமுகம்
அன் சன்ஸ்
பலசரக்கு வியாபாரம்
ஊர்காவற்றுறை.

ஹோம் டி நீட்ஸ்
★ ★ ★
பிரதான வீதி,
ஊர்காவற்றுறை

சுந்தரம் பத்மநாதன்
ஊர்காவற்றுறை.

சிவா ஸ்ரோர்ஸ்
(விசுவப்பா கடை)
40' பிரதான வீதி,
ஊர்காவற்றுறை.


## பணப் புழக்கத்தை தவிர்க்க

(III ஆம் பக்கத் தொடர்ச்சி)

சின்னத்தையும் ஏந்தி, எமது வங்கியின் தலைமையகத்தின் சாயலைப் பின்னணியில் கொண்டு, கீழ் கூறப்பட்ட தரவுகளை உள்ளடக்கி 'சீ பாங் கார்ட்' வடிவமைக்கப்பட்டுள்ளது.

1. அட்டை உரிமையாளரின் பெயர்.

2. கடன் அட்டை இலக்கம் (வழமையாகப் 12 — 16 எண்களை உடையது)

3. செல்லுபடியாகும் காலம்

4. ஒளியின் பிரகாசத்திற்கேற்ற, நிறம் மாறும் ஒரு பறவையின் சின்னம்

5. பின்புறத்தில் சிலதகவல்களை ஏந்திய காந்தத் தகடு (Magnetic Strip)

6. அட்டை உரிமையாளரின் கையொப்பம்.

மேற்கூறிய தரவுகளைக் கொண்ட 'சீ பாங் கார்ட்' இலகுவில் பிரதி பண்ணக் கூடியதல்ல இந்தக் கார்ட்டைப் பெற விரும்புவோர், எமது வங்கியின் வாடிக்கையாளராக இருக்கவேண்டிய அவசியமும் இல்லை. அவரின் தொழில், வருமானம், நம்பிக்கை, நாணயம் மற்றும் வேறு சில தரவுகளை கருத்திற் கொண்டு, விண்ணப்பதாரர் இந்தக் கார்ட்டை வைத்திருப்பதற்குத்தகைமை உடையவரா இல்லையா என்பது தீர்மானிக்கப்படும். வங்கி முகாமையாளரின் சிபார்சுடன் கொழும்பில் இதற்கென எமது தலைமையகத்தில் அமைந்துள்ள 'சீ பாங் கார்ட்' நிலையத்திற்கு சம்பந்தப்பட்டவரின் விண்ணப்பம் அனுப்பப்படும். அங்கு விண்ணப்பத்தாரருக்கு இந்தக் கார்ட் மூலம் எவ்வளவு கடன் வசதி வழங்க முடியும் அல்லது முடியாது என்பதைக் கணனியின் (Computer) உதவியுடன் ஆராய்ந்து கடன் எல்லையைத் தீர்மானித்து, விண்ணப்பதாரருக்கு வங்கிக் கிளை மூலம் அறிவிக்கப்படும். அதன்படி வங்கியின் சில விதிமுறைகளுக்கு அமைய, ஒரு குறிப்பிட்ட அளவு தொகை, ஒரு குறிப்பிட்ட காலத்தில் செலுத்த ஏதுவாக அவர் ஒப்பந்தம் செய்துகொள்ளும் பட்சத்தில் 'சீ பாங் கார்ட்'டுக்கு அவர் உரிமையாளர் ஆவார். அவ்வாறே, வேறு சில விதிமுறைகளுக்கு அமைய, வியாபாரிகளும் நியமிக்கப்படுவார்கள். இவ் வியாபாரிகளே, 'சீ பாங் கார்ட்' அட்டைகளைப் பெற்று சேவைகளை வழங்கவோ, பொருள்களை விற்கவோ அனுமதிக்கப்படுவர்.

எனவே, இந்த ஒப்பந்தங்கள் அட்டை உரிமையாளருக்கும், வங்கிக்கும் இடைப்பட்டதாகவும், அதேபோன்று வியாபாரிகளுக்கும் வங்கிக்கும் இடைப்பட்டதாகவும் அமையும்; அத்துடன் அட்டை உரிமையாளரின் கடன் எல்லையை வியாபாரியோ, அதே போன்று வியாபாரியின் எல்லையை (Floor Limit) உரிமையாளரோ அறிய வேண்டிய அவசியமும் இல்லை.

இந்த அட்டை மூலம் பெறப்படும் சேவைகள் அல்லது பொருள்களுக்கான முழுத்தொகைக்கும் குறிப்பிட்ட வியாபாரிக்கு அல்லது நிறுவனத்திற்கு உத்தரவாதம் அளிக்கின்றது. எனவே எவ்வித ஐயப்பாடும் இன்றி வியாபாரிகள் அட்டை உடையோருக்கு பொருள்களை அல்லது சேவைகளை வழங்கலாம். விற்பனை நிலையங்களின் தன்மையைப் பொறுத்து (நடுத்தர அல்லது சிறு விற்பனை நிலையங்கள், உணவு விடுதிகள், பிரபல ஹோட்டல்கள், வைத்திய நிலையங்கள், பயண முகவர்கள்) ஒவ்வொரு தனிப்பட்ட நிலையங்களுக்கும் வங்கியினால் ஒரு எல்லை நியமிக்கப்பட்டிருக்கும்.

தற்போது தொலைத் தொடர்பு சீர்குலைந்திருக்கும் இவ்வேளையில் இந்த நிர்ணயித்த எல்லையினுள் வியாபாரம் செய்வார்களேயானால் எவ்வித பிரச்சினைகளையும் எதிர்நோக்க வேண்டிய நிலைமை எழாது; தொலைத் தொடர்புகள் சீராக இருக்கும் பட்சத்தில் இவ்வெல்லைக்கு அப்பாலும் வியாபாரம் செய்யக்கூடிய வசதியுண்டு. 'சீ பாங் கார்ட்' உரிமையாளர்கள் வங்கிக்கு ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் பணத்தை திருப்பச் செலுத்த வகைசெய்து கொடுத்துள்ளமையால் எவ்வித கூச்சமுமின்றி பல பொருள்களை கொள்வனவு செய்யலாம். இது வியாபாரிகள்விற்பனையை அதிகரிப்பதின்மூலமும் அவரது இலாபத்தையும் அதிகரிக்க வகை செய்கிறது.

### பணத்தைக் கட்டிக்காக்க வேண்டியதில்லை

வியாபாரிகள் தற்போதைய சூழ்நிலையில் பணத்தைக் கட்டிக்காப்பதில் ஏற்படும் சிரமத்தை தவிர்த்து வங்கியினால் இலவசமாக வழங்கப்பட்ட படிவங்களில் 'சீ பாங் கார்ட்' அட்டைமூலம் செய்யப்பட்ட விற்பனையை பிரதி செய்து வங்கியின் வியாபாரம் நடைபெற்ற 3 தினங்களுக்குள் வங்கியில் சமர்ப்பிப்பதன் மூலம் வியாபாரிகள் வங்கிக் கணக்கில் குறிப்பிட்ட தொகை அன்றே வரவில் இடப்படும். வங்கியில் கணக்கு அற்ற வியாபாரிகளுக்கு வங்கிக் கட்டளை மூலம் பணம் செலுத்தப்படும்.

நிர்ணயிக்கப்பட்ட வியாபாரிகளின் விபரக் கொத்து 'சீ பாங் காரட்' உரிமையாளர்களுக்கு காலத்திற்குக் காலம் இலவசமாக வழங்கப்படுவதனால் தான் எங்கு எந்தப் பொருளை வாங்க முடியுமென்பதனை ஏற்கனவே அறிந்துகொள்ள முடிகிறது. அதே போன்று வியாபார நிலையத்தின் பெயர் அந்த விபரக்கொத்தில் அடங்கியிருப்பதால் அது அந்த நிலையத்திற்கு விளம்பரமாகவும் அமைகிறது.

அட்டை உடையோருக்கு வழமையான நிர்ணயிக்கப்பட்ட விலைகளிலேயே பொருள்களை விற்பனை செய்ய வேண்டும்.

அட்டை வைத்திருப்பவர் ஒப்பந்தத்தைக் கவனமாக வாசித்து தங்கள் தங்கள் உரிமைகளையும் பொறுப்புகளையும் அறிந்து இருக்க வேண்டும். கடன் அட்டை கொடுப்பனவுகளை குறிப்பிட்ட கால எல்லைக்குள் செலுத்துவதன் மூலம் வட்டி செலுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளலாம். 'சீபாங்' அட்டை நிலையத்தில் இருந்து மாதந்தோறும் அட்டை உரிமையாளர்களுக்கும் வியாபாரிகளிக்கும் அக்குறிப்பிட்ட மாதத்தில் நடந்தேறிய கொடுக்கல் வாங்கல் கூற்று அனுப்பிவைக்கப்படும்.

'சீ பாங்' அட்டை உடையோர் கடைப்பிடிக்க வேண்டிய சில கடமைகள் போல் வியாபாரிகளும் அறிவுறுத்தப்பட்ட சட்ட திட்டங்களுக்கு அமைய நடப்பார்களேயானால் அதாவது அட்டையில் உள்ள இலக்கம், முடிவு திகதி, எச்சரிக்கை அட்டையுடன் சரி பார்த்தால்கையொப்பத்தைஒத்துப் பார்த்தல் போன்றவற்றில் கவனம் எடுப்பதன் மூலம் எவ்வித ஐயப்பாடுமின்றி வியாபாரத்தைப் பெருக்குவதோடு 'சீ பாங்' அட்டைப் பாவனையாளர்களையும் அதிகரிக்கலாம்.

எமது அடையாள அட்டைகள் எவ்விதம் எமக்கு தற்போதைய சூழ்நிலையில் உதவுகின்றனவோ அதே போன்று 'சீ பாங் கார்ட்' அட்டையும் அதிகம் புழக்கத்திற்கு வந்ததும் நான் முன் கூறியது போல் பணப் புழக்கமில்லாத ஒரு சமுதாயத்தை உருவாக்கும். ★

## இல்லாதவருக்கு...

(IIஆம்பக்கத் தொடர்ச்சி)

படவேண்டுமாயின் அது எமது வாடிக்கையாளர் கைகளிலேயே தங்கியுள்ளது என்பதை எவரும் மறுக்க மாட்டார்கள்.

எமது பொருளாதாரத்திட்டங்கள் பொலிவுற வேண்டுமாயின், நாட்டுக்கு உழைக்கும் ஒரு நிதிநிறுவனம், நலம் பொலிந்து சிறப்புற வேண்டுமாயின், எத்தனை ஆயிரம் திட்டங்கள் தீட்டினாலும் நிதி நிறுவன ஊழியர்களும் பாடுபட்டாலும் வாடிக்கையாளரும் கடன்களைப் பெற்றவர்களும் தமது பரிபூரண ஒத்துழைப்பை நல்காவிடின் அம்முயற்சி விழலுக்கிறைத்த நீராகிவிடும்.

இலங்கை வங்கியைப் பொறுத்தவரை கடந்த ஐந்து தசாப்தங்களாக மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற மனப்பான்மையில் சேவையாற்றி வருகிறது: இன, மத, மொழி, சாதி வேறுபாடின்றி எல்லாவித மக்களுக்கும் எல்லாவிதப் பராயத்தவர்க்கும் பயன் பெறும் வகையில் சேவை செய்து வருகிறது.

இதன் சாதனைகள் நிறைந்த ஐம்பதாண்டு வளர்ச்சியில் அதன் அங்கமான ஊழியராக நாமும் பங்காளிகளாக விளங்கும் வாடிக்கையாளராக நீங்களும், ஒன்றிணைந்து பணியாற்றினால் எம்மை எதிர் நோக்கியுள்ள எத்தனையோ இன்னல்களை பகலவனைக் கண்ட பனிபோல் அகலச் செய்யலாம்.

குறிப்பாக எந்தப் பிரச்சினை உங்களுக்கு இருந்தாலும் நீங்கள் எங்கிருந்தாலும், எந்நிலையிலிருந்தாலும் சரியான உத்தியோகத்தரை, சரியான சந்தர்ப்பத்தில்சநாடும்போது அவர் உங்களுக்கு உதவ என்றும் பின் நிற்க மாட்டார்.

நீங்கள் வங்கிக்கு விசுவாசமாக நடக்கும்போது வங்கி உங்களை இரட்டிப்புமடங்காக மதித்து விசுவாசமாக நடக்கும். வங்கியிலிருந்து கடன் பெற்ற வாடிக்கையாளர்கள் கடன்களை மீளக்கட்டும் போது அவர்களுக்கும் புதுப்புது வாடிக்கையாளருக்கும் நாம் உதவிசெய்யக்கூடியதாக உள்ளது.

செல்வம் படைத்தோர், படைக்காதோர் நன்மைகள் கருதித்தானே இலங்கைவங்கி நகர்ப்புறங்களிலென்ன கிராமப்புறங்களில் என்னவென்ன தன் கிளைகளைத் திறந்து அரும்பெரும் சேவையாற்றி வருகிறது.

இந்த ஒப்பற்ற உண்மைகளை நன்குணர்ந்து பொன் விழாக் கொண்டாடும் இலங்கை வங்கியுடன் நல் லுணர்வுகளுடன் அனைவரும் ஒத்துழைக்கும்போது அது எமது அனைவருக்கும், எமது நாட்டுக்கும் நன்மைபயக்கும் என்பதில எள்ளளவும் ஐயமில்லை.

வாழ்க இலங்கை வங்கி! வளர்க அதன் புகழ்! வெல்க அதன் சேவை! ★


1939 1989
ලංකා බැංකුව
இலங்கை வங்கி
Bank of Ceylon

நல்வாழ்த்துக்கள்

★ கிளீன் கட் ★
239, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

★ தேசியசேமிப்பு'வங்கி ★
(யாழ் கிளை)
125, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

வி. கே. இராஜரத்தினம்
95, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ் என்டர்பிறைசஸ்
5/6, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சாமுவல் அன் சன்ஸ்
கொம்பனி லிமிட்டெட்
206, 208, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

அல்பிரட் ஸ்ரோர்ஸ்
ஊர்காவற்றுறை.

வசந்தா ஸ்ரோர்ஸ்
59, மெயின் வீதி,
ஊர்காவற்றுறை.

வரையறுக்கப்பட்ட
இலங்கை வர்த்தக வங்கி
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

வி. எஸ். எம்.
மானிப்பாய்.

வி. எஸ். கணபதிப்பிள்ளை
பிறதர்ஸ்
மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை வங்கி ஐம்பதாவது ஆண்டு நிறைவுச் சிறப்பிதழ்

# யாழ்ப்பாணக் குடாநாட்டில் வங்கியியல்துறை வளர்ச்சி

இ. வில்லவராஜா
(மாவட்ட முகாமையாளர், இலங்கை வங்கி வவுனியா - மன்னார்)

இலங்கை வங்கி தனது 50 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இவ்வேளையில் யாழ் குடாநாட்டில் வங்கிகளின் பங்களிப்பு எத்தகையது என்பது பற்றி சிறிது சிந்திப்பது பொருத்தமானதாகும்.

1939 ஆம் ஆண்டு இலங்கை வங்கி ஸ்தாபிக்கப்பட்டதும் முன்பிருந்த தேசிய பொருளாதாரத்தில் சில மாறுதல்கள் ஏற்படத் தொடங்கின. உள்ளூர் வங்கியியல் செயற்பாடுகளில் அதன் சேவைகள் எதிர்பார்த்ததைவிட திறமையாகவும், சிறந்ததாகவும் அமைந்ததால் இலங்கை மக்களின் நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெற்றுத் தனது சேவைகளை விஸ்தரிக்கத் தொடங்கியது. இதன் விளைவு 1945 இல் இவ்வங்கி யாழ் நகரில் ஒரு சிறிய கட்டடத்தில் (இன்றைய பரணி ஹோட்டல்) தனது செயற்பாடுகளைத் தொடங்கியது. யாழ்குடாநாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இது ஒரு அத்திவாரம் இட்டது என்று கூறின் அதில் தவறில்லை.

1945 இலிருந்து 1960 வரையில் இவ்வங்கி உள்ளூர் வங்கியியலில் கூடிய கவனம் செலுத்தி வந்தது.

### தேசிய மயம்

1961 ஆம் ஆண்டு வங்கியியல் துறையில் ஒரு முக்கிய ஆண்டு ஆகும். இவ்வாண்டிலேதான் இலங்கை வங்கி தேசியமயமாக்கப்பட்டு ஒரு தேசிய வங்கியாகச் செயற்படத் தொடங்கியது. இதே ஆண்டில் தான் மக்கள் வங்கியும் அரசினுல் ஸ்தாபிக்கப்பட்டது. இதே கால எல்லையில் ஹட்டன் வங்கியும் மொர்க்கண்டைல் வங்கியாகச் செயற்பட்ட வங்கி பின்பு வர்த்தக வங்கி என்ற பெயரில் தங்களது கிளைகளை யாழ் நகரில் ஆரம்பித்தன.

ஆகவே, 1965க்குப் பிற்பட்ட பகுதியில் இரு தேசிய வங்கிகளும் இரு தனியார் வங்கிகளும் யாழ் குடாநாட்டின் பொருளாதாரத்துறையில் பங்கெடுத்துக் கொண்டன. 1950க்கு முற்பட்ட காலத்தில் யாழ்குடாநாட்டின் வர்த்தகமும் இந்தியாவுடனேயே கொண்டிருந்த காரணத்தினுல் 'ஓரியண்டல் பாங்கிங் கோப்பறேசன்' என்ற ஒரு வங்கிக்கிளை யாழ் வர்த்தகர்களுக்கு சேவை செய்ய இருந்தபோதிலும், அதனுல் தொடர்ந்தும் தனது சேவைகளை ஆற்ற முடியாமல் தனது கதவுகளை மூடிக் கொண்டது, இங்கே நினைவு கூரத்தக்கது.

1960க்குப் பிற்பட்ட காலப் பகுதியில் யாழ் குடா நாட்டின் வர்த்தகமும், வியாபாரமும் மற்றும் தொழில் துறைகளும் விரிவடையத் தொடங்கின. குடா நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் புதிய பட்டினங்கள் உருவாகின; புதிய சந்தைகள் நிர்மாணிக்கப்பட்டன இதனுல் வங்கிச் சேவைகள் மேன்மேலும் கூடுதலாகத் தேவைப்பட்டது. இதன் காரணமாக யாழ் குடா நாட்டின் எல்லாப் பட்டினங்களிலும் வங்கிக் கிளைகள் தங்கள் சேவைகளைச் சந்தைப்படுத்துவதற்காகத் திறக்கப்பட்டன. இதில் இலங்கை வங்கியும், மக்கள் வங்கியும் குறிப்பிடத்தக்க அளவுக்கு முன்னேற்றமடைந்துள்ளன. தனியார் வங்கிகளான வர்த்தக வங்கியும், ஹட்டன் நஷனல் வங்கியும் நகரப் பட்டினங்களில் மட்டும் தங்கள் கிளைகளைத் திறந்து செயல்படுகின்றன.

இந்தக் குடா நாட்டின் பொருளாதாரத்தை கட்டி எழுப்பும் போது அது வர்த்தகமோ, விவசாயமோ, கைத்தொழிலோ அல்லது எந்தத் துறையாக இருந்தாலும், அதன் பயனை அப்பகுதியில் உள்ள மக்கள் பெற வேண்டுமானல் அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தை இலங்கை வங்கி கொண்டிருந்தது. அதற்கு அமைய விவசாயத் தொழிலுக்கும் கைத்தொழிலுக்கும் பாரம்பரிய முறைக்குப் புறம்பான புதிய கடன் திட்டங்களை அறிமுகப்படுத்தியது. இத்திட்டங்களை அமுல்படுத்த யாழ். பிரதேச காரியாலயத்திலும் கிளைகளிலும் நியமிக்கப்பட்டார்கள்.

### கைத்தொழில் வளர்ச்சிக்கு உதவியது

இதன் காரணமாக அனேக கைத்தொழில் ஸ்தாபனங்களும் வங்கியின் நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டன. இந்தக் கைத்தொழில் மறுவளர்ச்சியில் வங்கி தன்னை ஒரு நிதி அளிப்பாளர் என்ற நிலையை விட்டு, அந்த ஸ்தாபனங்களின் ஒரு பங்குத்தாரராக எண்ணி அவற்றுடன் இணைந்து அவற்றின் நடவடிக்கைகளைக் கவனித்து வந்தது. இப்படியான ஒரு நிலையில் இயந்திரங்களையும், மூலப்பொருள்களையும் மற்றும் உபகரணங்களையும் இறக்குமதி செய்வதற்கும், உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களைச் சந்தைப்படுத்துவதற்கும் நிதி உதவி அளிக்க வேண்டியதாயிற்று. இது தவிர இதுவரை காலமும் உள்ளூரில் சந்தைப்படுத்தப்பட்டு வந்த சில பொருள்களை வெளிநாடுகளுக்கு அனுப்பக்கூடிய வாய்ப்பினை இப்பகுதி மக்கள் பெற்றனர். உதாரணமாக கடல் அட்டை, இறுல், கணவாய், எள்ளு, உடைகள் போன்றவற்றை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு உதவ வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார அபிவிருத்தியில் ஏற்றுமதி இறக்குமதி வர்க்கத்துக்கு கூடியளவு ஆதரவு கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. மேலும் இப்பகுதியிலுள்ள இளைய தலைமுறையினரில் பெரும் பகுதியினர் பொருள் தேட வெளிநாடுகளில் வேலை வாய்ப்புக்களைப் பெற்றனர். இதன் விளைவாக அந்நிய நாட்டுப் பணம் இப்பகுதிக்குக் கூடுதலாக வரத்தொடங்கியது. இதன் காரணமாக வெளிநாட்டு வருவாய்கள் இக் குடாநாட்டில் அதிகரிக்கும் பொழுது உள்ளூர் வர்த்தகத்திலே விரிவாக்கம் ஏற்பட்டது. உள்ளூர் வெளியூர் பொருள்களை இறக்குமதி செய்ய வேண்டி இருந்தது.

கொழும்புக்குச் சென்று நாணயக் கடிதங்களையும் நம்பிக்கைக் கடன்களும் பெற வேண்டிய நிலையை மாற்றவும் வெளிநாடுகளில் இருந்து பெறும் பணத்தைக் கொழும்பு வங்கிகளுக்கூடா



கப் பெறுவதிலும், மாற்றுவதிலும் ஏற்படும் தாமதத்தையும், கஷ்டத்தையும் நீக்கவும் இலங்கை வங்கி 70 ஆம் ஆண்டின் மத்திய காலப்பகுதியில் ஒரு சர்வதேசப் பிரிவு ஒன்றை யாழ்நகரில் நிறுவியது. மேலும் கொழும்பு மாநகருக்கு வெளியே முதலில் ஒரே நாளில் நிறுவப்பட்ட சர்வதேசப் பிரிவுகள் இரண்டாகும். அதில் ஒன்று கண்டியிலும் மற்றது யாழ்நகரிலும் ஆகும்.

பல புதிய கைத்தொழில் திட்டங்களைத் தயாரிப்பதற்கும், பரிசீலனை செய்வதற்கும், அவற்றிற்குக் கடன் கொடுப்பதிலும் இலங்கை வங்கி முன்னின்றது. இன்று யாழ். குடா நாட்டில் காணப்படும் பல கைத்தொழில் ஸ்தாபனங்கள் உதாரணமாக அரிசி ஆலைகள், மின் நெசவு ஆலைகள், ஐஸ் உற்பத்தி ஆலைகள், உடை தயாரிக்கும் ஸ்தாபனங்கள், கோழித் தீன் தயாரிக்கும் ஆலைகள், மரவேலை, இயந்திர வேலை இன்னும் பல்வேறு தொழிற்சாலைகள் யாவும் இப்பிரதேசத்தில் பொருளாதார அபிவிருத்திக்கு இலங்கை வங்கி அளித்த பங்கின் சான்றுகளாகும்.


இப்பிரதேசம் பொருளாதாரத்தில் துரித வளர்ச்சி கண்டு முன்னேற்றமடைந்து வந்தகாலம் 1984 ம் ஆண்டுக்கு முற்பட்டதாகும். குறிப்பாக 1983க்குப் பின்னர் நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரத்தினுலும் வன் செயல்களாலும் இப்பிரதேச வர்த்தகமும், தொழிற்சாலைகளும் தொடர்ந்தும் வங்கிகளின் சிறந்த சேவைகளைப் பெறமுடியாத ஒரு நிலை ஏற்பட்டது. இதனுல் பொருளாதார மந்த நிலை ஏற்பட்டது. குறிப்பாகச் சொன்னுல் வங்கியியலுக்குஒவ்வாத ஓர் அரசியல், பொருளாதார. சமூக சூழ்நிலையில் வங்கிச் சேவைகளைச் செய்ய வேண்டியதாயிற்று.

இன்று இலங்கையில் இந்நாட்டு நான்கு வர்த்தக வங்கிகளையும் தவிர 34 வெளிநாட்டு வங்கிகள் கொழும்பிலும் அதனைச் சூழ்ந்துள்ள பிரதேசங்களிலும் சேவைகளை அளிக்கின்றன. இப்படியான போட்டிக்கு மத்தியிலும் தொடர்ந்து இலங்கை வங்கி இந்நாட்டு பணச்சந்தையின் தலைமைத்துவத்தைத் தொடர்ந்துவைத்திருப்பது, அதன்மேல் மக்களுக்கு இருக்கும் அபிமானமும் நம்பிக்கையுமாகும். இக்குடாநாட்டிலும்கூட பணச் சந்தையில் இலங்கை வங்கியே முதன்மை பெற்றதாக இருக்கிறது.

வர்த்தகமும், விவசாயமும், கைத்தொழில் போன்ற சகல துறைகளிலும் பின்தள்ளப்பட்டிருக்கும் யாழ் குடாநாட்டின் பொருளாதாரத்தை இன்றைய காலசட்டத்தில் மீண்டும் கட்டியெழுப்ப வேண்டுமென்பதை இலங்கை வங்கி நன்கு உணர்ந்துள்ளது. இதனைச் செயற்படுத்த அண்மைக் காலங்களில் வங்கிபெரு முயற்சிகள் எடுத்துவருகின்றன.

பல்வேறு காரணங்களினுல் தாக்கம் ஏற்பட்ட கடன் வாடிக்கையாளர்கள் வங்கியுடன்தொடர்ந்தும் தங்களது நீடித்த உறவைத் தொடர்வதற்கும், தாங்கள் பெற்ற கடன்களை திருப்பிக் கட்டுவதற்கும், திரும்பவும் தங்களுடைய வர்த்தக வியாபார கைத்தொழில் நடவடிக்கைகளை கட்டியெழுப்புவதற்கும், அவர்கள் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட கஷ்டங்களை ஆராய்ந்து அவர்கள் பெற்ற கடன்களை மீளாய்வுசெய்து கொடுக்கக்கூடிய சலுகைகளை அளித்து அவர்களுக்கு நிவாரணம் அளிக்கவும் எண்ணம் கொண்டுள்ளது. இத்துறையில் இதுவரை வெற்றியும் கண்டுள்ளது. இதனுல் இப்பகுதி வாடிக்கையாளர்கள் பலர் நன்மை அடைந்திருக்கிறுர்கள். இவ்வாறுன வங்கியினுடைய நல்லெண்ணமும், வங்கி வாடிக்கையாளருக்கிடையேயுள்ள புரிந்துணர்வும் யாழ் குடாநாட்டின் பொருளாதாரத்தில் மீண்டும் ஒரு துரித வளர்ச்சியை ஏற்படுத்த உதவும். ★

1939 1989 50
ලංකා බැංකුව
இலங்கை வங்கி
Bank of Ceylon



இலங்கை வங்கி யாழ்ப்பாண மாவட்ட அலுவலகத்தில் நாளாந்தம் நூற்றுக் கணக்கான வாடிக்கையாளர்கள் திரளுவர். அலுவலக நாள் ஒன்றில் எடுக்கப்பட்ட படத்தையே மேலே காண்கிறீர்கள்.

## அழைப்பு

இலங்கை வங்கியின் பொன்விழாப் பூர்த்தியை முன்விட்டு இன்று, ஆகஸ்ட் முதலாம் திகதி, செவ்வாய்க்கிழமை நல்லூர் முருகன் ஆலயத்தில் விசேட பூசை நடக்கவுள்ளது.

காலை 10. 30 மணிக்கு நடைபெற இருக்கும் இந்த விசேட பூசை நாட்டில் அமைதியும், சமாதானமும் நிலவ வேண்டி நடத்தப்படும்.

பூசையில் கலந்து கொள்ளுமாறு வங்கியின் வாடிக்கையாளர்கள், தற்போதைய ஊழியர்கள், முன்னுள் ஊழியர்கள் மற்றும் ஆதரவாளர்கள் நலன் விரும்பிகளை அன்புடன் அழைக்கின்றேம்.

விநாயகர் ஸ்ரோர்ஸ்
166, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23787

சீமாட்டி
122, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24413

எஸ். பி. எஸ்.
டிரான்ஸ்போர்ட் சேர்விஸ்
27, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.

எம். எஸ். சோமசுந்தரம் அன் சன்ஸ்
199, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

செல்வம்ஸ்
பற்றறி சேல்ஸ் அன் சேர்விசஸ்
443, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

ரி. ஆர். குணசேகரன்
27, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.



இலங்கை வங்கியின்
பொன் விழாப்
பூர்த்தியை முன்னிட்டு
அதன் சேவை
மேன்மேலும் வளர
எமது
இதயம் நிறைந்து கனிந்த
நல்வாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50 இலங்கை வங்கி ஐம்பதாவது ஆண்டு நிறைவுச் சிறப்பிதழ்

# வறுமை ஒழிப்புத் திட்டத்தில்
# இலங்கை வங்கியின் பங்களிப்பு

"தனியொருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்." என்று சொன்னான் புதுமைக் கவி பாரதி அன்று.

'இனி ஒருவனுக்குப் பணமில்லை எனும் கூற்றினை ஒழித்திடுவோம்' என்று சொல்கிறது பார்புகழ்பெற்ற இலங்கை வங்கி இன்று.

"இனியும் உனக்கொரு வறுமையா? இதோ நானிருக்கிறேன் உனக்குக் கைகொடுக்க!" என்ற செய்தியுடன் ஐந்து தசாப்தச் சரித்திரத்தைத் தன்னுள் அடக்கிக்கொண்டு பொன் விழாவைக் கொண்டாட மென்முறுவலுடன் நடைபோடும் நமது வங்கி உண்மையான வறுமையை ஒழிக்க எவ்வகையில் கைகொடுக்கின்றது என்பதை அனைவரும் நிச்சயம் அறிந்துகொள்ளவேண்டும்.

இற்றைக்கு இருபது ஆண்டுகள் முன்வரையில் இலங்கை வங்கி செல்வந்தர்களின் வங்கி என்ற ஒரு மனப்பான்மையே பொதுவாக மக்கள் மத்தியில் நிலவிவந்தது. ஆனால் உண்மை அதுவல்ல. சகலமக்களுக்கும் அதன் சேவைபொதுவானதே — முக்கியமாக வறுமையில் வாடுபவர்களுக்குக் கைகொடுத்து அவர்களை ஒரு நல்ல வாழ்க்கை நிலைக்குத் தூக்கிவிடுவதே அதன் தலையாய பணி என்பதை மக்கள் உணரவேண்டும்.

ஆனாலும் வங்கியின் சில திட்டங்கள் எதிர்பார்த்த பலனை அளிக்காமல்போனதை உங்களில் சிலர் நினைவுகூரக் கூடும். இதய சுத்தியோடும் உள்ளார்ந்த பெருநோக்கோடும் தான் எத்திட்டமும் இலங்கை வங்கியால் அறிமுகப்படுத்தப்படுகின்றது. இருந்தபோதிலும் இத்திட்டங்களைத் தங்கள் நலன்களுக்காகவும், மேம்பாட்டிற்காகவும் பயன்படுத்திக்கொள்பவர்களின் நேர்மையில்தான் திட்டங்களின் வெற்றியோ அல்லது தோல்வியோ தங்கியிருக்கிறது. இந்த உண்மையைச் சகலரும் மனத்தில் கொள்ளல்வேண்டும்.

வறுமை ஒழியவேண்டுமானால் முதலில் பட்டினி ஒழியவேண்டும்; அதற்கு விவசாயம் செழிக்கவேண்டும்; அதன் மூலம் உணவு உற்பத்தி பெருகவேண்டும். இதையே கருத்தாகக் கொண்டு 1972 - 1973 ஆண்டு காலப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது தான் நமது பாரிய விவசாயக் கடன் திட்டம்.

சாதாரணமாக ஒரு கிராமத்து விவசாயி ஒரு நகரப் பகுதி வங்கிக்கு வருகை தருவது அவனைப் பொறுத்தளவில் ஒரு சிரமமான காரியம்; இதைவிட, நகர்ப்புற வங்கிகளின் கவர்ச்சிகரமான கட்டிட அமைப்புக்களும், அங்கு பணியாற்றும் ஊழியர்களினதும், கூடும் வாடிக்கையாளர்களினதும் நடையுடை பாவனைகளும் அந்த விவசாயிக்கு ஒரு பிரமிப்பை ஏற்படுத்துவதோடல்லாமல் வங்கியில் கருமமாற்றச் செல்வதற்கும் ஒரு கூச்சம் இயல்பாகவே, ஏற்படும்; அதாவது ஒரு அந்நியத்தன்மை ஏற்படும்.

ஆனால் அந்த விவசாயியின் கிராமத்திலேயே ஒரு சாதாரணக் கட்டிடத்தில் தன்னோடு அந்நியோன்யமாகப் பழகும் ஊழியர்களுடன் ஒரு வங்கி இருக்குமானால் இப்படியான ஒரு கூச்ச சுபாவம் அவனுக்கு ஏற்படாது. மிகவும் சகஜ பாவனையோடு தன் தேவைகளை அவன் நிறைவேற்றிக் கொள்ளமுடியும் என்பது மட்டுமல்ல, நகர்ப்புறத்துக்குச் சென்று ஒரு நாள் முழுவதும் செலவழிக்கும் கஷ்டமும் நீங்கிவிடும்.

ஒரு ஏழைக் கிராமத்து விவசாயியின் இந்த மனோபாவத்துக்கு மதிப்புக்கொடுத்து இலங்கை வங்கி ஒவ்வொரு கிராமந்தோறும் தன் கிளைகளை விஸ்தரித்தது.

இன்று வறுமையின் அடிமட்டத்துக்கும் தன் உதவிக் கரங்கள் நீளவேண்டும் என்ற நோக்கில் மூன்று அரிய திட்டங்களை தன் பொன்விழா ஆண்டில் அறிமுகப்படுத்தி இருக்கிறது.

### சமூகக்கடன் வழங்குனர் திட்டம்

கடன்தேவைப்படாத மனிதனே இருக்கமுடியாது என்று சொல்லலாம்; ஏதாவது ஒரு தேவைக்கு எப்போதாவது, ஒருமுறையாவது ஒருவருக்குக் கடன் தேவைப்படும்; இதில் சிலர் வங்கியை நாடுவார்கள். ஆனால் வங்கியில் கடன் எடுக்கவரும்போது ஏற்படும் நடைமுறைச் செயற்பாடுகள் சில தாமதங்களை உருவாக்கலாம்; வங்கி கேட்டும் சில ஆவணங்களையும் விவரங்களையும் சிலரால் சமர்ப்பிக்க இயலாமல் போகலாம்; இதன் காரணமாகவே, துரிதகதியில், சொற்பகாலத்துக்கு ஒரு சிறிய தொகையைக் கடனாகப் பெறவிரும்பும் பலர் நகர்ப்புறச் செல்வந்தர்களை நாடி அதிக வட்டிக்குக் கடன்பெறுகிறார்கள். இப்படியான-அதாவது வங்கியை நாடமுடியாத நிலையிலுள்ள மக்களுக்கும் நியாயமான வட்டியில் அவர்கள் தேவைக்கேற்பத் துரிதமாகக்கடன் கிடைக்கவேண்டும் என்ற நோக்கில் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதுதான் இத்தச் சமூகக் கடன் வழங்னர் திட்டம்.

இத்திட்டத்தின் கீழ் வங்கி சில சமூக நலன் விரும்பிகளைத் தெரிவுசெய்து அவர்கள் வங்கிக்கு அளிக்கும் குறிப்பிட்ட சில பிணைகளின் அடிப்படையில் ஒரு குறிக்கப்பட்ட தொகையை அவர்களுக்குக் கடனாக வழங்கும்; இதற்கு வங்கி அவர்களிடம் மாதம் $1\frac{1}{2}$ சதவீத வட்டியை எடுக்கப்பட்ட தொகைக்கு மாத்திரம் அறவிடும். இதை அவர்கள் வங்கியை நாட விரும்பாத கடன் தேவைப்படுவோருக்கு மாதம் $2\frac{1}{2}$ சதவீத வட்டியில் 5000 ரூபா வரையில் கடனாக வழங்கலாம்.

யாழ் மாவட்டத்தில் இத்திட்டத்தைத் துரிதகதியில் நடைமுறைக்குக் கொண்டு வருவதில் நாம் சில தடங்கல்களை எதிர்நோக்கியபோதும் இத்திட்டம் வெற்றியளித்திருக்கின்றது என்பதனை நாம் சமூகக் கடன் வழங்குனர்களை நியமித்த சிற்சில இடங்களில் நடாத்திய ஆய்வுகளின்மூலம் அறியமுடிகின்றது, இத்திட்டத்தை மேன்மேலும் வெற்றி அடையச் செய்வதற்காக பொது நலன் விரும்பும் பெரியோர் சகல மட்டத்திலிருந்தும் முன்வரவேண்டும்.

### 2. சுயதொழில் வேலை வாய்ப்புக்கான கடன் திட்டம்

இந்தக் கடன் திட்டம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

#### முதலாவது "அ":-

வறுமைக் கோட்டின் கீழ் மட்டத்திலுள்ளவர்களுக்கு மட்டும் அனுமதிக்கப்படும் கடன் திட்டம்.

அதாவது, தற்போது அரசாங்க உணவுமுத்திரை பெறுபவர்களும் ஜனசக்தித் திட்டத்தின் கீழ் எதிர்காலத்தில் உதவிபெறுபவர்களும் மட்டுமே பெற்றுக்கொள்ளக் கூடிய கடன்திட்டம்.

இதன் அடிப்படை நோக்கம் என்னவெனில், ஏதாவது ஒரு தொழில் தெரிந்தும் பணமின்மை காரணமாக அத்தொழிலைச் செய்யமுடியாத வறியமக்கள் சுயமாக அத்தொழிலைச் செய்து தம் வாழ்க்கை நிலையை மேன்படுத்திக்கொள்ளவேண்டுமென்பதே. அப்படியான ஒரு சுயதொழிலை ஒருவர் ஆரம்பிக்கும்போது எதிர்காலத்தில் அவர் அரசாங்க உணவு முத்திரைகளை எதிர்பார்க்காமல் கௌரவத்துடன் தன் காலிலேயே நிற்கமுடியும். இது அவருக்கு மட்டுமல்லாமல் பொதுவாகவே நாட்டின் சுபீட்சத்துக்கும் வழிகோலும். முப்பத்து ஆறு மாதங்களில் திருப்பிச் செலுத்தக்கூடிய இக்கடன் ஆண்டுக்குப் பதினாறு (16%) சதவீத வட்டியுடன் திருப்பிச் செலுத்தப்படல் வேண்டும். தொகை ரூ. 500/- இல் இருந்து ரூ. 3000/- வரை குறிப்பிட்ட சுய தொழிலையும் அதற்கான ஆரம்பச் செலவுகளையும் பொறுத்து வேறுபடும் கடனுக்கான பிணையும் பெரிதும் தளர்த்தப்பட்டிருக்கின்றது.

இத்திட்டத்தில் இன்னுமொரு விசேஷ அம்சம் என்னவெனில் அரசாங்கச் சார்பற்ற பொதுநல நோக்குடைய நிறுவனங்களின் பங்களிப்பை வங்கி நாடியுள்ளதாகும். இத்திட்டத்தின் அடிப்படையில் கடன் வழங்கும்போது அக்கடன் உண்மையாக அது தேவைப்படும் ஒருவருக்குத்தான் போய்ச் சேருகின்றதா? அக்கடன் அவருடைய சுயதொழிலை உண்மையாகவே வளர்த்து அவருடைய வறுமையைப் போக்க உதவுகின்றதா? போன்ற கேள்விகளுக்கு வங்கி தனிப்படப் பதிலளித்துத் திருப்தியடைய முடியாததால்தான் இம்மாதிரி நிறுவனங்களின் பங்களிப்பை நாம் நாடியுள்ளோம்.

சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பங்களிப்பை நாடி நாம் பத்திரிகைகளில் விளம்பரம் செய்தபோதும் ஒரு கருத்தரங்கு நடத்திய போதும் பல நிறுவனங்கள் எமக்கு ஒத்துழைப்புத் தர முன்வந்துள்ளன; சமய நிறுவனங்கள், சன்மார்க்கசபைகள், கிராம முன்னேற்றச்சங்கங்கள் என்பன இவற்றுள் சிலவாகும்.

#### இரண்டாவது 'ஆ'

இத்திட்டத்தின் கீழ் உணவு முத்திரை பெறுபவர்கள் மட்டுமல்லாமல் மற்றும் நபர்களும் ஒரு சுயதொழிலை ஆரம்பிக்கவோ அல்லது ஏற்கனவே நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒரு தொழிலை விரிவுபடுத்தவோ கடன் பெற்றுக்கொள்ளலாம். இத்திட்டத்தின் முக்கியமான அம்சங்கள் வருமாறு:-

★ தொழிலையும், அதன் தேவைகளையும் பொறுத்து கடன் தொகை ரூ. 25000/- வரை அதிகரிக்கப்படலாம்.

★ தொழில் உபகரணங்கள் மற்றும் செலவுகள் ரூ.25000/-க்குள் அடங்கியதாக இருக்க வேண்டும்.

★ கடன் பெறுபவர் ஆரம்பச் செலவுகளின் (உபகரணங்கள் உட்பட) 20% பங்களிப்பைச் செய்தல் வேண்டும்.

★ கூட்டுமுயற்சியாகத் தொழில் ஆரம்பப்பதற்காகத் தகைமையுள்ள ஐவர் ஒன்றுசேர்ந்தும் இக்கடனுக்கு விண்ணப்பிக்கலாம்.

★ தேவைப்படும் இடங்களில் முன்பு கூறிய அரசாங்கச் சார்பற்ற நிறுவனங்களின் சான்றிதழ் பெறப்படல் வேண்டும்.

★ திருப்பிச் செலுத்தும் காலம் தொழிலைப் பொறுத்து 60 மாதங்களுக்கு நீடிக்கப்படலாம்.

★ வட்டி வீதம் ஆண்டொன்றுக்கு 19% சதவீதமாகும்.

★ எந்த நிறுவனத்திடமிருந்தும் முன்பு கடன் எடுத்து அதை மீளச் செலுத்தத் தவறியவராக இருத்தல் கூடாது.

★ கடனுக்கு விண்ணப்பிப்பவர் ஏற்கனவே குறிப்பிட்டபடி குறிக்கப்பட்ட தொழிலில் திறமையுள்ளவராகவும், தொழில்மூலம் வரும் வருமானத்தில் கடனை மீளச் செலுத்தத் தகுதியுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

★ வங்கியில் ஒரு சேமிப்புக் கணக்கொன்றை வைத்திருப்பவராயும் தேசிய அடையாள அட்டை வைத்திருப்பவராயும் இருத்தல் வேண்டும்.

தகைமையுள்ள எவருமே நேர்மையாகவங்கியை அணுகினால் நிச்சயம் அவர்களுக்கு உதவ இலங்கை வங்கி என்றும் காத்திருக்கும். இதை மனதில் இருத்தி இதயசுத்தியோடு இலங்கை வங்கியை நாடுபவர்களை நாம் வரவேற்கின்றோம்; அவர்களது வறுமையை விரட்டியடிக்கக் காத்திருக்கின்றோம்; ஐம்பத்தியோராவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் இவ்வேளையில் நாட்டில் சுபீட்சத்தை ஏற்படுத்தக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கின்றோம். ★

க. பாலசுப்பிரமணியம்
(உதவி முகாமையாளர் இலங்கை வங்கி யாழ் மாவட்டக் காரியாலயம்)

1939 1989 50
ලංකා බැංකුව
இலங்கை வங்கி
Bank of Ceylon

இலங்கை வங்கியின்
பொன் விழாப்
பூர்த்தியை முன்னிட்டு
அதன் சேவை மேன்மேலும் வளர
எமது இதயம் நிறைந்து கனிந்த
நல்வாழ்த்துக்கள்

சின்னத்தம்பி அன் கோ
14, கண்டி வீதி.
சாவகச்சேரி.

ஹோட்டல் ஜெனன்த் ரெலி கோணர்
(Hotel Jananth Tele Corner)
NOMOS GAR STUDIO
கண்டி ரோட் சாவகச்சேரி.

ராஜ்வெல்ஸ் (Rajvels)
மோடேன் மார்க்கற்,
சாவகச்சேரி..

ஜெயா போட்டோ
(Jeya Photo)
கண்டி ரோட்,
சாவகச்சேரி.

★ சிவா றேடிங் ★
(Siva Trading)
டச்சு ரோட், [Dutch Road]
சாவகச்சேரி.

பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
கண்டி ரோட்,
சாவகச்சேரி.

★ ராஜேஸ் ஸ்ரோர்ஸ் ★
[Rajes Stores]
கண்டி ரோட், கொடிகாமம்.

இலங்கை வங்கியின்
பொன் விழாப்
பூர்த்தியை முன்னிட்டு
அதன் சேவை மேன்மேலும் வளர
எமது இதயம் நிறைந்து கனிந்த
நல்வாழ்த்துக்கள்

★ நிருத் எஜென்சி ★
கண்டி வீதி,
சாவகச்சேரி.

★ பிரோசா ரேடர் ★
31, கண்டி வீதி,
சாவகச்சேரி.

சன்றைஸ் ரேடர்ஸ்
6, கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

M. M. சுல்தான் அப்துல்காதர் அன் பிறதர்ஸ்
கண்டி ரோட்,
சாவகச்சேரி.

முருகன் றைஸ் மில்
360, கண்டி வீதி,
சாவகச்சேரி.

ஸ்ரீ விக்னேஸ்வரா ஸ்ரோர்ஸ்
கண்டி வீதி,
சாவகச்சேரி.

ஏ. கே. எஸ்
மோட்டோர் ஸ்ரோர்ஸ்
கண்டி வீதி, சாவகச்சேரி.

We never know where Business will take you!
But we are sure that
"LANKA CEMENT" Will take you to build a
"SWEET HOME"
HEAD OFFICE:
M/s LANKA CEMENT LTD.,
130, W. A. D. Ramanayake Mawatha, COLOMBO - 2

Lanka cement

தரத்திற்கும் உறுதிக்கும் "லங்கா சிமெண்ட்"
நாம் சொல்லுகின்றோம் பாவனையாளர்கள் உறுதிப்படுத்துகிறார்கள்
லங்கா சீமெண்ட் லிமிட்டெட்
கீரிமலை வீதி, :: காங்கேசன்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org